பெப். 07 - பெப். 13, 2010 Feb 07 - Feb 13, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

## காற்றோடு போகும் வார்த்தைகள்





## முள்ளி வாய்க்காலும் முள்ளுக் கம்பி வேலியும்



## கடவுளிடம் முறையிடுதல்



## முகமூடிகளைக் கழற்றுங்கள்

# தமிழ்த் தேசியம் மீண்டும் புத்துயிர் பெறுகின்றது

ஜனாதிபதித் தேர்தல் திருவிழா ஓய முன்னரே நாடாளுமன்றத்தேர்தல் திருவிழா ஆரம்பமாகப் போகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்று, ஜனாதிபதி யாக மீண்டும் பதவியேற்றுள்ளார்.



ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன் வைப்பேன் என்று தேர்தலுக்கு முன்னர் அவர் கூறிவந்தார். இந்தியாவின் என்.டி.டி.வி தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள செய்தியில் புதுவிதமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

* இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அனைத்துப் பிரஜைகளினதும் பெரும் பான்மை அங்கீகாரம் அவசியமானது.

* நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் தமிழ்த் தலைமைகளுடன் கலந்துரையாடி இனப் பிரச்சி னைக்கான தீர்வுத்திட்டத்தை முன் வைப்பேன்.

மேற்கண்ட இரு விடயங்களையும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றம் ஒன்று வேண்டும். தமிழர்கள் அடுத்த நகர்வை முன்னெ டுக்க இடைவெளி வேண்டும் எனத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரணி வேட்பாளரான சரத்பொன்சேகாவை ஆதரிக்குமாறு கேட்டது. மக்களும் அதை ஏற்று வாக் களித்தனர்

2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மஹிந்த



ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர் தமிழ்த் தேசியம் கேள்விக் குறியான நிலையில் இருந்தது. படிப் படியாகத் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காகப் பலரை தமது அரசாங்கத்திற்குள் உள்வாங்கிச் சுச்சிதமாக அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று தமிழ் மக்கள் வாக்களித் துள்ளதை அவதானிக்கும் போது மீண்டும் தமிழ்த் தேசியம் எழுச்சி பெற்றிருக்கின்றது என்றே கருதவேண்டியுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்றது.

அந்தத் தேர்தலில் முதல் முறை யாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களம் இறங்கியது.

தமிழ் பிரமுகர்கள் பலர் ஒன்றுகூடி எடுத்த முயற்சியின் பயனாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர். எல். எவ். (சுரேஸ்) அணி, ரெலோ ஆகிய கட்சிகள் உள்ளடக்கியதாக உருவான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது.

இருபது ஆசனங்களைக் கைப்பற்றிய கூட்டமைப்புக்கு இரு 'போனஸ்' ஆசனங்களுடன் 22 ஆசனங்கள் நாடாளுமன்றத் தில் கிடைத்தது. தமிழ்த் தேசியம் எழுச்சி பெற்று நின்றது.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம் பவம் அதிகரிக்க, நாட்டை விட்டுப் பாதுகாப்புத் தேட வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

தொடர்ந்து கூட்டமைப்பினருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளுக்கே செல்ல முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவிலும் மேற்கு நாடுகளிலும் பல உறுப்பினர்கள் அடைக்கலம் கோரினர். சிலர் மக்களுடன் தொடர்புகளில் இருந்தனர்.

யுத்தம் முடிந்து தமிழ் மக்களின் அடுத்த தலைமை யார் என்ற கேள்வி எழுந்த நிலையில்-

ஜனாதிபதித் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக வழங்கியுள்ள தீர்ப்பு, தமது தலைமை கூட்டமைப்புத்தான் என்பதேயாகும் என்று தமிழ்த் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை அங்கீகரித்து தமிழ் மக்கள் எழுச்சியுடன் வாக்களித்தனர். மீண்டும் தமிழ்த் தேசியம் உயிர்பெற்று விட்டது; எழுச்சி பெற்று விட்டது என்று கூற முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததுடன் உங்களுடன் மட்டும் பேசித் தீர்வு ஒன்றைக் காண்போம் என

அப்பேச்சுக்களில் ஜனாதிபதி கூட்டமைப்பினருக்கு உறுதிமொழி வழங்கினார்.

இன்று தமிழ் கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று மக்கள் தமிழ் தேசியத்துக்கு வழங்கியுள்ள ஆதரவு, தமிழ் மக்களின் தலைமையான கூட்டமைப்புடன் பேச்சு நடத்தித் தீர்வுகாண வேண்டியதன் கட்டாயத்தை வலியுறுத்தி நிற்கின்றது.

நடக்கவிருக்கும் தேர்தலில் ஒட்டு மொத்த மக்களும் தமிழ் தேசியத்தை மீண்டும் எழுச்சி பெறச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று தமிழ் தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நடக்கப்போகும் நாடாளுமன்றத் தேர்தல், தமிழ்த் தேசியத்தை எழுச்சி பெறச் செய்து தமிழ் மக்களின் தலைமையை நிலை நிறுத்தப் போகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுடனும் பேச்சுக் களை ஆரம்பிக்க போகின்றது.

தமிழ் பேசும் மக்கள் முஸ்லிம் மக்கள் ஆகியோர் ஒன்றுபட்ட நிலையில் தேர்தலைச் சந்திக்கப் போகிறார்கள்.

இந்தத் தேர்தல் தரப்போகும் முடிவுதான் பலமான நிலையில் இருந்து தீர்வை பெறுவதற்கு தமிழ் தரப்புக்கு வழியமைத்துக் கொடுக்கப்போகிறது.

யாழவன்

# இந்தியாவின் கரிசனை இலங்கையினால் தீவிரம்

இந்தியாவின் 61ஆவது குடியரசு தினத்தை ஒட்டி நடன நிகழ்ச்சியை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நடத்தியுள்ளது.

இந்தியா தனது துணைத் தூதரக அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. அவ்வாறு அலுவலகத்தை இந்தியா யாழ்ப்பாணத்தில் திறக்க முடிவு



செய்தால் இலங்கை ஆட்சேபிக்காது என்று அரசுத் தரப்புக் கூறியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண எத்தனிக்கும் இந்தி யாவின் முயற்சிக்குப் பக்கபலமாக வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்படப் போகும் செயற்பாடுகள் அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தியாவின் இந்த முயற்சிகளின் ஓர் அங்கமாகப் புதிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றுள்ள சிவ்சங்கர் மேனன் தமிழக முதல்வர் மு.கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பதவியேற்ற பின்னர் முதல்முறையாக மரியாதை நிமித்தமாக இந்தச் சந்திப்பு இடம் பெற்ற போதும்-

அந்த பேச்சுக்களில் இலங்கை விவகாரமே முக்கிய



இடம் பிடித்துள்ளது.

இடம்பெயர்ந்த அகதிகளின் மீள் குடியேற்றம், மற்றும் புனர்வாழ்வு, சகலதரப்பினரையும் திருப்திப் படுத்தக்கூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்கு வழிசெய்யும் இனப்பிரச் சினைத் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஆகியன குறித்து இந்தப் பேச்சில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதுநிற்க-

ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்கவும், இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வை துரிதப் படுத்தவும், இந்தியாவால் பல்வேறு முனைப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் டில்லியில் இந்திய அதிகாரிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நடத்திய பேச்சுக்களில் இந்த முனைப்புக்கள் தொடர்பாக கோடி காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்க்கும் வகையிலான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க இந்தியா தனது பங்களிப்பை வழங்க முடிவு செய்துள்ளது.

இதற்கு முன்னோடியாக பல்வேறு துறைகளில் இந்தியா தனது உதவிகளை வடக்குக் கிழக்குக்கு வழங்க முன்வந்துள்ளது.

கல்வித்துறையில் புலமைப் பரிசில்கள், கலாசாரத் துறையில் நிகழ்ச்சிகள், புனர்வாழ்வுப் பணிகள் என இந்தியா வடக்கு-கிழக்கில் கால் பதிக்கவிருகிறது.

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, சகல தரப்பினரையும் திருப்திப்படுத்தக் கூடிய அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழி செய்யும் அரசியல் ஏற்பாடு ஆகிய தொடர்பில் இந்தியா-இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது என பேச்சின் பின்னர் சிவ்சங்கர் மேனன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்முயற்சி வெற்றி பெற்று, தீர்வு ஒன்று முன்வைக்கப் பட்டு, அது நடைமுறைக்கு வரும் போது நாடு அமைதியடையும் ; நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும்.

*****

# காற்றோடு போகும் வார்த்தைகள்

**-பிரமன்**

"குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு" என்ற பழமொழியை இப்போது "அரசியல் வாதிகளின் பேச்சு தேர்தல் முடிந்தால் போச்சு" என்று கட்டாயம் மாற்றத்தான் வேண்டும். தேர்தலுக்கு முன்னர் மக்கள் முன்னால் கட்டப்பட்ட வாக்குறுதி மாளிகைகள் தேர்தல் முடிவுகள் வெளிவந்த மறுநொடியே மாயமாக மறைவது பொதுமக்களுக்கு- அதுவும் தமிழ் மக்களுக்கு- புதியதொரு விடயமல்ல. காலங்காலமாக அவர்கள் வாக்குறுதிகளை நம்பி ஏமாறப் பழகிவிட்டார்கள். அரசியல் வாதிகளும் மக்களுடைய தலையில் போதும் போதும் என்கிற அளவுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கி மிளகாய் அரைக்கப் பழகிவிட்டார்கள். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்த விதி அச்சொட்டாகப் பின்பற்றப்பட்டிருப்பதை தேர்தலின் பின்னான நாள்கள் உறுதிசெய்து வருகின்றன.

தமிழ் மக்களிடையே இப்போது உள்ள எரியும் பிரச்சினை நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் மீள் குடியமர்வு தான். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய சமயத்தில் ஜனாதிபதியும், பசில் ராஜபக்ஷவும், ரிஷாத் பதியூனும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையில் உள்ள சகல நலன்புரி நிலையங்களும் மூடப்பட்டு அங்கு தடுத்து வைக்கபட்டுள்ள அனைவரும் அவரவர் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என்று கீறல் விழுந்த 'கிறாமபோன்' தட்டுப்போல திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். திறந்த வாயினை மூட மறந்தவர்களான மக்களும் இவர்கள் சொல்வதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். ஆயினும் எதுவுமே நிகழவில்லை. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் எப்போது மீண்டும் பதவியேற்கலாம்? அதனால் முன்னைய ஜனாதிபதிக் காலத்தின் எஞ்சிய நாள்கள் பறி போய் விடுமா? அல்லது இன்னும் எட்டு வருடங்கள் ஆட்சிக் கட்டிலை அலங்கரிக்க முடியுமா? என்று தான் ஜனாதிபதியும் அவரைச் சார்ந்துள்ளவர்களும் தம் சிந்தனைக் குதிரைகளைத் தட்டிவிட்டிருக்கிறார்களே தவிர, இன்னமும் திறந்த வெளிச் சிறைவாழ்வுக்குள் சிக்குண்டிருக்கும் அப்பாவி மக்களை ஈடேற்றுவது பற்றி எந்தவித அக்கறையும் எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. மாறாக ஜனவரி 31க்குள் மக்களை மீளக்குடியமர்த்த முடியாமைக்குரிய நொண்டிச் சாட்டுகளையும் கூறிவருகின்றனர். மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாத்பதியூன் மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்படும் என்ற பழைய பல்லவியை பழைய சுருதியோடே பாடத்தொடங்கியிருக்கிறார். எப்படியாவது இந்த மாதத்துக்குள் தம் சொந்த இடத்திற்கு மீண்டுவிடலாம், இத்தனை நாளும் தொலைந்து போன வாழ்வின் சந்தோஷத்தை மீட்டெடுக்கலாம் என்ற கனவில் மிதந்துகொண்டிருந்த நலன்புரி நிலைய மக்களுக்கு ரிஷாத்பதியூனின் இந்த அறிவிப்பு பேரிடியாய் வீழ்ந்திருக்கிறது. ஏறக்குறைய வன்னிப் பகுதியை முற்றுமுழுதாக அரசாங்கம் கைப்பற்றியதில் இருந்து மிதிவெடி அகற்றிய பின்னரே மீள் குடியமர்வு என்ற பல்லவியே தொடர்ந்தும் பாடப்பட்டு வந்தது. கொஞ்ச நாள்களாக- ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர்- காணாமல் போயிருந்த இந்த நொண்டிச் சாட்டென்ற வேதாளம், தேர்தல் முடிந்த கையோடு மீளவும் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது. அரசின் இத்தகைய அறிவிப்பு தாம் மீளக்குடியமர்த்தப்படுவோம் என்ற நம்பிக்கையை மக்களிடத்தே இல்லாதாக்கியிருக்கிறது.

இதைவிட இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமொன்றை ஆட்சிக்கு வந்தவுடனேயே அமுல் படுத்துவேன் என்று தேர்தல் பிரசாரங்களின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜப்க்ஷ தெரிவித்து வந்தார். ஆனால் இப்போது இந்த வாக்குறுதியையும் காற்றில் பறக்கவிடுவதற்கு அவர் தயாராவது போன்ற கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். இந்தியத் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் பெரும்பான்மை மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற தீர்வுத் திட்டமொன்றே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைக்கப்படவுள்ளது. அதுவும் உடனடியாகச் சாத்தியமில்லை. நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரே அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்ற சாரப்பட கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது முற்றுமுழுதாக பெரும்பான்மை இன மக்களின் அமோகமான வாக்குகளினாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்ட முடிந்தது. சிறுபான்மையினரின் பிரதேசங்களிலேயே அவர் தோல்வியைச் சந்திக்க வேண்டியிருந்தது. எனவே இப்போது அவருக்கு சிறுபான்மையினரை வி[illegible]ம் தன்னை ஆட்சிக் கட்டிலில் அமரவைத்த பெரும்பான்மையினரின் அபிலாஷைகளும், அங்கீகாரமுமே முக்கியமானவையாகப்படுகின்றன. இதனால் தான் பெரும்பான்மையினரின் இணக்கத்தைப் பெற்ற ஒரு தீர்வுத் திட்டத்தை அவர் முன்வைக்க விளைகின்றார். குரங்கு அப்பத்தைப் பிய்த்துப் பகிர்ந்த கதையாகவே இது முடியப் போகின்றது. எப்போதுமே பௌத்த பேரினவாதத்திற்குள் மூழ்கியிருக்கின்ற பெரும்பான்மையினத்தவர்கள் சிறுபான்மையினருக்கு உரிமைகளை அள்ளிக்கொடுத்துவிட மாட்டார்கள். கருத்துக் கணிப்புகளுக்கு மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டுவதற்கு சிங்கள மக்கள் துணை புரிந்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொன்சேகாவை ஆதரித்தமையும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகின்றது. ஆக மொத்தத்தில் ஒரு தமிழ்க் கட்சி ஆதரிப்பதென்பதற்காக 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தவர் என்று சில மாதங்களுக்கு முன்னர் வரை தலையில் தூக்கி வைத்து தாம் கொண்டாடிய சரத்பொன்சேகாவையே அரசியல் அனாதையாக்கி விட்ட பெரும்பான்மையின மக்கள் எவ்விதம் தமிழர்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கான திட்டமொன்றை ஆதரிப்பார்கள்? எனவே இவ்வாறு பெரும்பான்மையின மக்களின் இணக்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தேவை என்று கூறியே காலத்தை ஓட்டிவிடப்பார்க்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

மிக விரைவில் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலும் நெருங்கி வருவதால், தமிழர்களுக்கான உரிமைகளை மறுத்துப் பேசவோ அல்லது உடனடியாக வழங்கவோ ஜனாதிபதியால் முடியாமலேயே இருக்கிறது. ஒரு வேளை இனப்பிரச்சினைக்கான தீர்வு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டால் அதன் மூலம் பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளை மஹிந்த ராஜபக்ஷ கணிசமான அளவில் இழக்கக் கூடும். அத்தோடு நாட்டைப் பிரித்துவிட்டார் என்ற குற்றச்சாட்டை மஹிந்த அரசின் மீது எதிரணியினர் சுமத்துவதற்கும் இது வாய்ப்பாகி விடும். இவற்றையெல்லாம் நன்கு தெரிந்து கொண்ட பின்னரும் நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் என்று மல்லுக்கட்டிக் கொண்டு விடாப்பிடியாக தோல்வியெனும் அதல பாதாளத்தில் வீழ்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ தயாராயிருக்கப் போவதில்லை.

அத்தோடு தமிழர்களுக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப் போவதில்லை என்று அறிவித்தால் அல்லது அது பற்றி அலட்டிக்கொள்ளாதிருந்தால் இப்போது கிடைத்ததைவிடவும் படுமோசமான தோல்வியை தமிழர் பிரதேசங்களில் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தலிலும் சந்திக்க வேண்டியிருக்கும். எப்போதுமே சிறுபான்மையினரால் புறக்கணிக்கப்பட்டவர் என்ற முத்திரை இதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு குத்தப்படும் நிலையும் உருவாகும். இது சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு பல அழுத்தங்களை உருவாக்குவதோடு, சில சலுகைகளையும் இல்லாதாக்கி விடக்கூடும். எனவே சிறுபான்மையினரின் வாக்குகளையும் கணிசமான அளவில் கவர்ந்து விட வேண்டிய கட்டாயத்தில் மஹிந்த ராஜபக்ஷ உள்ளார். எனவே பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் விலாங்கு மீன் யுக்தியைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அதை அவர் சமாளிக்கலாம். ஆனால் மக்கள் தங்களுடைய பிரச்சினைகளை தாமே எப்படிச் சமாளிக்க முடியும்? பெரும்பான்மையினரின் வாக்கு வங்கியை இழக்காத அதே நேரம் தமிழர்களுக்கான ஓரளவு உரிமைகளையேனும் வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து வெறும் நீர்மேல் எழுத்துகள் போல 'இலங்கைப் பாணியிலான தீர்வுத் திட்டம்' என்ற வாய்ச்சவாடல் ஒரு போதுமே அவருக்கு பலமாக அமையப் போவதில்லை. எனவே மக்களின் பிரச்சினைகளை, முள்ளும் குத்தாமல் சேலையும் கிழியாமல் என்பது போல் மிக அவதானமாகத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளை ஜனாதிபதி கண்டறிய வேண்டும். அதுவே அவரது ஆட்சியின் ஆதார சக்தியைத் தீர்மானிப்பதாக அமையும்.

***



பசில் ராஜபக்ஷ



ரிஷாத் பதியூன்



# சுடர் ஒளி

பெப். 07 - பெப். 13, 2010



85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com


## தீர்வுக்கு வழி இல்லை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளும் தோல்விகண்டு விட்டன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், மஹிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், தேர்தல் முடிந்த பிறகு பேசித் தீர்வு காண்போம் என்றார். தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு எந்த விதமான உறுதி மொழியையும் அவர் வழங்கவில்லை.

அதேபோன்று இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவும் வாய் திறக்கவில்லை.

தற்பொழுது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்துவிட்டது. மஹிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டி உள்ளார். நாடாளுமன்றத் தேர்தல் குறித்த அறிவிப்பும் விரைவில் வெளிவர இருக்கிறது.

இத்தகைய நிலையில் இந்தியாவின் என்.டி.டி.வி. தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியில், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அனைத்துப் பிரஜைகளினதும் பெரும்பான்மை அங்கீகாரம் தேவை என்று தெரிவித்துள்ளார். அதாவது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்த நாட்டு மக்களின் பெரும்பான்மையானோரின் அங்கீகாரம் தேவை என்கிறார் அவர்.

இந்தப் பெரும்பான்மையானோரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இரு வழிகளே உள்ளன. ஒன்று ஜனாதிபதித் தேர்தலில் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்து பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெறமுடியும். அதை ஜனாதிபதியோ அல்லது எதிரணி பொது வேட்பாளரோ செய்யத் தவறிவிட்டனர். தமிழ் மக்களுக்கான சலுகைகளை அறிவித்தால் சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காது போகலாம் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

நாட்டு மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவை ஒரு தீர்வுத் திட்டத்துக்கு பெறுவதற்கு மற்றும் ஒரு வழி இருக்கிறது. அதுதான் சர்வகட்சி மாநாடு. சகல கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்துக்கு வருவது. இதுவும் சாத்தியமானது அல்ல. ஜனாதிபதி ராஜபக்ஷவினால் ஏற்படுத்தப்பட்ட சர்வகட்சி மாநாடு நூறுக்கு மேற்பட்ட தடவைகள் கூடிக் கலைந்தும் தனது தீர்மானத்தை வெளியிட முடியாத நிலையில் இருந்து வருகிறது. ஐ.தே.க., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற பிரதான கட்சிகளும் அதில் கலந்துகொள்ளவில்லை.

கடந்த காலங்களில் செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம், 2002 ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை தோல்வி அடைந்ததுக்குப் பிரதான காரணம், ஆட்சியில் இருக்கும் அரசுகள் கொண்டுவரும் தீர்வுத் திட்டங்களை எதிர்க்கட்சிகள் அரசியல் ஆதாய நோக்கத்துடன் எதிர்த்ததே ஆகும். இப்படியான ஒரு நிலைமையை மனதில் கொண்டே ஜீ.ஜீ.பொன்னம்பலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வட்டமேஜை மாநாடு என்று ஆரம்பத்தில் யோசனை தெரிவித்திருந்தார்.

அந்த வட்டமேஜை மாநாட்டின் மறு ரூபம்தான் சர்வகட்சி மாநாடு.

தற்பொழுது எல்லா ஒப்பந்தங்களும் தோல்வி அடைந்து சர்வகட்சி மாநாடும் தோல்வி அடைந்த நிலையில் ஜனாதிபதி ராஜபக்ஷ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாட்டு மக்களில் பெரும்பான்மையினரின் அங்கீகாரம் தேவை என்று கூறுவது அர்த்தமற்ற ஓர் ,ஏமாற்று வார்த்தை.

தமிழ் மக்களின் பிரச்சினையை இந்த அரசு ஒருபோதும் தீர்க்கப்போவதில்லை. ✱

# இனவாதத்துக்கு வெற்றி !

-ரவிக்குமார் -

• இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. அந்நாட்டின் தலைவிதியை இனவாதம்தான் தீர்மானிக்கிறது என்பது மீண்டும் தேர்தல் முடிவுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ராஜபக்ஷ மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகாவைவிட பதினேழு சதவிகிதம் கூடுதலான வாக்குகளை அவர் பெற்றிருக்கிறார். இது சிங்கள மக்கள் பெருமளவில் ராஜபக்ஷவைத்தான் ஆதரிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

ராஜபக்ஷ முறைகேடான வழிகளைக்



கையாண்டுதான் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று கூறப்பட்டாலும், அதை முழுமையாக ஏற்க முடியவில்லை. ஏனென்றால், அங்கு சிங்களப் பேரினவாதம் கொடிகட்டிப் பறக்கிறது. அதன் வெளிப்பாடாகவே சிங்கள மக்களின் ஆதரவு ராஜபக்ஷவுக்கு கிடைத்துள்ளது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு தமிழர்கள், முஸ்லிம்கள் உள்ளிட்ட பல்வேறு சிறுபான்மையின மக்களின் ஆதரவு இருந்தபோதிலும் சிங்கள மக்களுடைய ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை. ஈழத்தில் நடந்து முடிந்த இனப்படுகொலையை தலைமையேற்று நடத்தியவர்தான் பொன்சேகா என்றபோதிலும், அவர் தம்மை நடுநிலையாளனாக காட்டிக் கொள்ள முயற்சித்ததன் காரணமாக சிங்கள மக்களின் ஆதரவை இழந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். சிங்களவர்கள் மிதவாதத் தலைமையை விரும்பவில்லை. தீவிரமான சிங்கள இனவெறித் தலைமையையே அவர்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் இவ்வளவு பெரிய வெற்றியை ராஜபக்ஷவுக்கு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

சிங்கள இனவாதம் இந்த அளவுக்கு தலைவிரித்தாட தமிழ்ப் போராளிகளும் ஒரு விதத்தில் காரணமாக அமைந்துவிட்டார்கள் என்பதை மறுக்க முடியாது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்டனர். அப்போது மிதவாதியான ரணிலுக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிப்பதாக இருந்தனர். ஆனால், அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களுக்குக் கூறியதன் காரணமாக ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவாக விழ வேண்டிய தமிழர்களின் வாக்குகள் விழாமல் போய்விட்டன. அதனால்தான், ஒற்றை ஆட்சி என்ற முழக்கத்தை வெளிப்படையாகவே முன்வைத்து இனவாத அரசியலை தூக்கிப் பிடித்திருந்த ராஜபக்ஷ வெற்றி பெறும் நிலை உருவானது. தமிழ்ப் போராளிகள் தமக்கு பாதகமான சூழலைத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பது மறுக்க முடியாத துயர நிகழ்வாகும். அப்போது எழுச்சி பெற்ற சிங்கள இனவெறி தொடர்ந்து ஆதிக்க நிலையிலேயே இருந்து வருகிறது.

ராஜபக்ஷவும், பொன்சேகாவும் களத்தில் நின்றபோது இந்தியா யாரை ஆதரிக்கப் போகிறது, அமெரிக்கா யாரை ஆதரிக்கப் போகிறது என்றெல்லாம் அரசியல் களத்தில் கேள்விகள் எழுந்தன. ராஜபக்ஷ எப்போதும் இந்தியாவின் அன்புக்குரியவராகவே இருந்து வருகிறார். அவ்வப்போது அவர் சீனாவோடு நெருக்கமாக இருப்பதுபோல் காட்டிக்கொள்வதெல்லாம் இந்தியாவிடமிருந்து கூடுதலாக அனுகூலங்களைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான். ராஜபக்ஷ வெற்றி பெற்றதும் உடனடியாக இந்தியா அவருக்கு வாழ்த்து தெரிவித்ததில் இருந்தே ராஜபக்ஷவை இந்திய ஆட்சியாளர்கள் எப்படி நெருக்கமாக உணர்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ராஜபக்ஷ மீது அமெரிக்க அரசு கோபமாக இருக்கிறது என்று ஒரு செய்தி முன்பு பரப்பப்பட்டது. அது ஓரளவு உண்மைதான். போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில் அமெரிக்கா முன்வைத்த ஆலோசனைகள் எதையும் ராஜபக்ஷ அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதுமட்டுமின்றி, இலங்கையில் நடைபெற்ற இன அழித்தொழிப்புக்கு தமது அரசு உடந்தையாக இருந்தது என்ற அவப்பெயரை வாங்கிக் கொள்ள அமெரிக்க ஆட்சியாளர்கள் விரும்பவுமில்லை. இத்தகைய காரணங்கள் இருந்தபோதிலும், தொடர்ந்து ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு உள்ளது. இலங்கையில் ராஜபக்ஷ பெற்றுள்ள செல்வாக்கு நிரூபணமாகி இருப்பது முதல் காரணம். இலங்கை தொடர்பான எந்தவொரு முடிவை எடுப்பதற்கு முன்பும் இந்தியா என்ன நினைக்கிறது என்பதை அமெரிக்கா கவனத்தில் கொண்டிருக்கிறது. இது இரண்டாவது காரணம். இந்த காரணங்களால் இப்போது ராஜபக்ஷவை அமெரிக்கா ஆதரிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் வாக்குகள் பதிவாகி இருக்கும் விதத்தை ஆய்வு செய்து பார்க்கும் போது, இலங்கையின் அரசியல் சூழல் எப்படி இருக்கிறது என்பதை நாம் யூகிக்க முடிகிறது. சரத் பொன்சேகாவுக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்த ஆறு மாவட்டங்களில் ஐந்து மாவட்டங்கள் தமிழர்கள் அதிகமாக வாழும் மாவட்டங்களாகும். யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட தமிழர்களின் பாரம்பரியப் பகுதிகளாகக் கருதப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களில்தான் பொன்சேகா அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கின்றார். பாரம்பரியத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டுமின்றி மலையகத் தமிழர்கள் பெருமளவில் வாழும் பகுதிகளிலும்கூட பொன்சேகாவுக்குத்தான் அதிக வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இது தமிழர்களின் ஆதரவு பொன்சேகாவுக்கு இருந்தது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. சரத் பொன்சேகா தலைமையில்தான் இலங்கை இராணுவம் ஈழத் தமிழர்களுக்கு எதிரான படுகொலையை அரங்கேற்றியது என்றபோதிலும், தமிழ் மக்கள் ஏன் அவரை ஏற்றுக் கொண்டார்கள் என்பது முக்கியமான கேள்வியாகும். பொன்சேகாவுக்கும், ராஜபக்ஷவுக்கும் இடையில் கருத்து ரீதியான வேறுபாடுகள் எதுவும் கிடையாது. தான் தலைமை வகித்து நடத்திய யுத்தத்தின் அரசியல் பலனை தானே அனுபவிக்க வேண்டும் என்று பொன்சேகா விரும்பினார். ஆனால், அதற்கு ராஜபக்ஷ உடன்படவில்லை. அதுவே அவர்களுக்கிடையிலான முரண்பாடாக வெளிப்பட்டது.

இனப்படுகொலையின் ரத்தக்கறை படிந்த இரண்டு நபர்களுக்கு இடையிலான போட்டியாகத்தான் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் இருந்தது. இந்தத் தேர்தலில் தமிழர்கள் என்ன முடிவெடுப்பது என்ற இக்கட்டான சூழலுக்குத் தள்ளப்பட்டார்கள். இந்த இரண்டு பேருக்கும் வாக்களிக்காதீர்கள் என்று சிலர் அங்கே பிரசாரம் செய்தது உண்மை. அவர்களும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாக நின்றார்கள். தமிழர் தரப்பிலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இந்த முழக்கத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டார். அது போலவே இடதுசாரி கட்சி ஒன்றைச் சேர்ந்த சிங்களவரான விக்ரமபாகு கருணாரட்ணவும் தேர்தலில் போட்டியிட்டார். அவர்கள் இருவருமே ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா வுக்கு எதிராகத்தான் பிரசாரம் செய்தார் கள். ஆனால், அவர்களால் தேர்தலில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. தமிழர் பகுதிகளில் சிவாஜிலிங்கத்தை முற்றாக நிராகரித்து விட்டார்கள். அதுபோலவே சிங்கள மக்கள் கருணாரட்ணவை கண்டு கொள்ளவே இல்லை. சரத் பொன்சேகாவுக்கு வாக்களியுங்கள் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரசாரத்தில் ஈடுபட்டது. அதைத்தான் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று கூறவேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் இரா.சம்பந்தர், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டோர் செய்த பிரசாரம் தமிழர்களின் வாக்குகளை பொன்சேகாவின் பக்கம் திருப்பி விடுவதற்கு காரணமாக இருந்தது. சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாகப் பார்த்ததை விடவும் தமிழர்களுக்கு சற்றே ஏற்புடைய ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராகவே தமிழ் மக்கள் பார்த்தார்கள். அவர் வெற்றி பெற்றால், ராஜபக்ஷ சகோதரர்கள் மீது போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தமிழர்கள் நம்பினார்கள். அதுமட்டு



மின்றி இரண்டு எதிரிகளில் ஒருவரைக் கொண்டு மற்றவரை வீழ்த்தி விட்டு பிறகு அவரைப் பார்த்துக் கொள்ளலாம் என்பது போன்ற ஒரு திட்டமும் தமிழர்களிடையே இருந்தது. ஆனால், இவை எல்லாமே சரத் பொன்சேகாவுக்கு எதிராக சிங்கள இனவெறி எழுச்சி கொள்ளவும் காரணமாகி விட்டது.

சரத் பொன்சேகாவுக்கு பல்வேறு கட்சிகளின் ஆதரவு இருந்தது. தீவிர சிங்கள இனவாத அமைப்பாகக் கருதப்படும் ஜே.வி.பி. முதல், தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரை பல கட்சிகள் அவரை ஆதரித்தன. ராஜபக்ஷவின் கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகூட சரத் பொன்சேகாவை ஆதரித்தார். எனினும் பொன்சேகாவை ஆதரித்த கட்சிகளிடையே பொதுப்படையான அரசியல் திட்டம் எதுவும் இல்லை. ராஜபக்ஷவை எதிர்ப்பது என்பதில் மட்டுமே அவர்களுக்கு இடையே ஒற்றுமை காணப்பட்டது. தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் எத்தகைய தீர்வை முன்வைப்பேன் என்பதை பொன்சேகாவும் தெளிவுபடக் கூறமுடியவில்லை. இது அவரது மிகப்பெரிய பலவீனமாக அமைந்து விட்டது.

(11 ஆம் பக்கம் பார்க்க)


உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?
மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா...............
இதோ! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து.....
PUNCHING MAN
AB PRO
Special Offer Rs. 7,900/-
HOME GYM
Rs. 32,450/- விலிருந்து
BODY STRIDER
Rs. 11,900/-
WEIGHT LIFTING BENCH
Rs. 12,300/- விலிருந்து
AB SHAPER
Rs. 5,590/- விலிருந்து
SIT-UP BENCH
Rs. 6,900/-
ELECTRONIC TREADMILL
Rs. 39,500/- விலிருந்து
PLASTIC DUMBBELLS FOR LADIES
WEIGHT & BARS
1 Kg Rs. 89/- விலிருந்து
PUNCHING BAG & GLOVES
WEIGHT LIFTING BELTS & GLOVES
SPORTS GOODS
FOOT BALL
ரூ. 450/- விலிருந்து
VOLLEY BALL
ரூ. 450/- விலிருந்து
BASKET BALL
ரூ. 750/- விலிருந்து
CRICKET HELMET
ரூ. 1750/- விலிருந்து
CRICKET PAD
ரூ. 1950/- விலிருந்து
BADMINTON RACKET
ரூ. 295/- விலிருந்து
YOGA MAT
CRICKET GLOVES
THIGH PAD
LEATHER BALL
ரூ. 290/- விலிருந்து
TENNIS RACKET
ரூ. 750/- விலிருந்து
TENNIS BALL
ரூ. 39/- விலிருந்து
MIKASA YONEX RDM Wilson SS AS CHAMP
ESER MARKETING
VISA
HSBC
SEYLAN
BODY SCULPTURE
ESER MARKETING (PVT) LTD
நாடளாவிய கிளைகள்
கோட்டை - தொ: 011 5731888
பம்பலப்பிட்டி - தொ: 011 2585330
நுகேகொடை - தொ: 011 5529888
மொறடுவை - தொ: 011 5528888
ஜா-எல - தொ: 011 5731730
களனி - தொ: 011 5552008
இராஜகிரி - தொ: 071 4440555, 5347632, 5357632
கண்டி - தொ: 081 5673333
குருநாகல் - தொ: 037 5672562
மாத்தளை - தொ: 066 5678886
கம்பஹா - தொ: 033 5628889
காலி - தொ: 091 5457777
மாத்தறை - தொ: 041 5629888
இரத்தினபுரி - தொ: 045 5678887
நீர்கொழும்பு - தொ: 031 5878880
களுத்துறை - தொ: 034 5629888
அம்பலன்கொடை - தொ: 091 5678888
அநுராதபுரம் - தொ: 025 5628889
கேகாலை - தொ: 035 5628888
பண்டாரவல - தொ: 057 5678888
முகவர்கள்
மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
மன்னார் - உஷா சேல்ஸ் சென்டர். தொ: 023 2222010
திருகோணமலை - அஜ்மீர் டிரேடர்ஸ், 186, என்.சீ. வீதி. தொ: 026 2222702
வவுனியா - 'கணேஷ்' 100, ஸ்டேசன் வீதி, வைரவ புளியங்குளம். தொ: 024 4924775
யாழ்ப்பாணம் - 'யாழகம்' 568, ஹொஸ்பிடல் வீதி. தொ: 021 2225563
HOTLINE: 5652652
www.esermarketing.com

# கலைஞர் தொடர்ந்து முதல்வர்



கிட்டத்தட்ட 9 வருடங்களுக்குப் பிறகு அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் சந்தித்துக் கொண்டுள்ளனர். கடந்தவாரம் இந்திய தேர்தல் ஆணையத்தின் மணிவிழாக் கொண்டாட்டம் டில்லியில் நடந்தபோது அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி அ.தி.மு.க. தலைவரும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் சில நிமிடங்கள் ஜெயலலிதாவும் சோனியாவும் பேசிக்கொண்டது பலரது புருவங்களையும் உயரவைத்தது. காரணம், மற்ற அரசியல் தலைவர்களுக்கிடையேயான பகை போலன்றி சோனியா - ஜெயலலிதா பகை ஒரு வன்மம் நிறைந்த பகையாக உருவெடுத்து இருந்ததே.

காங்கிரஸ் கட்சி தி.மு.க.வுடன் கூட்டணி வைத்த புதிதில் சோனியா பதிபக்தி அற்றவர் ஏன ஜெயலலிதா வசை பாடியது சோனியா கரந்திக்கு மிகவும் மனவருத்தம் தந்த விடயம் எனக் கூறப்படுகிறது. தன்னுடன் முன்பு பகையாளிகளாக இருந்த மம்தா பானர்ஜி மற்றும் சரத் பவாருடன் கூட பகைமை மறந்து நட்புக் காட்டுகிறார் சோனியா காந்தி. ஆனால், ஜெயலலிதா நெருங்க எவ்வளவோ முயன்றும் மே ஜெயலலிதாவைத் தூரத்திலே வைத்துள்ளார். இந்தப் பின்னணியில்தான் டில்லியில் நடந்த ஜெயலலிதா - சோனியா சந்திப்பு பெரும் பரபரப்பை அரசியல் வட்டாரங்களில் ஏற்படுத்தி உள்ளது. சோனியா காந்தியை காக்கா பிடிப்பதைத் தவிர இப்போதைய துன்பத்திலிருந்து வெளியேற அம்மாவுக்கு வேறெந்த மார்க்கமும் கிடையாது. எதிர்வரும் மே மாதம் தமிழக சட்டசபைத் தேர்தலில் வெல்லாவிடின் அம்மாவின் அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும். அதற்கிடையில் சோனியா காந்தியை வளைத்துப் பிடிக்கும் கடைசி முயற்சியாக இதை ஜெயலலிதா மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவு. இந்த விழாவுக்கு சோனியா

**-எஸ்.சுரேந்திரஜித்-**

வருவார் என்பதை மணந்து பிடித்துக் கொண்ட ஜெயலலிதா டில்லிக்கு விரைந்துள்ளார். சாதாரணமாக டில்லியில் நடக்கும் இவ்வாறான சம்பிரதாய நிகழ்வுகளில் ஜெயலலிதா பங்கேற்பதில்லை. தனது பிரதிநிதிகளையே அனுப்புவது வழக்கமாகும். அதை மீறி அவர் கலந்துகொண்டதன் அர்த்தம் இதுவே. ஒரு தடவையாவது சோனியா காந்தியைக் கண்டு முகமன் பேசிவிட்டால் எதிர்காலத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவாவது உதவலாம். எதிர் வரும் ஜனவரிக்கிடையில் தூண்டில் போட்டு காங்கிரஸ் கட்சியை வளைப்பதே இதன் நோக்கம்.

தி.மு.க. - காங்கிரஸ் உறவு முறிந்தால் தி.மு.க.வின் 17 எம்.பிக்களுடைய ஆதரவை மத்திய அரசு இழக்கும். ஆனால், அதற்குப் பதிலாக 8 அ.தி.மு.க. எம்.பிக்கள் மற்றும் ஒரு ம.தி.மு.க. என 9 பேரின் ஆதரவு மறுபுறத்தில் காங்கிரஸுக்குக் கிடைக்கும். இது ஒருவகையில் தி.மு.க. ஆதரவுக்கு நிகர் என்று கொண்டாலும் இந்த எம்.பிக்களின் ஆதரவை வழங்கிவிட்டு ஜெயலலிதா தரப்போகும் உபத்திரவம் குறித்தே சோனியாகாந்தி சிந்திக்கவேண்டியிருக்கும். முன்பு வாஜ்பாய் பட்ட அவஸ்தை கொஞ்சநஞ்சமல்ல. தி.மு.கவோ மத்திய அரசுக்கு எந்தச் சங்கடமும் தராத நல்ல பிள்ளையாக நடந்து வருகிறது. சோனியாவுடன் உறவு கொண்டு காங்கிரஸின் ஆதரவுடன் எதிர்வரும் மே மாதம் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிபீடம் ஏறினால், வழமைபோல ஜெயலலிதா, காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளை உதறி விடுவார் என்பது நிச்சயம். அதாவது இப்போது தனது 8 எம்.பிக்களின் ஆதரவை ஜெயலலிதா காங்கிரஸுக்குத் தந்தாலும் அடுத்த வருடம் மே மாதம் முதலமைச்சர் ஆன பிறகு தனது பழைய அட்டகாசத்தைத் தொடங்க மாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. 1991, 2001 ஆகிய



இரண்டு தடவைகளும் காங்கிரஸ் தயவில் ஆட்சியைப் பிடித்த பிறகு ஜெயலலிதா காங்கிரஸை உதறிவிட்ட கதை நினைவு கூரத்தக்கது. ஆக, ஜெயலலிதாவின் பணிவும் நல்லபிள்ளை வேஷமும் அடுத்த மே மாதம் முதல்வராகும் வரைதான் என்பது தெளிவு.

இதை சோனியா உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் நன்கறிவர். இவருடன் ஒப்பிட கருணாநிதி எவ்வளவோ மேல் என்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜெயலலிதாவை முகத்துக்கு நேரே சந்திப்பதைக்கூட சோனியா காந்தி தவிர்த்து வந்திருந்தார். எனவே, இப்போதைய சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என அ.தி.மு.க. வட்டாரம் குதூகலத்தில் உள்ளது. அ.தி.மு.க. இன்று வீழ்ந்திருக்கும் அதலபாதாளத்திலிருந்து கைதூக்கிவிடக்கூடிய ஒரேயொரு ஆபத்பாந்தவன் காங்கிரஸ் கட்சியே. பி.ஜே.பி., கம்யூனிஸ்ட், ம.தி.மு.க., பா.ம.க. என மாறிமாறி கூட்டணி வைத்தும் ஜெயலலிதாவால் எதுவுமே செய்ய இயலவில்லை. காங்கிரஸுடன் சேர்வதே வழி என்பதும் தெளிவாகியுள்ளது. இதே ஏமாற்று வித்தையை 1991, 2001 இலும் அவர் காங்கிரஸ் மீது பிரயோகித்துள்ளார். இது



இவ்வாறிருக்க தமிழகத்தின் முதல் குடும்பத்தில் வாரிசு சண்டை உள்வீட்டுக்குள் கடுமையாக நடந்து வருகிறது. தமக்குள் சண்டை இல்லை எனக் காட்ட ஸ்டாலினும் அழகிரியும் எவ்வளவோ முயன்றும் அது வீதிக்கு வருவதைத் தவிர்க்கமுடியவில்லை. சமீபத்தில் திருச்சியில் நடந்த அழகிரியின் 59 ஆவது பிறந்த தினத்தில் ஸ்டாலின் கலந்துகொண்டு பாராட்டுமழை பொழிந்தார். தானும் அழகிரியும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் என்று அவர் கூறினார். இதைப் பார்த்த கலைஞரும் தி.மு.க.வினரும் புளகாங்கிதம் அடைந்தது உண்மையே. ஆனால், இது வெகுகாலம் நீடிக்கவில்லை. அடுத்த தேர்தலுக்கு முன்போ, பின்போ ஸ்டாலினுக்கு முடி சூட்டப்படும் என உறுதியாகப் பேசப்படும் நிலையில் அடுத்த தேர்தலிலும் கலைஞரே முதல்வர் என அழகிரி சமீபத்தில் புதிய குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

இதிலிருந்து அழகிரி விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பது தெளிவாகிவிட்டது. ஸ்டாலினுக்கு மகுடம் சூட்டுவதை முடிந்தவரை ஒத்திப்போடுவது என்பது அழகிரியின் திட்டமாகும். அதன்வழி இறக்கும்வரை கலைஞரை முதல்வராக இருக்கவிட்டு இறந்ததும் கட்சியை உடைத்து அதிகாரத்தைப் பிடிப்பது என்பது அழகிரியின் வியூகம் எனக் கூறப்படுகிறது. கிட்டத்தட்ட எம்.ஜி.ஆர். இறந்தபோது உண்டான நிலையை இது தோற்றுவிக்கலாம். மறுபுறம் கலைஞர் உயிரோடு உள்ளபோதே ஸ்டாலின் முதல்வராகிவிட்டால் அழகிரியாலோ வேறு எவராலோ அதை கேள்விக்குட்படுத்த முடியாது போகும். எனவே, இறக்கும்வரை முதல்வராக கலைஞரையே தொடரச் செய்வதே சிறந்தது என அழகிரி தரப்பு கருதுகிறது. முதல்வராக உள்ளபோது கலைஞர் உயிர் துறந்தால், கட்சியை உடைத்து கணிசமான எம்.எல்.ஏக்களை ஈர்த்துக்கொண்டு மிகுதிப் பலத்துக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் ஆதரவைப் பெறலாம் என்பது அடுத்த கட்டத் திட்டமாகும். அழகிரி டில்லியில் மத்திய அமைச்சராக இருப்பதால் சோனியா, ராகுல், மன்மோகன்சிங் உள்ளிட்ட உயர்மட்ட காங்கிரஸாருடன் அவருக்குத் தொடர்பும் நல்லுறவும் உள்ளது. அதைப் பயன்படுத்தி தமிழகத்தில் தன்னை முதல்வராக்க காங்கிரஸின் தமிழக எம்.எல்.ஏக்களின் ஆதரவை அவர் பெறமுடியும். இவ்வாறு எம்.ஜி.ஆர். இறந்தபோது ஜானகி முதல்வராவதற்கு காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் ஆதரவை ஜானகியும் சிவாஜிகணேசனும் பெற முயன்றனர். ராஜீவின் தூரதரிசனமற்ற அரசியல் ஜெயலலிதாவின் முந்தானையைப் பற்றிக்கொண்டதால் அந்தப் பொன்னான வாய்ப்பு காங்கிரஸின் கையிலிருந்து நழுவியது.

ஜானகி முதல்வராகுவதற்கு காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் உதவியிருந்தால் அவர்கள் அமைச்சுப் பதவியைக்கூடப் பெற்றிருக்க முடியும். இந்தத் தவறை அழகிரி விடயத்தில் விடாமல் ஆட்சியில் பங்குபெறும்படி அழகிரி தரப்பு இப்போதே டில்லியில் காங்கிரஸ் வட்டாரத்தில் காய் நகர்த்துவதாகக் கூறப்படுகிறது. ஸ்டாலின் துணை முதல்வரான போதே அவர்தான் அடுத்த முதல்வர் என்பதை அழகிரி ஒப்புக் கொண்டதான சமிக்ஞை காட்டப்பட்டது எனக் கருதப்பட்டு வந்தது.

இப்போது திடீரென கலைஞரே முதல்வராகத் தொடர்வார் என அழகிரி கூறுவது, புதிய குழப்பம் தயாராகி வருவதைக் காட்டுகிறது எனலாம். நொந்துபோய் இருக்கும் ஜெயலலிதாவுக்கு இது மிகுந்த உற்சாகம் தரும் விடயம் என்பதில் ஐயமில்லை. ஆக, எதிர்வரும்



ஒருவருடம் தமிழக ஆட்சி அரசியலில் மிகவும் கொந்தளிப்பான காலம் என்பதை மட்டும் அடித்துக் கூறலாம்.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

## இடப்பெயர்வால் ஏற்பட்ட பிரிவும் இணைவும்

எதற்காகவோ மாவிலாற்றில் தொடங்கிய பிரச்சினை எப்படியோ முடிவுற்றது முள்ளி வாய்க்கால் பகுதியில். உயிருக்கு பயந்து அல்லும் பகலும் பதுங்கு குழி வாழ்க்கை.

அன்றாடம் சாப்பாட்டுக்கு திண்டாட்டம். எங்கு பார்த்தாலும் வெடியோசைகளும், துப்பாக்கிச் சன்னங்களின் வேட்டொலியும் காதைப் பிளக்கும். இவை எல்லாம் ஒவ்வொரு தமிழ் மகனின் மனதிலும் அழியாத வடுவாக இன்றல்ல, நேற்றல்ல அவனுடைய வாழ்நாள் முழுவதிலுமே பதிந்துவிட்டன.

அவ்வாறு என் மனதிலும் நான் இறந்தாலும் மறையாத ஒரு சம்பவம்.

எனது சொந்த இடம் கிளிநொச்சியில் உள்ள தருமபுரம். எனக்கு மூன்று சகோதரர்கள். நான் தரம் 11 இல் கல்வி கற்றேன். பரீட்சை எழுதி விட்டு வீட்டில் இருந்தேன். எனது தந்தை 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் இறந்துவிட்டார்.

நாங்கள் இந்த இடப்பெயர்வின் போது தருமபுரத்தில் தான் வசித்து வந்தோம். எனக்கு இரண்டு உயிர் நண்பிகள். எங்கள்



வீட்டுக்கருகில் தான் வசித்து வந்தார்கள். ஒருவர் பெயர் - திவ்வியா. மற்றவர் பெயர் - கீர்த்தனா.

கீர்த்தனா அவரது வீட்டில் ஒரேயொரு பிள்ளை. தாய் தந்தையின் அரவணைப்பில் செல்லமாக வளர்ந்து வந்தாள். திவ்வியாவுக்கு மூன்று சகோதரர்கள். தாய், தந்தை என அவளுடைய குடும்பமும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. இவ்வாறு 'நண்பிகளுக்காக உயிரைக் கொடுப்பது இலகு. உயிரைக் கொடுக்கக் கூடிய நண்பிகள் கிடைப்பது அரிது' என்பதற்கிணங்க எச்சந்தர்ப்பத்திலும் ஒருவருக் கொருவர் உயிர் கொடுக்கக் கூடியவர்களாக தொடர்ந்தது எங்கள் மூவரின் நட்பு.

இதற்கிடையில் 2009.01.14 அன்று எங்களுடைய இடத்திலும் எறிகணைகள் விழத் தொடங்கின. உடுப்புப் பொதியுடன் எங்களுடைய சொந்த இடத்தை விட்டுச் செல்ல நானும் எனது குடும்பமும் தயாராகினோம். எங்களைப் போன்றே எல்லோரும் இடம்பெயர்ந்தார்கள். அச்சந்தர்ப்பத் தில் எனது உயிர் நண்பிகளை பிரிந்து விட்டேன். பின்பு நாங்கள் றெட்பானாவில் வசித்து வந்தோம். எனது நண்பிகள் இருவரும் மயில்வாகனபுரத்தில் வசித்து வருவதாக ஒருவாறாக எனது அயலில் உள்ளவர்கள் மூலம் அறிந்து கொண்டேன். பின்பு நாங்கள் சுதந்திரபுரத்தை நோக்கிச் செல்கையில் திவ்வியாவைச் சந்தித்தேன். அப்போதும் நண்பி கீர்த்தனாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறு ஆறு இடங்களில் தங்கியிருந்து இறுதியில் கப்பல் வந்து நோயாளர்களை ஏற்றும் இடமான மாத்தளன் பகுதிக்கு வந்து அங்கு வசித்து வந்தோம்.

அந்த நேரத்தில் நான் யோசித்தேன்; 'நாம் ஏன் உயிருடன் இருக்கிறோம். ஒரு எறிகணை விழுந்தால் இறந்து விடலாம்' என்று. அந்த நேரத்தில் எனது தலையில் இடி விழுந்த மாதிரி ஒரு செய்தி. திவ்வியாவின் அப்பாவுக்கு துப்பாக்கி ரவை பட்டு கழுத்தில் காயம் ஏற்பட்டு அவரைக் கப்பலில் ஏற்றி அனுப்பி விட்டனர் என்று ஒருவர் கூறியதன் மூலம் அறிந்து கொண்டேன். என் நண்பியின் குடும்பம் இருக்கும் இடம் தெரியாமல் தவித்தேன். பின்பு ஒருவாறாக அவர்கள் இருக்கும் இடத்தை தேடிப்பிடித்துக் கொண்டேன். அங்கு சென்றேன். அந்த இடம் தான் பொக்கணை. என் நண்பி திவ்வியாவுக்கு ஆறுதல் கூறிவிட்டு, அவளை அமைதிப்படுத்தி விட்டு எனது கொட்டகைக்குத் திரும்பினேன்.

வெடியோசைகளின் சத்தம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது. இதனூடே எங்களின் வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருந்தது. இன்னும் ஒரு செய்தி என் காதில் ரணகணமாய் வந்து விழுந்தது. நண்பி கீர்த்தனாவின் தாய் புது மாத்தளன் பகுதியில் இடம்பெற்ற எறிகணை வீச்சில் தலை துண்டிக்கப்பட்டு இறந்து விட்டதான துன்பியலான செய்தி அது. அப்போது அங்கு செல்ல முடியாத நிலைமை. எறிகணைகளின தும், துப்பாக்கி ரவைகளினதும் ஆதிக்கம் அதிகரித்துச் சென்று கொண்டிருந்தது.

இந்த வேளையில் ஏப்பிரல் 21 ஆம் திகதி மாத்தளன் பகுதியில் நடந்த மோதல்களின் பின்னர் இராணுவத்தினர் எங்களை மீட்டுக் கொண்டு வந்து விட்டனர். வரும் போதெல்லாம் என் மனம் என் நண்பிகள் என்ன ஆனார்கள். அவர்களை இனி நான் காண்பேனா? என ஏங்கிய படி இருந்தது. அச் சந்தர்ப்பத்தில் இரணைப்பாலை யில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கீர்த்தனா வைச் சந்தித்தேன். ஓடிச் சென்று அவளைக் கட்டித் தழுவிக் கொண்டேன். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிய தாயினுடைய செய்தியைச் சொன்னாள். என்ன செய்வது? அவளும் எங்களு டன் ஒன்றாக பயணித்து, வவுனியா இராமநாதன் முகாமை வந்தடைந்தோம். இங்கு வந்தவுடன் நினைத்தோம்; 'இனி நிம்மதியாக, சுதந்திரமாக வாழலாம் என்று. இங்கு நாலாபுறமும் கம்பி வேலி. உறவுகளைப் பிரிந்தவர்களின் ஏக்கமான வாழ்வு. 'அடுத்த முகாமில் உள்ளவர்களைச் சந்தித்துக் கதைக்க முடியாது. ஆனால் இங்கு எறிகணையினதும் துப்பாக்கி ரவையினதும் சத்தம் இல்லை.

வசதியுள்ளவர்களை வெளியில் இருந்து வந்து பார்த்துச் செல்வார்கள். வசதியற்றவர்கள் கம்பி வேலிக்குள் எங்களை யாராவது பார்க்க வருவார்களா? என்று ஏக்கத்துடன் காத்திருப்பார்கள்.

'அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது
அதிலும் தமிழனாய் பிறப்பது மிகப் பெரிய தவறு'

இந்த துன்பமான, அவலமான, ஏக்கம் நிறைந்த சிறை வாழ்க்கை வாழ்வதை விட வன்னி மண்ணிலேயே இறந்திருக்கலாம் என்று கூட எண்ணுவதுண்டு. என்றோ ஒரு நாள் எமக்கெல்லாம் விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிடனும் எதிர்காலக் கனவுடனும் இருக்கின்றோம்.

ரம்சிகா நவசிவாயம்.

## மோட்டார் சைக்கிளில் நிர்வாணமாக கொண்டு வரப்பட்ட இளம் பெண்



நானும் எனது குடும்பமும் வலைஞர்மடத்தில் ஒரு சிறிய பலசரக்குக் கடையை நடத்தி வந்தோம். அன்று ஒருநாள் மாலை வேளை எனது கடைக்குப் பொருட்கள் வாங்குவதற்கு வந்த என்னு டைய மைத்துனன் காயப்பட்டு மாத்தளன் வைத்திய சாலையில் அனுமதிப்பட்டார். அவரைப் பார்ப்பதற்காக நான் மாத்தளன் வைத்திய சாலைக்குச் சென்றேன். அப்போது மாலை நான்கு மணி இருக்கும். இரணப்பாலை, மாத்தளன் பகுதிகள் எங்கும் ஒரே விமானத் தாக்குதல்கள். மக்கள் பீதியால் கையில் அகப்பட் டதைத் தூக்கிக் கொண்டு சிதறி ஓடிக் கொண்டிருந் தார்கள். காயப்பட்ட வர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து இறக்கினார்கள். அதில் மிக வேதனையான விடயம் என்ன வென்றால் இருவர் மோட்டார் சைக்கிளில், படுகாயமடைந்த ஓர் இளம் பெண்ணைக் கொண்டு வந்தார்கள். அவளின் உடம்பில் எதுவித ஆடையும் இல்லாமல் கொண்டு வந்து இறக்கினார்கள். அவளின் உயிரைக் காப்பாற்று வதற்காக அப்படியே கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த பெண்ணுக்கு சுயநினைவு கொஞ்சம் இருந்ததால் அவளை உடனே கீழே இறக்கி சிகிச்சை அளித்தனர். காயப்பட்டவர் களுக்கான மருத்துவ சேவை தரையிலேயேதான் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் எனது மனதை பெரிதாகப் பாதித்துவிட்டது. அது மட்டுமன்றி இப்படி எங்களுடைய சகோதரிகளுக்கும் நடந்தால் எம்மால் தாங்க முடியுமா? என் நெஞ்சை உருக்குகிறது இந்தச் சம்பவம்.

இ. ரவிந்திரன்.

# பரம்பரை நோயும் பிரசவ பீதியும்



**கேள்வி :** எனக்கு இரண்டு குழந்தைகள், வயதுகள் முறையே 8 வருஷம், 4 வருஷம். மூத்த மகன் தனியாக இருந்த வேளையில் பிரளி இல்லாமல் சாதுவாக இருந்தார். ஆனால், இளையவர் பிரளி பண்ணத் தொடங்கியதும், இவரும் இப்போது பிரளி செய்கின்றார். ஒருவருக்கொருவர் பிரளி பண்ணுவதில் சளைத்தவர்கள் அல்லர். தொலைக்காட்சியில் நிறைய கார்ட்டூன் பார்ப்பார்கள். இப்பொழுது அந்த கார்ட்டூனில் வரும் நபர்களைப் போல் மிருகங்களைப்போல் நடிப்பும், பாவனையும் செய்கின்றார்கள். சில வேளைகளில் - உதாரணத்துக்கு, உணவு வேளையில் நாக்கைத் தொங்கப்போட்டு கார்ட்டூன் நாய்க்குட்டியைப் போல் எச்சில் வடித்து பாவனை செய்வார்கள். விருந்தினர்கள் முன் இது பெரும் சங்கடத்தைத் தருகிறது. மூன்றாம் ஆண்டு கல்வி கற்கும் மூத்தவருக்கு இப்பொழுது படிப்பில் ஆர்வமில்லை. ஓரிடத்தில் இருந்து மனதை ஒருநிலைப் படுத்திப் படிக்கமாட்டார். நான் இவர்களை மாற்ற - சாமபேத, தான தண்டம், என்று சிநேகித பூர்வமாக, தண்டனை மூலமாக சகல வழிகளையும் கையாண்டும் பிரயோசனமில்லை. இவர்களை எப்படிச் சமாளிப்பது என்பதுபற்றி அறிவுரை தரவும்.

**பதில் :** உங்கள் கடிதத்தில் - சாமபேத, தான தண்டம் என்று சிநேகித வழிதொட்டு தண்டனை வழிவரை சகல முயற்சிகள் எடுத்தும் பலனில்லை என்ற வசனம் பிரச்சினையின் அடிப்படையை எடுத்துக் காட்டுகிறது. பெற்றவள் ஸ்தானம் என்பது முகமூடி ஒன்று போட்டு, மிரட்டிப் பயமுறுத்தி, சந்தோஷப்படுத்தி, தண்டனை கொடுத்து காரியம் சாதிக்கலாம் என்று கருதுவது தப்பு. தவறு எம்பக்கம் இருக்கும்போது எமது இயலாமையைக் குழந்தைகள் மீது காட்டுவது சரியல்ல. நடந்து கொண்டிருக்கும் விஷயங்களை நீங்களாகவே அலசிப்பாருங்கள்.

1. பெற்றோர்களின் அனுமதி இல்லாமல் குழந்தைகள் தொலைக்காட்சி பார்க்க முடியுமா? வெளிநாடுகளில் Baby Sitter என்றொரு தொழில் உள்ளது. பெற்றோர்கள் இருவரும் விருந்துக்கோ, சினிமாவுக்கோ போகும்போது - இளவயதுப் பெண் குழந்தைகளை - கொண்டுவந்து குழந்தைகளோடு விட்டு, அவர்களை வேளைக்கு வேளை உணவு, பால் கொடுத்து பராமரிக்கத் தற்காலிகமாக அமர்த்துவார்கள். வெளிநாடுகளில் அநேகமான கல்லூரி மாணவிகள், Baby Sitter பணிபுரிந்துதான் தங்கள் தேவைகளுக்கு உழைக்கின்றார்கள். நீங்கள் தொலைக்காட்சியைக் குழந்தைகளுக்கு Baby Sitter ஆக உபயோகப்படுத்தியுள்ளீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். எவ்வளவு நேரம், எதனைப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் வரைமுறை, கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் உங்கள் பணி முடியும் வரை, தொந்தரவு எதுவும் குழந்தைகளால் ஏற்படாமலிருக்க தொலைக்காட்சியை உபயோகித்துள்ளீர்கள். இது நீங்கள் செய்த முதலாவது தவறு.

2. அடுத்தபடியாக - குழந்தைகளோடு நீங்கள் சிநேக பூர்வமாக இருப்பது என்பதும் குறுகிய சில நிமிடங்களுக்கு தாங்கள் ஆடும் நாடகம் போலிருக்கக் கூடாது. தினமும், சகல வேளைகளிலும் உங்கள் சிநேகிதத் தன்மை வெளிப்பட வேண்டும். எதுவித பிரச்சினைகளுக்கும், எதுவித தடையும் இல்லாமல் அம்மாவிடம் தீர்வு காண வரலாம் என்ற நம்பிக்கை ஏற்படும் விதத்தில் நீங்கள் குழந்தைகளுடன் பழகவேண்டும். அவர்கள் தங்கள் பாடசாலை அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட நீங்கள் நடக்க வேண்டும்.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை**
**'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்**
**டாக்டர்**
**எஸ். அருள்ராமலிங்கம்**
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
**இலவச மருத்துவ ஆலோசனை**
**'சுடர் ஒளி'**
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

3. குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு, வெளியே சென்றுவரவேண்டும். கூடியிருந்து அவர்களின் தரத்திற்கு நீங்கள் இறங்கி - அவர்களோடு விளையாட வேண்டும். அயலில் வேறு குழந்தைகள் இருந்தால் - அவர்களையும் விளையாட்டுகளில் சேர்த்து - Team Sprit என்கின்ற குழு மனப்பான்மையை உருவாக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் செய்ய உங்களுக்குப் பிரயாசையும், ஈடுபாடும் மனதில் உண்மையாகவே ஏற்படவேண்டும்.

4. கதைப்புத்தகங்கள், சிறுவர்களுக்குரிய இசை நிகழ்வுகள், உல்லாச விளையாட்டுகள் புதிர் விளையாட்டுக்கள் என்பன குழந்தைகளைத் தொலைக்காட்சி ஈடுபாட்டிலிருந்து விடுவிக்கும். இந்தச் செயலை மெல்ல மெல்லச் செய்யவேண்டும். தொலைக் காட்சி பார்க்கும் நேரத்தை வரையறுக்க வேண்டும். உணவு உண்பதற்கு, உங்களுக்குத் தொந்தரவு வராமல் குழந்தைகளை அகற்றுவதற்குத் தொலைக்காட்சி ஒரு மாற்றுச் செயலாக இருக்கவே கூடாது.

5. உங்கள் மூத்த புத்திரனோடு, எதற்கு கல்வியில் நாட்டம் குறைகின்றது என்பதை மெல்லவே கலந்துரையாடி அறிந்துகொள்ளுங்கள் பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, ஈடுபாடு என்பவை குழந்தைகளின் வாழ்க்கைக்கு, வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையானவை மட்டுமல்ல மிகவும் வேண்டியவையும் கூட, மனோநல வைத்தியரின் மனவள ஆலோசனையை விட இவை உயர்ந்தவை என்பதை மனதில் கொள்ளவும்.

6. குழந்தை வளர்ப்பு, தாய்க்கு மட்டும் பொறுப்பான விஷயமல்ல, தந்தைக்கும் ஒரு பெரும் பொறுப்பு உண்டு. குழந்தை வளர்ப்பில் முக்கிய பங்கு தந்தையிடம் உண்டு. தாயோடு அறுசுவை போம் - தந்தையொடு கல்வி போம் என்று பெரியோர் வாக்கு ஒன்றுண்டு. கல்வி வளத்திற்குத் தந்தை மிகவும் உதவுவார். படுக்காத நேரத்தில் குழந்தைகளுக்கு கதைகள் வாசிப்பது - அவர்களோடு சேர்ந்து தோட்டம் போடுதல், விளையாடுதல் என்வற்றின் மூலம் குழந்தைகளின் நண்பனாக தந்தை விளங்கலாம்.

**கேள்வி :** நாங்கள் திருமணமாகி 3 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இருவருக்கும் வயது 30 ஆகிறது. தற்பொழுது ஒரு குழந்தை பெறுவதற்கு விரும்புகின்றோம். ஆனால் ஒரு பிரச்சினை. எனது கணவரின் மூத்த சகோதரி மூளைவளர்ச்சி குறைந்தவர். அடிக்கடி வலிப்பு நோய் ஏற்படுகிறது. அவரது நோய் பற்றிய சகல குறிப்புகளும் எம்மிடம் உள்ளன. அவருக்கு இப்போது 32 வயது. ஆனால் 2 வயதுக் குழந்தைபோல் நடவடிக்கைகள் உள்ளன. எந்த விஷயத்திற்கும் அம்மாதான் தேவைப்படுகிறார். சரியாகப் பேசவும் மாட்டார். நடக்கும் போது கால்களை இழுத்து இழுத்துத்தான் நடப்பார். எங்களுக்கு ஒரு குழந்தை தங்கினால் - இவரைப் போன்ற கோளாறுகளுடன் பிறக்குமா அல்லது பிறவிக் கோளாறுகள் வேறேதாவது ஒன்றுடன் பிறக்குமா என்று பயமாக இருக்கிறது. உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்?

**பதில் :** நீங்கள் ஒரு பரம்பரை நோய் விசேட ஆலோசகர் Genitist அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். அவர் உங்கள் இருவரின் குடும்ப பரம்பரை நோய் அட்டவணை (Family Pedigree Chart) ஒன்றைத் தயாரித்து ஏதாவது - பரம்பரை நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் பற்றிக் கணித்துத் தருவார். அதற்கு முதல் உங்கள் கணவரின் சகோதரியின் கோளாறு பற்றிய முழு விவரமும் அறியப்படவேண்டும். அந்தக் கோளாறு உங்கள் பரம்பரையில் எந்த வகையில் வந்து கொண்டிருக்கின்றது என்பது கண்டறியப்படும். அதன் பின்னர் இந்தக் கோளாறு உங்கள் கர்ப்பத்தை எந்த விதத்தில் பாதிக்கும் என்பது அறியப்படும்.

அநேகமாக எந்தப் பிறவிக்கோளாறும் - அது சம்பந்தப்பட்ட குடும்பத்தில் பரம்பரையாக வரும் சாத்தியம் வெகு வெகு குறைவே. பொதுவாக கோளாறு இல்லாத குழந்தைகள் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகமானதே.

எனவே இந்த வாய்ப்புகளை, சாத்தியக்கூறுகளை நன்கு அறிந்து கொண்டு நீங்கள் உங்கள் குழந்தை பெறும் திட்டத்தை ஆரம்பிக்கலாம். மேலும் கர்ப்பகாலத்தில் பிறவிக் கோளாறுகளுக்கான பரிசோதனைகளைச் செய்து கருவில் இக்கோளாறு சம்பந்தப்பட்ட விஷயங்கள் உள்ளனவா, குழந்தை நலமாக வளர்கிறதா என்பதை அறிந்து கொள்ளலாம். அப்படி எதுவும் தென்பட்டால் மருத்துவமுறையில் கருவைச் சிதைத்து விடச் சட்டத்தில் அனுமதி உள்ளது என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

உங்கள் கணவரின் சகோதரிக்கு ஏற்பட்டிருப்பது பரம்பரை வியாதியல்ல என்பது என் கருத்து. அநேகமாக அவர் பிறக்கும் நேரத்தில் ஏற்பட்ட மருத்துவ விபத்து காரணமாக - மூளைக்குச் செல்லும் இரத்தோட்டம் தடைப்பட்டு, மூளையின் சில பகுதிகள் செயலிழந்ததனால் - இந்தக் கோளாறு ஏற்பட்டிருக்கலாம். இதனை Cerebral Palsy என்பார்கள். இது பரம்பரை பரம்பரையாக ஏற்படும் நோயல்ல.

**கேள்வி :** எனது மகன், வயது 3. அவருக்க 'வாக்கு' கண் பிறந்த நேரத்திலிருந்து உள்ளது. இதற்கு சமீபத்தில் கண் வைத்தியர் சத்திர சிகிச்சை செய்தார். எங்களுக்கு குடும்பக் காப்புறுதி (Family Insurance) உள்ளது. சத்திர சிகிச்சை-மருத்துவ செலவுகளுக்கு இந்தக் காப்புறுதிப் பணம் வரும் என்ற காரணத்தினால்தான் காப்புறுதி செய்தோம். ஆனால் இந்தச் சத்திரசிகிச்சைக்குப் பணம் தரமாட்டோம் என்று எமது காப்புறுதி நிறுவனம் கூறிவிட்டது. இதற்கு பிறப்புவாசியாக ஏற்பட்ட கோளாறுகளுக்கு (Congenital) காப்புறுதி பணம் மீளளிப்பு செய்வதில்லை என்று காரணம் கூறுகின்றார்கள். இது சரியான காரணமா அல்லது இந்த ஸ்தாபனம் எம்மை ஏமாற்றுகின்றதா? விவரம் தருக.

**பதில் :** காப்புறுதி நிறுவனம் ஒரு தர்மகாரியம் செய்யும் நிறுவனம் அல்ல. எதிர்பாராத நோய்கள், விபத்துக்கள் ஏற்படும்பொழுது - காப்புறுதி செய்பவர்களின் செலவை தாம் பொறுப்பெடுத்து - அவர்கள் சேவை வழங்கினாலும் - நீங்கள் காப்புறுதி செய்யும் போது Premium என்று கட்டப்படும் மாதாமாதம் அல்லது வருடாவருடம் கட்டும் பணத்தில்தான் இந்தச் சேவை நடைபெறுகிறது. - உங்களைப்போல் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தக் காப்புறுதியை எடுத்திருப்பார்கள். அத்தனைபேரும் இந்தக் காப்புறுதியை உபயோகப் படுத்தியிருக்கமாட்டார்கள். ஆனால் இத்தனை பேரினதும் Premium என்கின்ற பணம் செலுத்தல் மூலம்தான் - எப்போதோ - காப்புறுதியாளர் ஒருவருக்கு நடைபெறும் சத்திரசிகிச்சைக்குப் பணம் செலுத்தப்படுகின்றது. காப்புறுதி என்பது மழை காலத்துக்கென்று சேமித்து வைப்பது போன்ற செயல் - மழை வராவிட்டால் அந்தச் சேமிப்பு செலவாகாது. இந்த வருமானத்தில்தான் காப்புறுதி நிறுவனங்கள் இயங்குகின்றன. காப்புறுதி எடுத்த, அவ்வளவு மக்களும் ஒரே நேரத்தில் தமது மருத்துவச் செலவுகளுக்குப் பணத்தை மீளத்தரும்படி கேட்டால் காப்புறுதி நிறுவனம் திவாலாகிப் போய்விடக்கூடிய சாத்தியம் உள்ளது.

அடுத்துபடியாக - எந்தெந்த நோய்களுக்கு - எந்தெந்த சத்திரசிகிச்சைகளுக்கென்று காப்புறுதி எடுக்கும்போது ஓர் ஆவணம் (Policy) தரப்படும். அதற்கு முன்னர் - காப்புறுதி செய்பவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு அவரது ஆரோக்கியம் கணிக்கப்படும். இந்த ஆரோக்கியக் கணிப்பீடுகளின் அடிப்படையில் உங்கள் மாதாமாதம் அல்லது வருடாந்தம் கட்டவேண்டிய Premium அதிகமாகும். உதாரணமாக Risk Factors என்கின்ற - அபாய அறிவிப்புகள் - நீரிழிவு, இரத்த அழுத்தம் என்பவை இருக்குமாயின் - அந்தக் காப்புறுதியாளர் சுகவீனமடையும் வாய்ப்புகள் அதிகமாதலால் Premium அதிகமாயிருக்கும். இந்த பிரிமியத்தை அவர் கட்டிவந்தால் - முன்னர் இருந்த நோய்களால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் காப்புறுதியை நிறுவனம் தரும். இதேபோல்தான் - ஏற்கனவே நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் - பிறவிக்குறைபாடுகள் உள்ளவர்கள் என்போரின் பிரிமியமும் அதிகமாயிருக்கும். இந்தப் பிரிமியத்திற்கு சம்மதபூர்வமாகத் தெரிவித்திருந்தால் - அவர்கள் இவற்றிற்குரிய சிகிச்சைக்குப் பணம் மீளளிப்பார்கள். உங்கள் விஷயத்தில் உங்கள் காப்புறுதி பிறவிக்குறைபாடுகளை உள்ளடக்கவில்லை. 'வாக்கு' கண், குழந்தைகளுக்கு ஒரு பிறவிக் குறைபாடு. எனவேதான் காப்புறுதி ஸ்தாபனம் பணம் மீளளிக்கவில்லை. ✱

# முத்தங்கள் பல விதம்



காதல் ஸ்பரிசங்களில் பரிமாறப்படும் முக்கிய செயல் முத்தம். ஒரு தாய், தன் குழந்தைக்கு கொடுக்கும் முத்தத்துக்கும், ஒரு கணவன் தன் மனைவிக்கு கொடுக்கும் முத்தத்துக்கும், ஒரு காதலன் காதலிக்கு கொடுக்கும் முத்தத்துக்கும் நிறையவே வித்தியாசங்கள் உண்டு.

முத்தத்தின் வெளிப்பாடு என்பது அன்பின் பரிமாற்றம்தான் என்றாலும், அதை கொடுக்கிறவர்களைப் பொறுத்தும், வாங்கிக்கொள்கிறவர்களைப் பொறுத்தும் மாறுபடுகிறது.

தாய் மகனுக்கு கொடுக்கும் முத்தம் பாசத்தை மட்டுமே கொண்டது. கணவன் மனைவிக்கு கொடுக்கும் முத்தத்தில் பாசத்துடன், காமமும் சேர்ந்தே இருக்கும். ஆனால், காதலர்களுக்குள் இந்த முத்தம் பரிமாறிக் கொள்ளப்படும்போது அன்பு, காமம் ஆகியவற்றுடன் இன்னொன்றும் வந்து சேர்கிறது. அதுதான் எதிர்பார்ப்பு.

துணை அடுத்து என்ன செய்யப்போகிறான் அல்லது என்ன செய்யப்போகிறாள் என்ற எதிர்பார்ப்பு காதலர்களுக்குள் இருப்பதால், அவர்கள் பரிமாறிக்கொள்ளும் முத்தத்தில் இனம் புரியாத ஈர்ப்பு இருக்கிறது.

இப்போதெல்லாம், முத்தத்தை எப்படி கொடுத்தால் 'கிக்' அதிகமாக இருக்கும் என்று ஆராய்ச்சிகளே நடத்தப்படுவதால், பல வகையிலான முத்தங்கள் தோன்றிவிட்டன.

காமசூத்ராவை தந்த வாத்சாயனாரின் 'டிப்ஸ்' களையே அந்த முத்தங்கள் மிஞ்சிவிட்டன. அதற்கு சிறந்த உதாரணம் உதட்டோடு உதடு கவ்வும் 'பிரெஞ்சு கிஸ்'

இந்த முத்தத்தின்போது என்னென்ன மாற்றங்கள் இருவரது உடலுக்குள்ளும் நிகழ்கின்றன என்று ஒரு ஆய்வு மேற்கொண்டார்கள்.

பாலுறவின்போது ஆண், பெண் இருவரும் அடையும் உச்சக்கட்டத்தை, இந்த முத்தத்தைபரிமாறிக்கொள்ளும் போதும் அடையலாம் என்பதை நிரூபித்தது, அமெரிக்காவில் நடத்தப்பட்ட அந்த ஆய்வு.

அந்த ஆழமான முத்தத்தை பரிமாறும்போது, அதை பரிமாறும் ஆண்-பெண் இருவரது பால் சுரப்பிகளும் தூண்டப்படுவது அப்போது தெரிய வந்தது.பிரெஞ்சு கிஸ் இதழ்களோடு நின்று விடுவதில்லை; மோகத் தீ பலமாக வீசி, இருவரது உடல்களும் பின்னிப் பிணைந்து விடுகின்றன. இன்றைய இளசுகள் இந்த முத்தத்தைத்தான் துணையிடம் விரும்புகிறார்களாம்.

பிற நாட்டினரைக் காட்டிலும் பிலிப்பைன்ஸ் காதலர்கள், முத்தத்திற்கு தனி மரியாதை கொடுக்கிறார்கள்.


அவர்களுக்குள் காதல் தோல்வி ஏற்படும்போதும் கூட, அந்த முத்தத்திற்கு ஓர் அங்கீகாரம் கொடுக்கிறார் கள். அதாவது, காதலியானவள் தனது உள்ளாடையையும், காதலன் அவனது உள்ளாடையையும் அவர்களுக்குள் பரிமாறிக்கொண்டு பிரிந்து விடுகிறார்கள். அதன்பின்னர், இருவரும் சந்தித்துக் கொள்வதே இல்லை.

அதேநேரம், காதலி அல்லது காதலன் பற்றி எண்ணம் வரும்போதெல்லாம், அவள் அல்லது அவன் கொடுத்த உள்ளாடையை முத்தமிட்டு, தங்களது மனப் பாரத்தை இறக்கிக் கொள்கிறார் களாம்.

காமசூத்ராவை தந்த வாத்சாயனர் கூட, முத்தத்தை பற்றி அழகாக வர்ணிக்கிறார். ''உணர்ச்சிகளின் எல்லையைத் தாண்டிய அவள், சண்டை இட்டுக் கொள்வது போல் அவனது தலை முடியை பற்றி இழுத்து, முகத்தோடு முகம் வைத்து, அவனது கீழ் உதட்டில் முத்தமிடுகிறாள். சித்தப்பிரமை கொண்டவள்போல் அவனது உடம்பெங்கும் கடித்துக் கொள்கிறாள். இந்த நேரத்தில் அவளது கண்கள் மூடியிருக்கும்...'' என்று, காதல் பாடம் சொல்லிக்கொண்டே போகிறார் வாத்சாயனர்.

பொதுவாக சொல்வது என்றால்... ஒவ்வொரு நாட்டினர் இடையேயும் முத்தம் வேறு வேறு வழிகளில் கையாளப்படுகிறது.

பயன்படுத்தும் வழிகள் பலவாக இருந்தாலும், அந்த முத்தத்தால் கிடைக்கும் சுகம்-பரவசம் எல்லாம் ஒன்றாகவே இருக்கிறது.



## ஷாருக்...

ஷாருக்கானின் அடுத்த டி.வி. ஷோ ரெடி! டிஸ்கவரி டிராவல் லிவிங் சேனலில் வருகிறது 'லிவிங் வித் எ சூப்பர் ஸ்டார்' நிகழ்ச்சி. ஷாருக்கின் குடும்பம், நட்பு, தொழில், ஐ.பி.எல். டீம் எல்லாமே கலந்த ஜாலி காக்டெய்ல்.

# 180 டிகிரி பார்வை



ஆணைவிட பெண்ணின் பார்வை பரந்து விரியும் தன்மையுடையது. அவளது தலையின் மேல், கீழ், இடது மற்றும் வலது ஆகிய நாலாபுறங்களும் 45 டிகிரி அளவுக்குப் பார்வையை நோட்டமிடும் அளவுக்கு அவளது மூளையின் அமைப்பு உள்ளது. சிலருக்கு இது 180 டிகிரி வரை கூட உள்ளது.

ஆணின் கண் பெண்ணின் கண்ணைவிடப் பெரியது. ஆனாலும் அவனது பார்வை ஒரே நேர்கோட்டில்தான் விரியும். தனக்கு எதிரே உள்ளவற்றை எளிதில் கண்ட கொள்ள அவனால் முடியும். அதன் தூரம் அதிக மானாலும் அவனுக்கு எளிது.

கண்ணிமைக்காமல் இரையைப் பிடிக்கப் பார்வை அவனுக்கு உதவியது. காட்டு விலங்குகளிடமிருந்தும் எதிரிகளிடமிருந்தும் குழந்தைகளையும் சுற்றத்தாரையும் காப் பாற்றிக் கொள்ள பெண்ணுக்கு நாலாபுறமும் பார்வை அவசியமாயிருந்தது.

சிறுமிகளைவிட சிறுவர்கள் வீதியைக் கடப்பதற்குச் சிரமப்படுவார்கள். பிரிட்டனில் நடந்த ஒரு கருத்துக் கணிப்பில் ஒரு வருடத்தில் விபத்தில் அடிபட்டுக் கொண்ட சிறுவர்களின் எண்ணிக்கை சிறுமிகளைவிட இரு மடங்கு அதிகமாக இருந்ததாம்.

ஆண்கள் பிரிட்ஜையோ, அலுமாரியையோ திறந்து வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாலும், வேண்டிய பொருளை எளிதில் தேடி எடுத்துக் கொள்வதில் சிரமப்படுவார்கள். 'அங்கதானே வைத்திருக்கிறேன்.' என்று மனைவி கத்திக்கொண்டிருப்பாள். கடைசியில் அவள்தான் வந்து எடுத்துக் கொடுக்க வேண்டியிருக்கும். அவனைச் சொல்லிக் குற்றமில்லை. பாவம் அவனது பார்வை அப்படி. என்ன செய்ய?

மூளையில் பதிவு செய்யப்படும் எல்லாவற்றையும் அது வெளிப்படுத்துவதில்லை. உதாரணத்துக்கு, மூளை வானத்தின் எல்லா நிறங்களையும் உணர்ந்தாலும், வானம் நீலம் என்பதை மட்டும் எடுத்துக் கொள்ளும். அதனால்தான் பலவற்றை நாம் கூர்ந்து கற்றுக்கொள்ள முடிகிறது.



## மனிஷா மாமி

ரஜினி நடித்த 'மாப்பிள்ளை' படத்தின் ரீ-மேக்கில் தனுஷ் நடிக்க இருக்கிறார். தனுசுக்கு மாமியாராக நடிக்க ஸ்ரீதேவி, தபு என்று பலரையும் அணுகி, சம்பளப் பிரச்சினையால் விலகி வந்துவிட்டது தயாரிப்புத் தரப்பு. கட்டக்கடைசியாக மனீஷா கொய்ராலாவை அப்ரோச் பண்ணி ஓ.கே. வாங்கியிருக்கிறார்கள்.







# அவளும் ஒரு...

அலங்காரத் தேர்போல காரிலிருந்து இறங்கினாள் அலமு. பள பளக்கும் பட்டுச் சேலை அவளது வனப்பையும், வசதியையும் மேலும் எடுத்துக் காட்டியது.

அம்மனை தரிசிக்க கோயில் வாசல் வழியே நடந்து சென்று கொண்டிருந்தாள்.

''அம்மா.... தாயே....''

கையேந்தியபடி பிச்சைக்காரர்கள் அவளைப் பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருந்தார்கள். தூசாக அவர்களை நினைந்தவள், யாரையும் கண்டு கொள்ளாது மிதப்பில் சென்று கொண்டிருந்தாள்.

''வாழ்ந்தால் இப்படி வசதியா வாழனும். நாமுந்தான் இருக்கிறோமே'' நடுவீதியில் பிச்சை எடுத்தபடி ஒரு பிச்சைக்காரன் சலித்துக் கொண்டே சொன்னான்.

''போடா... போடா... போக்கத்துப் பயலே. புரியாமல் பேசாதே. அவளும் ஒரு பிச்சைக்காரி தான் தெரியுமா உனக்கு'' அங்கு புதுப் பிச்சை எடுக்க வந்த சாமியார் போலிருந்த ஒருவர் கூறினார்.

''எப்படி... சாமி... சொல்றீங்க?''

''போய் கோயில் வாசலில் எட்டிப்பார் தெரியும்'' என்றார் சாமியார்.

''சரி... அதையும்தான் பார்ப்போமே!'' என்று கூறிய பிச்சைக்காரன் கோயில் வாசலில் இருந்து உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே கையேந்தி பிச்சை கேட்டபடி அம்மன் முன் வேண்டிக் கொண்டிருந்தாள் அலமு.



## அவதார்

'படத்தின் கிராபிக்ஸ் காட்சிகளைப் பார்த்து மக்கள் பயப்படுகிறார்கள்' என்று சம்திங் வித்தியாசத்தைக் காரணம். சொல்லி 'அவதார்' படத்தைத் தடை செய்திருக்கிறது சீனா. அங்கே அரசாங்கம் கைப்பற்றிய நிலங்களை மீட்பதற்காகச் சிலர் போராட ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் அவதாரைப் பார்த்து குரூப் அவதாரம் எடுத்துவிடக் கூடாது என்பதற்காகவே தடை.

# கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவல்

சிறுகதை

-ஏகாம்பரம் தினேஷ்-

அதிகாலை ஐந்தரை மணி. உலகமே சூரியன் வரவுக்காய் ஏங்கிக்கொண்டிருந்தது. புள்ளினங்கள் ஆர்ப்பரித்தும், ஆலய மணியோசைகள் ஆங்காங்கே ஒலித்தும் அன்றைய நாளுக்காகக் கட்டியங் கூறிக் கொண்டிருந்தன. தொட்டாச் சுருங்கிகள் விரிந்துகொள்ள கிழக்குவானின் அடிவாரத்திலிருந்து சூரியக்கதிர்கள், சுற்றுகின்ற பூமிப்பந்தின் இருளைக் கலைத்துக்கொண்டிருந்தன.

***

முத்துலிங்கம் வீட்டின் கொல்லைப்புற மரங்களில் தமது தூக்கத்தை முடித்துக் கொண்ட சேவல்கள் சிலவும் பேட்டுக் கோழிகள் சிலவும் மரங்களில் இருந்தவாறே தமது இனத்தாருக்கிடையில் காலை வந்தனங்களைப் பரிமாறிக்கொண்டிருந்தன. சேவல்கள் தமது சிறகுகளைத் தட்டிக் கூவிக்கொள்ளும் இடைவெளிகளில், பேட்டுக்கோழிகள் கேரிக்கொண்டே முத்துலிங்கம் வீட்டுக் குப்பை மேட்டுப் பக்கம் பறந்துசென்று புழுபூச்சி களைத் தேட ஆரம்பித்தன. மரநாய்ப் பயத்துடன் தூங்கி, விழித்திருந்த சேவல்கள் சூரிய ஒளியைக்கண்டு குதூகலித்தன. சூரிய ஒளியில் தூண்டப்பட்ட தமது உணர்வுகளைச் சேவல்கள் பேடுகளிடம் காண்பித்துக்கொள்ள, அந்தச் செல்லச்சேட்டைகளை அனுசரித்துக் கொண்ட பேட்டுக்கோழிகள் நிலத்திலமர்ந்து சேவல்களை மகிழ்வித்துக்கொண்டிருந்தன. இடைவேளைகளில் வயிற்றை நிரப்ப நிலத்தைக் கிளறிக்கொண்டிருந்தன.

***

முத்துலிங்கத்தின் மகன் குமார் கனடா மாப்பிளை. பத்துவருசம் கனடாவிலிருந்து உழைச்சுக் களைத்துப்போன மகனுக்கு முத்துலிங்கத்தார் கலியாணம் கட்டிவைக்க எண்ணி, அவனுக்காகப் பார்த்துவைத்த பெண்தான் சுமதி. சுமதி முத்துலிங்கத்தின் தங்கை மகள். குமாருக்கு வயது முப்பத்துரெண்டு. ஆனால், சுமதிக்கு அவனைவிட பத்துவயசு குறைவு.

இரு குடும்பத்தாரின் ஏற்பாட்டிலும் கலியாணம் முற்றாகிச் சிறப்பாக நடந்தேறியது. அன்று குமாருக்கும் சுமதிக்கும் முதலிரவு. சுமதிக்கு அன்றைய இரவில் எல்லாமே புதிய விடயங்கள்தான். அதனால் அந்த இரவுக்காட்சிகள் மனதில் பதிந்துகொண்டன. இருபத்து ரெண்டு வருடங்களாகத் தனக்கு மட்டுமே தெரிந்திருந்த விடயங்களைத் தனது கணவன் குமாருடன் பகிர்ந்து கொண்டிருந்த சுமதி, அதிகாலை ஐந்தரை மணிக்கு அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். குமாரின் உடல்சந்து அசதியாகும்போதும், உள்ளம் வெளியில் குப்பை கிளறிய சேவல்களைப் போல குமுறிக்கொண்டிருந்தது. அவனது கண்கள் தனதருகே படுத்திருந்த மனைவி சுமதியைப் பார்க்கும்போது மனமோ கனடாவில் தன்னுடன் வேலைசெய்யும் ஆன்சியை எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தது.

***

நேரம் காலை ஏழு மணியைத்தாண்டி அதற்கு மேலும் சில நிமிடங்களைப் பிரசவித்திருந்தது. குப்பை மேட்டில் கிளறிக்கொண்டிருந்த கோழிக்கூட்டம் முத்துலிங்கத்தாரின் மனைவி சரசு தினமும் பாத்திரம் கழுவும் கிணற்றடிப் பக்கம் நகர்ந்து கொண்டிருந்தது. அந்த அணியின் மூத்த உறுப்பினரான கொண்டை மடிந்த குங்குமநிறக் கெண்டைக்கால் சேவல் தலைமையில் கோழிக்கூட்டம் கண்ணில் பட்டவற்றைக் கொத்திக்கொண்டிருந்தது. முதல்நாள் கலியாண மண்டபத்திலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுப் பாத்திரங்களில் எஞ்சியிருந்த உணவுப் பருக்கைகள் கோழிகளின் வயிற்றைக் குளிர்வித்துக் கொண்டிருந்தன. இரு செவிகளில் ஒரு செவி முறிந்திருந்த பாத்திரமொன்றின் விளிம்பில் ஒட்டியிருந்த மீதி உணவுத் திணிக்கையொன்றை கொண்டை மடிந்த சேவல் கொத்திக் கொண்டிருந்தது. உணவை ருசிக்கும் உவப்பில் தனது ஒருகால் சமையல் சட்டியின் உள்ளே போனதுகூடத் தெரியாமல் கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவல் கொத்திச் சுவைத்துக்கொண்டிருந்தது. சாம்பல் பூசிய பொச்சுமட்டையால் பாத்திரத்தைத் துலக்கிக்கொண்டிருந்த சரசு சாம்பலின் உள்ளே புதைந்திருந்த சிறிய கரிக்கட்டையொன்றை எடுத்து கொண்டை மடிந்த கெண்டைமீது வீசியபோதுதான் அந்தச் சேவலால் தனது ஒருகால் சட்டிக்குள் போயிருந்ததை அறியமுடிந்தது. இருப்பினும் தனது காலை எடுத்துவிட்டு சரசு வழித்து எறிந்த உணவுகளை கோழிகள் பங்கிட்டு கலியாண உணவாகச் சுவைத்துக்கொண்டிருந்தன.

***

ஆன்சி ஒரு வெள்ளைக்காரப் பெண். கனடாவுக்கு அகதியாகப் போன சில நாட்களிலிருந்தே அவளைக் குமாருக்குத் தெரியும். குமாருக்கும் ஆன்சிக்கும் ஒரே வயதுதான். ஆன்சி ஏற்கனவே விவாகரத்துப் பெற்றிருந்தவள். அவளுக்கு ஒரு குழந்தையும் உண்டு. குமாரும் ஆன்சியும் வேலை செய்வது ஒரே கம்பனியில்தான். குமார் புதிதாக வேலைக்குச் சென்ற கம்பனியில் ஆன்சி ஏற்கனவே வேலை செய்துகொண்டிருந்தாள். ஏபிசிடி கூட நன்கு பரீட்சையமில்லாத குமார் இரண்டு ஆண்டுகளில் அதே ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசுவதற்குக் காரணமானவள் ஆன்சிதான். குமார் வேலைக்குச் சேர்ந்து ஒருமாதமளவில் ஒருநாள் ஆன்சி தனது வீட்டுக்குக் குமாரை அழைத்திருந்தாள். தனது ஒரே குழந்தையை அரசாங்கப் பொறுப்பில் வளர விட்டிருந்த ஆன்சி குமாரை அன்புடன் அழைத்துக் கொண்டு சென்ற காரணத்தை அன்று குமாரால் உணரமுடியவில்லை.

நேரம் காலை ஏழு முப்பது மணியைக் காட்டியது. ஆன்சியின் ஞாபகங்கள் குமாரை அரவணைத்துக் கொள்ளும்போது அசந்து தூங்கிக்கொண்டிருந்த சுமதி குமாரருகே சென்று அவனை இறுகக் கட்டிக்கொண்டு மீண்டும் அசந்து தூங்கி அந்த இரவின் அலுப்பைப் போக்கிக் கொண்டிருந்தாள். தனது மார்பில் உரசியபடி உறங்கிக்கொண்டிருந்த சுமதியின் தலையை இலேசாகத் தடவியபடி குமாரின் ஞாபகங்கள் மீண்டும் ஆன்சியை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன.

***

நேரம் ஒன்பது மணியைக் காட்டியது. கோழிக்கூட்டம் குதூகலமாகத் தமது கொத்தித்தின்னும் படலத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது. கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவல் மூன்று மணித்தியாத்தில் முப்பது முறை தன்னை உப்பு மூட்டை சுமந்த பேட்டுக் கோழிகளோடு பேசியபடி முத்துலிங்கம் வீட்டு வளவில் சுத்திக்கொண்டிருந்தது. முட்டைகளைப் பிரசவிக்க முனகிக்கொண்டிருந்த பேட்டுக் கோழிகளுக்கு ஒத்தாசையாக நடந்து கொண்ட கொண்டை மடிந்த சேவல் தன்னைப்போன்ற சேவல்கள் சிலவற்றுக்கு பகை உணர்ச்சியுடனேயே தனது பணிகளைப் பிரித்துக் கொடுத்திருந்தது. மீண்டும் ஒரு முறை பாத்திரம் கழுவும் சாம்பல் மேட்டுக்கருகில் இரை தேடிய கொண்டை மடிந்த சேவலும் பேடுகள் சிலவும் கழுவிய பின், பரனில் அடுக்கப்பட்டிருந்த பாத்திரங்களின் கீழிருந்த சருகுகள் சிலவற்றைத் தட்டி, அதனூடே பதுங்கியிருந்த சில கறையான்களைப் பதம் பார்த்துக்கொண்டிருந்தன. கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவல் கால் வைத்து அடிவாங்கிய சட்டி பரனில் கவுண்டபடி அப்படியே அந்தச் சேவலை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது. அதன்பின் அவ்விடத்திலிருந்த கோழிக்கூட்டம் வைக்கோற்பட்டறைப் பக்கம் பாட்டுப்பாடிக்கொண்டே விரைந்தன.

***

ஆன்சி தன்னை அன்புடன் அவளது வீட்டுக்கு அழைக்கும்போது குமாருக்கு எதுவும் புரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆன்சியின் கார் அவளது மாடிக்குடியிருப்புக்குள் நுழையும்போது குமாரின் உள்ளம் சற்றுப் படபடக்கத்தான் செய்தது. அவள் தனது சாவியால் வீட்டுக் கதவைத் திறக்கும்போது அந்தப் படபடப்பு கொஞ்சம் அதிகரிக்கவே செய்தது. ஆன்சி அவனை உட்கார வைத்துவிட்டு குளித்துவிட்டுத் திரும்பும்போதுதான் குமாரின் மூளையை மின்னல் தாக்க உடல் விறைத்து வீழ்ந்தது.

***

கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவல் தனது பேடுகளுடன் உல்லாசமாக மேய்ந்து கொண்டிருந்தது. சரசு அவற்றை அழைத்தபோது சரசுவின் காலடிக்குள் அன்புடன் பின்னிக் கொண்ட கோழிக் கூட்டத்தில கொண்டை மடிந்தவனும் ஒருவன். சரசு போட்ட அரிசித்துணிக் கைகள் கொண்டை மடிந்தவனின் குடலுக்குள் செல்லுமுன்னமே வாயகன்ற பிரம்புக்கரப்பு ஒன்று கொண்டை மடிந்தவனையும் சில பேடுகளையும் தன்னுள் மூடிக்கொண்டது. சற்று நேரத்தில் பேடுகள் வெளியேற்றப்பட கொண்டை மடிந்தவன் மட்டும் கரப்பின் உள்ளே சுற்றிக்கொண்டிருந்தான். வெளியில் நின்றிருந்த சில சேவல்களும் பேடுகளும் வழக்கம் போல் உணவைக் கொத்திக்கொண்டிருந்தன. கொண்டை மடிந்தவனைப் பற்றிக் கணக்கெடுக்காமல் தமது வழக்கமான பணியைக் கோழிக் கூட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது.

***

ஆன்சி குளித்துவிட்டு வெளியில் வரும்போது குமாரின் கண்கள் ஆன்சியைக் கண்ணியமாக மேய்ந்து கொண்டிருந்தன. அவள் அணிந்திருந்த ஆடையில் அவளது அங்கங்கள் குமாரை ஆட்டுவித்துக்கொண்டிருந்தன. ஆன்சி நேராக வந்து குமாரின் அருகே உட்கார்ந் தாள். குமார் ரீவி பார்த்துக்கொண்டிருந்தான். ஆன்சி ரிமோட் கொன்ரோலை வாங்கி ரீவியில் சனலை மாற்றினாள். அது ஒரு கிளுகிளுப்பு ஒளிபரப்பு.



ரீவியைப் பார்த்த கண்கள் மங்கிக் கொள்ள குமாரின் கைகள் ஆன்சி பக்கமாகத் தலைசாய்ந்து கொண்டன. அரைமணி நேரத்தின் பின் குமாரின் முழுப்பதற்றமும் அவனை விட்டு விலகியது. ஆன்சியின் வீட்டில் காலியாயிருந்த அறை ஒன்றுதான் குமாரின் அதன் பின்னரான வாசஸ்தலம்.

ஆன்சிதான் குமாரின் கனடா வாழ்வின் முதற்பெண். ஆனால், அதன்பின் அவன் பாடம் படித்த பள்ளிகள் அங்கே ஏராளம். ஆன்சியின் ஞாபகங்கள் குமாரைத் தாலாட்டும்போது ஒரு அப்பாவி முகம் அவனைப்பார்த்து வெட்கிக்கொண்டு புன்முறுவல் பூத்தது. சுமதி விழித்துக் கொண்டாள். குமாரின் முத்தம் சுமதிக்கும் சுமதியின் முத்தம் குமாருக்கும் சென்று சேரும் கணப்பொழுதுகளில் மார்கழிப்பனி கூட சூடாகி இதம்கொடுத்தது. இடையிடையே இரவு பெய்த மழையின் தூறல்கள் இருவரையும் நனைத்து நின்றன.

***

சுமதி துயிலெழுந்து வெளியே வந்தாள். உறவுகளைப் பார்க்கும்போது சுமதியின் உள்ளம் ஒருகணம் இனம் புரியாத உணர்வில் மாட்டிநின்றது. முதலிரவு முடிந்து வெளியே வரும் பெண்களுக்கு உரித்தான முகபாவனையுடன் அறையிலிருந்து வெளியேறிய சுமதி நேராக வீட்டுக்கு வெளியே வந்தாள்.

அன்றுமுதல் ஆன்சியுடன் கழித்த நாட்கள் குமாருக்குப் பழகிப்போன ஒன்றுதான். ஆனாலும், குமார் திருமணம் செய்ய விரும்பியதை முதலில் விரும்பாத ஆன்சி சில நிபந்தனைகளுடன்தான் அதற்குச் சம்மதித்தாள். ஆன்சியின் வயிற்றில் உருவாகி அழிந்துபோன குமாரின் வாரிசுகள் ஏராளம். ஆனாலும், ஆன்சி நல்லவள். குமாரின் வாழ்க்கையைப் பாழாக்க விரும்புவதில்லை. அடிக்கடி இல்லாவிட்டாலும் அவ்வப்போது மட்டும்தான்.

ஆன்சியின் ஞாபகங்களைக் கலைத்துவிட்டு குமாரும் துயியெழும்பி வெளியே வந்தான்.

***

நேரம் ஒன்பது முப்பத் தைந்து தாண்டியிருந்தது. கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவலை முத்துலிங்கத்தார் குடைந்து குடைந்து பார்த்தார். கழுவிக் காய வைத்திருந்த கறிச்சட்டியை சரசு கொண்டுவந்து முத்துலிங்கத்தாரிடம் கொடுத்தாள். முத்துலிங்கம் கொண்டை மடிந்தவனைப் பார்த்தார். பின் தனது மகனையும் மருமகளையும் பார்த்துக் கூறினார் ''இண்டைக்கு இந்தச் சேவல்... நாளைக்கு ஆடு வாங்குவம்...''.

கொண்டை மடிந்த கெண்டைக்கால் சேவலுக்கு அப்போதுதான் அனைத்தும் புரிந்துபோனது. தான் கால் வைத்துத் தண்டனை வாங்கிய கறிச்சட்டிக்குள் இன்னும் சில நிமிடங்களில் தானே கறியாகப் போகும் கொடுமையை எண்ணிக் கொக்கரித்துக்கொண்டே அது நின்றது. கரப்பில் மாட்டிய கோழியான என்னைக் காப்பாற்ற யாருமே இல்லையா என்ற வேதனையில் தனது குரலை உயர்த்தி கொக்கரக்கோ என்று கூவிக் கூவி அழுது நின்றது.

***

கரப்பில் மாட்டியிருந்த கொண்டை மடிந்த கெண்டைக்கால் கோழியின் நிலைமையும் தனது நிலைமையும் ஒன்றென உணராத சுமதி தனது மாமனாரின் அன்பு உள்ளத்தை எண்ணிப் பூரிப்படைந்தவளாக தனது கணவன் குமாரைப் பார்த்து புன்னகைத்தாள். தான் சுமதியை மாட்டிய கரப்பென்று அறியாத குமாரும் முதலிரவுச் சில்மிஷங்களை எண்ணியபடி அவளது புன்னகைக்குப் பதிலுக்குப் புன்னகைத்தான்.

# முகமூடிகளைக் கழற்றுங்கள்





எப்போதுமே ஓர் இடத்தில் இல்லாமல் அடிக்கடி தாவிக் கொண்டிருப்பது சில ஜீவராசிகளுக்கு மட்டுமல்லாது இலங்கையில் அரசியல் வாதிகள் பலருக்கும் பிறவிக் குணமாகவே இருந்து வருகின்றது. அதுவும் தேர்தல் காலங்கள் என்றால் சொல்லவே வேண்டாம். இத்தகைய கட்சி தாவுதல்களும் கொள்கை மாற்றங்களும் அறம் புறமாகவே நடக்கும். இலங்கையில் இப்போது தேர்தல்களின் பருவம் என்பதால் இத்தகைய தாவுதல்களை பார்த்து ரசிப்பதற்குரிய வாய்ப்பு அப்பாவி ஜனங்களுக்கு இலவசமாகவே கிட்டியிருக்கின்றது.

இருக்கின்ற கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்கு மாறுகின்ற அரசியல் வாதிகள் ஒருபுறமும் ஏற்கனவே பிரிந்து சென்ற கட்சியை நோக்கி மீளவும் 'மனம் திருந்திய மகன்களாக' திரும்புகின்ற அரசியல்வாதிகள் இன்னொரு புறமும் எதிர் எதிர்க் கணியங்களில் நின்று கொண்டு மக்களைப் பரவசப் படுத்தி (?) வருகின்றனர். அந்த வகையிலேயே கூட்டமைப்பின் 'குழப்படிப் பிள்ளைகளுக்கு' நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப் பட மாட்டாது என்ற தொனியில் அண்மையில், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். இக் கருத்து கொளுத்திப் போட்ட பட்டாஸாக் பரபரவெனப் பற்றி எரிந்து எங்கு வெடிக்க வேண்டுமோ அங்கு மிகச் சரியாகவே வெடித்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலின் போது கூட்டமைப்பின் முடிவுக்கு மாறாக ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய சிவாஜிலிங்கம் அவசர அவசரமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். கடந்த காலங்களைப் போல- ஜனாதிபதித் தேர்தலின் போது நடந்ததைப் போல- தவறான முடிவினை எடுக்காது, நிலைமையை அலசி ஆராய்ந்து பொருத்தமான முடிவுகளை எடுத்து தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் ஆக்கபூர்வமான வழியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் அவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அதைப் படித்த போது சாத்தான் ஓதுகின்ற வேதம் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தும் வகையில் ஒரேயணியில் இருந்து வாக்களித்தனர். இது கூட்டமைப்பின் முடிவாகவும் இருந்தது. அதையும் தாண்டி தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை யானோரின் முடிவே இது என்பதும் பொருத்தமானதே. இத்தகைய முடிவின் மூலம் இலங்கையின் 6ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் நம்முடைய வகிபங்கு சிறிதளவேனும் இல்லாமல் போனாலும் கூட, தோல்வியுற்றவர் பக்கமே நாம் வாக்களித்திருந்தாலும் உண்மையில் எம்முடைய அபிலாஷைகளை வெளிப்படுத்துவதில் பெருவெற்றி பெற்றிருக்கிறோம். இத்தகைய வரலாற்றின் மிக முனைப்பான ஒரு தருணத்தில் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் எண்ண அலைகளுக்கு மாறாக என்வழி தனி வழி என்பது போல தமிழ் மக்கள் ஒற்றுமையற்றவர்கள் என்பதை நிரூபிப்பது போல ஜனாதிபதித் தேர்தலில் தனித் தவில் வாசித்த சிவாஜிலிங்கம் இப்போது கூட்டமைப்புக்கு புத்திசொல்லப் புறப்பட்டிருக்கிறார். அதற்காக கூட்டமைப்பொன்றும் தமிழ் இனத்திற்காக தன்னையே அர்ப்பணித்த கட்சியென்றோ அல்லது கூட்டமைப்பின் முடிவால் தான் தமிழ் மக்கள் எல்லோரும் ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை ஆதரித்தார்கள் என்றோ அடையாளப்படுத்திவிடவும் முடியாது தான். மனிதப் பேரழிவொன்று நடந்த போது அதைத் தடுக்க எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் கூட்டமைப்பால் எடுக்கப்படவேயில்லை. இது தவிர விலங்குகள் போல நலன்புரி நிலையங்களில் தம்மை நம்பி வாக்களித்த அத்தனைபேரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும் எந்தவொரு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் முகாம்களுக்குச் சென்று மக்களின் துயரை ஏந்திக் கொள்ள சிறு முயற்சி கூடச் செய்ய வில்லை. ஆனாலும் இன்னமும் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை கொண்ட தமிழ் மக்கள் இருக்கவே செய்கிறார்கள். அந்த நம்பிக்கையை நாடாளுமன்றத் தேர்தலில் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் கூட்டமைப்புக்கு உண்டு. இல்லாவிடின் - மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு முன்னரைப் போலவே மக்கள் நலன் சார்ந்த எந்த நடவடிக்கை யிலும் அக்கறை காட்டாமல் கூட்டமைப்பினர் இருப்பார்களாயின்- அதன் எதிர்கால இருப்பு எவ்வித சந்தே கத்திற்கும் இடமில்லாமல் மக்களால் நிராகரிப்புக் குள்ளாகும். அதனை சரிவர எடை போட்டுக்கொண்டு கூட்டமைப்பு செயற்படுவது போலவே தென்படுகின்றது. எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் அண்மித்த போக்குடன் செயற்பட கூட்டமைப்பு எடுத்துக் கொண்ட முயற்சி சிறுபான்மையினரின் அரசியல் வெறுமைக்கு விடைகொடுக்கக்கூடிய ஓர் ஆரம்பப் புள்ளியாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் தமிழ்- முஸ்லிம் மக்களி டையே முன்னரைப் போல புரிந்துணர்வு, நெருக்கம் என்னும் உறவு நிலைகள் துளிர்த்தெழு வதற்கு இத்தகைய கூட்டுச் செயற்பாடுகள் வலிமை சேர்க்கும்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் இன்னொரு அரசியல் மையமாகக் கருதப்படும் ஈ.பி.டி.பி. கட்சி, மாநகர சபைத்தேர்தலில் தன்னுடைய வீணைச் சின்னத்தைத் தொலைத்து விட்டு, வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிட்டது. இது அக்கட்சி மீது மக்களுக்கிருந்த அபிமானத்தை வெகுவாகக் குறைத்துவிட்டது. ஆகவே நாடாளுமன்றத் தேர்தலின் போது பழைய குருடிகதவைத் திறவடி போல மீண்டும் வீணையை ஏந்திக்கொண்டு போட்டியிடவே ஈ.பி.டி.பி முனைப்புக் காட்டுகின்றது. அப்படிச் செய்தால் ஈ.பி.டி.பி சார்ந்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்துப் போட்டியிட வேண்டிய சூழல் அவர்களுக்கு உண்டு. இதனால் தாம் இது நாள் வரையும் சார்ந்திருந்த கட்சியை அல்லது இனி வரும் காலத்திலும் சார்ந்திருக்கப் போகின்ற கட்சியை எதிர்த்து தேர்தலில் நிற்க வேண்டிய முரண்பாடான நிலைப்பாட்டினையே அக்கட்சி எடுக்கவேண்டியுள்ளது.

ஆனாலும் தேர்தலில் கட்சிகள் வகுக்கின்ற வியூகங்களும், சார்கின்ற கூட்டணிகளும், முன்வைக்கின்ற வாக்குறுதிகளும் மட்டுமே தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பவையல்ல. உண்மையில் மக்களிடத்தே இயல்பாக உருவாக்கப்படும் பொதுவயத் தன்மையான கருத்தியல் உருவாக்கமே தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் வல்லமை பெற்றமாக விளங்குகின்றது. இத்தகைய பொதுக் கருத்தியல் ஒன்று தான் தமிழர் பிரதேசங்களில் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளை வெல்வதற்கும் காரணமாயிற்று. அத்தகைய கருத்தியல் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை அரசியல் கட்சிகளுக்கு உண்டு. மக்களின் கருத்தியல் என்பது வீராவேசமான பேச்சுகளாலோ, பசை தடவிய வார்த்தைகளைக் கொண்டிருக்கும் கவர்ச்சியான அறிக்கைகளாலோ அல்லது சலுகைகளாலோ உருவாக்கப்படக்கூடியதல்ல. அது புறச் சூழல்களின் விளைவாக தானாகவே சூல் கொள்ளக் கூடியது. இங்கு கருத்தியல் உருவாக்கம் என்பது அடிப்படையில் அத்தகைய கருத்தியலை உற்பவிக்கக் கூடிய புறச்சூழலை உண்டாக்குவது தான். இங்குதான் அரசியல் கட்சிகள் மிக அவதானத்தோடு தமது நகர்வை முன்னெடுக்க வேண்டியுள்ளது. வெறுமனே தேர்தல் இலாபத்தை மையமாகக் கொண்டு செயற்படும் எந்தவொரு அரசியல் கட்சியும் மக்களின் மனங்களில் தமக்குச் சார்பான கருத்தியலை உருவாக்க முடியாதிருக்கும். ஏனெனில் மக்களுக்கு- அதுவும் தமிழ் பேசும் மக்களுக்கு- எல்லாமே தெரியும். முகமூடிகளைக் கழற்றி எறிந்து விட்டு தம்முடைய நிஜ முகத்தோடு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்க்கும் நடவடிக்கையில் எந்தக் கட்சி தன்னை அர்ப்பணிக்கிறதோ அந்தப் பக்கமே நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகள் என்னும் காற்று வீசக்கூடும். ✱

**-யாதுமானவன்**

---

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# யாழ்ப்பாணம் அல்ல... 'யாப்பா பட்டுவ'!



இந்தத் தேர்தல் முடிவுகள் வேறு ஒரு செய்தியையும் தெளிவுபடுத்தியிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் சரத் பொன்சேகாவுக்கு கிடைத்துள்ள அதிகப்படியான வாக்கு அப்பகுதியில் கருணாவின் செல்வாக்கு குறைந்து விட்டது என்பதை எடுத்துக் காட்டியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சரத் பொன்சேகா 69 சதவிகித வாக்குகளைப் பெற்றிருக்கிறார். அப்பகுதியில் ஆட்சி நடத்தி வரும் கருணாவின் ஆதரவு ராஜபக்ஷவுக்குத் தான் இருந்தது என்ற போதிலும், மக்கள் கருணா சொன்னதைக் கேட்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் யோசனை யைத்தான் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இதனால் இனி ராஜபக்ஷேவிடம் கருணா முன்பு போல செல்வாக்கோடு இருக்க முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது.

போரில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ள ராஜபக்ஷ தமிழர்களுக்கு சம உரிமை அளித்து இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பார் என்று நாம் நம்ப முடியாது. சிங்களப் பேரினவாதத்தை மேலும் எண்ணெய் ஊற்றி உக்கிரமாக எரிய வைப்பதன் மூலமே தன்னை பலமாக வைத்துக்கொள்ள முடியும் என்பது ராஜபக்ஷவுக்குத் தெரியும். எனவே, அத்தகைய அணுகுமுறையைத்தான் அவர் மேற்கொள்வார். அதன் அடையாளங்கள் இன்று அங்கே வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்து விட்டன. புதினப்பலகை என்ற இணையதளத்தில் புகைப்படங்களோடு வெளியாகியுள்ள கட்டுரை இதைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது.

'ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரைக்கும் வீதியின் இரண்டு புறங்களும் இருந்த மரங்கள் எல்லாம் இன்று முற்றாக வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. அங்கெல்லாம் இருநூறு மீற்றர் தூரத்துக்கு ஒன்றாக காவல் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த காவல் அரண்களுக்கு அருகில்தான் மீளக் குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்களின் குடியிருப்புகள் உள்ளன. சிறுசிறு இந்துக் கோயில்களுக்கு உள்ளேகூட புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு தமிழ் மக்களின் தனித்துவமான சமய அடையாளம் சிதைக்கப்படுகிறது. வழிகாட்டுப் பலகைகள் எல்லாவற்றிலும் இப்போது ஊர்ப் பெயர்கள் சிங்களத்தில் இரண்டு தடவைகள் எழுதப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் என்ற ஊரின் பெயர் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு, அதற்கு மேல் யாழ்ப்பாணம் என்று உச்சரிக்கும் படியாக சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது. அதற்குக் கீழே அந்த ஊருக்கு சிங்களவர்கள் தற்போது சூட்டியுள்ள சிங்களப் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு 'யாப்பா பட்டுவ' என்று சிங்களவர்கள் பெயர் சூட்டியுள்ளனர். வணிகத் தலங்கள் யாவும் சிங்களவர்களின் ஆதிக்க மையங்களாக மாறியுள்ளன. சிறுசிறு நடைபாதைக் கடைகளைக்கூட அவர்களே நடத்துகிறார்கள். தமிழர்களின் கோட்டையாகக் கருதப்பட்ட கிளிநொச்சியில் எங்கு பார்த்தாலும் இப்போது சிங்கள வியாபாரிகளே நிறைந்திருக்கிறார்கள். கிளிநொச்சி நகரில் மிகப்பெரிய புத்த வழிபாட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இலங்கை ராணுவத்தின் போர் வெற்றியை அறிவிக்கும் விதமான பல நினைவுச் சின்னங்கள் தமிழர் பகுதிகள் எங்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தமிழர் பகுதிகள் யாவும் சிங்களமயப் படுத்தப்பட்டு வருகின்றன...' என அக்கட்டுரை கூறுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, அங்கு தமிழர்கள் சமத்துவத்தோடு நடத்தப் படுவதற்கான எந்தவித உத்தரவாதமும் இனி இல்லை என்பதே வெளிப்படையாகத் தெரிகிறது.

பேரினவாதத் திமிரில் திளைத்துக் கொண்டிருக்கும் ராஜபக்ஷவிடம் இந்திய அரசு வெளிப்படையாகச் சில விஷயங்களை இப்போதாவது எடுத்துச்சொல்லவேண்டும். அங்கு வாழும் தமிழர்களுக்கு நியாயமான தீர்வை முன்வைக்குமாறு வலியுறுத்தவேண்டும். இந்திய அரசின் இலங்கைக் கொள்கையை தீர்மானித்துவந்த எம்.கே.நாராயணன் போன்றவர்கள் செல்வாக்கிழந்துள்ள நிலையில் தமிழக கட்சிகள் பொறுப்போடு செயல்பட்டால் ஈழத் தமிழர்களுக்கு இப்போதாவது ஒரு நல்ல வழி பிறக்கும்.

*நன்றி-விகடன்*

மனதைக் கட்டுப்படுத்தி சரியான வழியில் முயல்பவனுக்கு வெற்றி நிச்சயம்

# "மனநலமே" மாபெரிய செல்வம்

"மனநலமே மாபெரிய செல்வம்"

செல்வங்களில் எல்லாம் மிகப் பெரிய செல்வம் மனநலம் குன்றாமல் வாழ்வதுதான். ஒருவருக்குத் தான் உட்கொள்ளும் உணவும் பருகும் நீரும் நஞ்சானால் அவரது நிலைமை எப்படி இருக்கும்? இதே போல நமக்குள்ளே, நம்மை விட்டு ஒரு போதுமே பிரியாத, பிரிக்கப்படமுடியாத உள்ளம் எனும் மதிப்பிட முடியாத பொருள் நஞ்சானால் நமது நிலைமை எப்படி இருக்கும்?

நமது சிந்தனை, செயற்பாடு, அதன் விளைவாக ஏற்படும் பிரதிபலிப்பு




எல்லாமே விஷம் கலந்த ஒன்றாக மாறி அது நம்மை அழித்துப் பிறரையும் அழித்து விடும்.

தூய்மையற்ற நமது மனத்தினால் எழுப்பப்படும் எண்ணங்கள் ஒரு போதும் ஒரு எல்லைக்குள் நின்று செயற்படுவதில்லை. அதற்குக் கட்டுப்பாடோ வரம்புகளோ இல்லை. ஏனெனில் இந்தக் கட்டுப் பாடுகளையும் வரம்புகளையும் சம்பந்தப்பட்டவரைத் தவிர வேறுயாரும் வகுக்க முடியாது.

அதே போன்றுதான் ஒரு தூய்மையான மாசற்ற உள்ளத்திலிருந்து பிறப்பெடுக்கும் உணர்வுடனுக்கும், மன எண்ணங்களுக்கும் எல்லைக் கோடுகள் இல்லை. அது எல்லையற்ற இப் பிரபஞ்சத்தில் புகுந்து நன்மைமையை ஏற்படுத்தப் போதுமானதாக இருக்கும்.

நல்ல உள்ளத்தின் சிறப்பு காலங்களை வென்று சரித்திரத்தில் தடம் பதிக்கும் அதன் புகழ் வான் நோக்கி உயரும்.

உங்களை நல்லவரா அல்லது கெட்டவரா என்று மற்றவர் கூறுவதற்கிடையில் நீங்களே உங்களை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் உங்களை நீங்கள் ஆராய்ச்சி செய்யாவிட்டால் உங்களை அறியாமலே பிறர் உங்களை ஆராய்ந்து பார்க்கத் தலைப்பட்டு விடுவார்கள். அப்பொழுது அந்த நிலைமையை உங்களால் எதிர்கொள்ள முடியாதிருக்கும்.

எமக்குள் உள்ள நோயைப் பற்றி, அல்லது சௌக்கியத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் வைத்தியரை நாடிச் செய்கிறோம். அப்பொழுது மருத்துவர் நம்மைப் பரிசோதிக்கிறார். மருந்து மாத்திரைகள் தருகிறார் அவற்றுக்குப் பணம் கொடுத்துப் பெற்றுக்கொண்டு வந்து பக்குவமாகப் பாவிக்கிறோம்.

நம்மிடமிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் வைத்தியர் வெளிப் படையாக நம்மைப் பரிசோதித்ததன் அடிப்படையிலுமே இத்தகைய மருந்து மாத்திரைகளைத் தர வைத்தியரால் முடிந்தது. இது வெளிப்படையாக நடந்த விடயம்.

ஆனால், நமது மனதை வைத்தியரால் பரிசோதிக்க முடிந்ததா? இல்லை. அப்படியென்றால் நமது மன்தைப் பரிசோதிக்கத் தகுந்த வைத்தியர் யாராக இருக்க முடியும்? நமது உடம்பிலுள்ள புண் ஒன்றை அல்லது கட்டியைத் தொட்டுப்பார்த்து அதன் வலியைப் பற்றி வைத்தியரால் கேட்டுத்தான் அறிந்து கொள்ளமுடியும்; ஆனால், வைத்தியர் எவ்வளவுதான் நிபுணத்துவம் பெற்றவராக இருந்தாலும் நோயின் வலியை வைத்தியரால் உணர முடியாது. அது அந்த சம்பந்தப்பட்ட நோயாளியால் மட்டுமே தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்.

வெளியே, கண்ணுக்குப் பலப்படும் ஒரு நோயின், அதன் வலியின் நிலைமையே இப்படியென்றால் கண்ணுக்குப் புலப்படாத வெளியில் தோற்றமளிக்காத உள்ளத்தின் வலியை யார் அறிந்து கொள்வது? அதனை மாசு படாமல் யார் பாதுகாப்பது? அதற்கு நோய் ஏற்பட்டால் யார் வைத்தியம் செய்வது?

இது பிறரால் முடியாத காரியம்.! எப்போதுமே தூய்மையுடனிருக்க வேண்டிய இந்த உள்ளமெனும் உன்னதமான பொருள் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

உங்களுடைய மனம் எப்படி இருக்கிறது? முதலில் நீங்கள் அதைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். மனதை நீங்கள் அறிந்து

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

கொண்டால் அதன் பின்னர் அனைத்துக் காரியங்களும், அனைத்து வழிகளும் இலேசானதாக இருக்கும்.

உங்கள் மனதைப் பற்றி உங்களால் தெரிந்து கொள்ளமுடியவில்லை என்றால் மற்றவர்களைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் எப்படி உங்களால் அறிந்து கொள்ளமுடியும்?

பெரும்பாலானோர் தம் மனதைப் பற்றியும் அதன் உணர்வுகளைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பதில்லை. இதனால் அவர்கள் திசை தெரியாமல் தடுமாறுகிறார்கள். துயரத்தோடு நிம்மதியிழந்து காலங்கழிக்க வேண்டியிருக்கிறது. தோல்வியடைந்து துவண்டு போகிறார்கள். அதன் விளைவாக தனக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கிறார்கள்.

மன நலமென்பது மனித வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளிலும் பின்னிப் பிணைந்து பொறுப்புணர்வோடு கூடிய செயல்பாடுகளால் ஆக்கப்பட்டதாகும். அநியாயமான, வன்முறையான, சிக்கல் நிறைந்த இவ்வுலகில்


உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள்
தொடர்பான கேள்விகளுக்குப்
பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாரச்சி
மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com


வெற்றியிலும் தோல்வியிலும் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய பக்குவ நிலையாகும்.

நலம் என்பது உடல், உள்ள, உறவு, ஆன்மீக இணக்கம் இவற்றின் சமநிலையும் ஒருங்கிணைவுமாகும்.

தனிமனித சிறப்பியல்புகளும், பண்பலகுகளும் மனநலமுள்ளவரிடம் நிச்சயமாக இருக்கும். ஒருவரை மனநலமுள்ளவராகக் காட்டுவதே இத்தகைய தனித்தன்மைகள்தான்.

நலம் என்றாலே முழுமை என்றுதான் பொருள். உடல் மனதைப் பாதிக்கும்; மனம் உடலையும், சமூக உறவையும் பாதிக்கும்; இதனால் இயற்கையோடும் இறைவனோடும் தொடர்பு அற்றுப்போகும். ஈற்றில் இழப்புகள்தான் மிஞ்சும்.

## பிழையான வழியில் செல்லும் என் நண்பியை மீட்டெடுப்பது எப்படி

**கேள்வி:** என் நண்பிக்கு வயது 24 அவள் ஒருத்தரைக் காதலித்தாள். அவளது காதலன் ஏற்கனவே திருமணம் முடித்து மனைவி இறந்து போனவுடன் இரண்டாவது திருமணமும் செய்துள்ள ஒருத்தர். இந்த விடயங்கள் பின்னர்தான் தெரிய வந்தன. தெரிய வந்தாலும் இன்னமும் அவள் அவன் மீது பித்துப் பிடித்தவள் போல் உள்ளாள். ஒரு கட்டத்தில் தற்கொலை செய்து கொள்ளவும், அதன் பின்னர் அவனது இரண்டாவது மனைவியைக் கொலை செய்யவும் அவள் சிந்தித்தாள். இப்பொழுது ஓரளவு அமைதியாக உள்ளாள். அவன் மீது கொண்ட மோகம் தற்போது அறவே போய் விட்டதாகவும் கூறுகிறாள். இருந்தாலும் இப்படி அவள் கூறுவதை என்னால் முழுமையாக நம்பமுடியாமல் உள்ளது. இந்த விடயங்கள் அவளது வீட்டார் எவருக்குமே தெரியாது. அவன் அவளது வீட்டாருடன் சிறந்த 'நடத்தை' மாதிரி நடந்து கொள்வதால் அவர்கள் சந்தேகிப்பதில்லை. என் நண்பி மீண்டும் பிழையான முடிவுகளை எடுத்துப் பாதிக்கப்படுவாளா, இவளை மீட்டெடுப்பது எப்படி?



**பதில்:** உங்கள் நண்பியை முதலில் யதார்த்த உலகத்துக்கும் நிஜ வாழ்க்கைக்கும் கொண்டு வரவேண்டும். தனது காதலன் ஏற்கனவே மனைவியைப் பறிகொடுத்து, பின்னர் இன்னொருத்தியைத் திருமணம் செய்திருக்கிறான் என்று தெரிந்ததும் அவனை வேறு கண்ணோட்டத்தில் அணுகும் உங்கள் நண்பி நிஜ வாழ்க்கையையும் நியாயங்களையும் ஏற்க மறுக்கும் ஒரு வித மனநோய்க்கு உட்பட்டிருக்கிறார். ஒருவித சிதைந்து போன மன ஆளுமையால் பாதிக்கப்படுபவர்கள் இத்தகைய நிலைமைக்கு வந்து சமூக விரோதச் செயல்களைச் செய்யக்கூடும்.

முதலில் இந்த விடயத்தை அவளது பெற்றோரிடம் அவள் வெளிப்படையாக தெரிவித்துக் கொள்ளுமளவுக்கு அவளுக்கு ஆலோசனை கூறுங்கள். தனது காதலன் இவன்தான் என அவள் கருதும் அந்த நபரிடமும் இவள் படும் அவஸ்தையையும், அதனால் ஏற்படப்போகும் விபரீதங்களையும் நடுநிலையாளரான நீங்களோ அல்லது மற்ற நண்பிகள் எவருமோ எடுத்து சொல்ல முன்வர வேண்டும். அவளோடு நீங்கள் இன்னமும் நெருங்கிப் பழகி பொழுது போக்கு மற்றும் சும்மா இருந்து யோசிக்க அவகாசமில்லாத வேலைகள் இப்படி ஏதாவதிலும் அவளை ஈடுபடுத்துவது நல்லது முயற்சி செய்யுங்கள். வெற்றியளிக்கலாம்.

**கேள்வி:** நான் ஒரு தொண்டர் நிறுவனப் பிரதிநிதி, கடந்த 3 வருட காலமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் ஓர் ஊரில் பணி செய்து வருகின்றேன். ஆயினும் எனக்கு இந்த மக்களோடு வேலை செய்வதில் அலுப்புத் தட்டுகிறது காரணம்; இன்னமும் உதிர்பார்ப்புடனேயே அதாவது நிறுவனங்களோ அரசாங்கமோ ஏதாவது தமக்குத் தரமாட்டாதா என்று நான் ஏங்குகிறார்கள். ஏன் இந்தப் போக்கு? மக்களது எதனையும் இனாமாக எதிர்பார்க்கும் போக்கை நீக்க வழியில்லையா?

**பதில்:** நீண்ட காலச் செயற்பாடுகளைப் பற்றிச் சிந்திக்கும் சகலருக்கும் உங்களுக்கு எழுவதைப் போன்ற ஏக்கமும், கவலையும் உண்டு. இது நியாயமான ஆதங்கம் தான். மக்களை எதற்கெடுத்தாலும் எதிர்பார்போடு வைத்திருக்கும் கலாச்சாரம் அரசின் நலனோம்பு சேவைகளிலிருந்து ஆரம்பித்துவிட்டது. பின்னர் நாட்டில் உருவாகிய தன்னார்வம் கொண்ட அமைப்புகளும் மற்றும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களும் இதற்கெல்லாம் மேலே சென்று மக்களை இன்னுமின்னும் எதிர்பார்ப்புள்ளவர்களாக ஆக்கிவிட்டிருக்கின்றன.

இல்லாத இயலாத ஏழை எளியவர்களைக் கைகொடுத்து தோள்கொடுத்துத் தூக்கிவிட வேண்டியது மனிதாபிமானப் பணிதான். அது பேருதவியாகவும் பெரும் தர்மமாகவும் இருக்கும். இதற்காகப் போய் வலிந்து கட்டிக்கொண்டு எதற்கெடுத்தாலும் உதவுகிறோம் என்று முன்னிற்பது தங்கத்தினால் செய்த ஊசியைக் கொடுத்து அவர்களது கண்களையே குத்திக்கொள்ளுங்கள் என்று கூறுவதற்கு ஒப்பானது.

உடலை வருத்தி உழைத்து அதில் அவர்களது உள்ளம் மகிழ்வதற்கு எல்லோரையும் தயார்படுத்த வேண்டும்.

இல்லாவிட்டால் சதா நமது மக்கள் உலகவங்கியிடமும் சர்வதேச ஜாம்பவான் நாடுகளிடமும் கையேந்த வேண்டித்தான் இருக்கும். அப்பொழுது நமது தன்மானம் இருந்த இடம் தெரியாமல் பறக்கும். இளைஞர் சமுதாயம் இது பற்றி அவசரமாகவும் அவசியமாகவும் சிந்திக்க வேண்டும்.

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.



# பெண்களிடம் காணப்படும் இரும்புச் சத்துக் குறைபாடு

இரும்புச்சத்து குறைபாடு இன்று பெண்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றது. இந்த குறைப் பாட்டை தீர்க்க என்ன செய்யலாம் என்று கடந்த வாரம் பார்த்தோம். இந்த வாரம் இரும்புச் சத்துக் குறைபாட்டால் நோயாளிகளிடம் காணப்படும் வேறு சில நோய்க்குறிகள் பற்றி பார்போம்:

மலச் சிக்கல், தூக்கமின்மை, படபடப்பு, பிரகாசமான வண்ணங்கள் தோன்றுதல், மயக்கம், மன அழுத்தம், மூச்சுத்திணறல், தசைகள் முறுக்கேறுதல், மாதவிலக்கு தவறுதல், மரத்துப் போதல், எரிச்சல், மாதவிலக்கின் போது அதிக உதிரப் போக்கு, குறட்டை, நாக்கு தடித்தல், எளிதில் உடையும் நகங்கள், பசியின்மை, என்பனவாகும்.

**குறைபாடுக்கான அடிப்படைக் காரணிகள்**

நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவில் இருந்துதான் உடலுக்குத் தேவையான இரும்புச் சத்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால், உடலுக்குள் செல்லும் 10-20 கிராம் இரும்புச் சத்தில் 1மி.கி. இரும்புச் சத்தை மட்டுமே உடல் கிரகித்துக் கொள்கிறது. எனவே சமச்சீரான இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம்.

**உடல் மாற்றங்கள்**

குழந்தைகள் மற்றும் வாலிபப் பருவத்தில் உடலில் மாற்றங்கள் நிகழும் போது அதிக அளவு இரும்புச் சத்து மற்றும் சிகப்பு ரத்த அணுக்கள் தேவைப்படும். அதே போல் கருவுற்ற காலத்திலும் குழந்தைக்கு பாலூட்டும் காலத்திலும் பெண்களுக்கு அதிக அளவு இரும்புச் சத்து மற்றும் சிகப்பு ரத்த அணுக்கள் தேவைப்படும்.

**இரைப்பைக் குடல் பிரச்சினைகள்**

இரைப்பைக் குடல் அறுவை சிகிச்சைக்குப் பிறகு இரும்புச் சத்து உறிஞ்சுதன்மை குறைபாடு சாதாரணமாகக் காணப்படும். உணவில் உள்ள இரும்புச் சத்தின் பெரும் பகுதியை மேற்புற சிறு குடல் உறிஞ்சிக் கொள்ளுவதால் உடலுக்குத் தேவையான முழுமையான இரும்புச் சத்து கிடைக்காமல் போகும். இரைப்பைக் குடல் குழாயில் ஏற்படும் பிரச்சினைகள் இரும்புச் சத்து உறிஞ்சுந் தன்மையைப் பாதிப்பதால் இரும்புச் சத்துக் குறை பாடு நிச்சயம் காணப்படும்.

**இரத்த இழப்பு**

அதிக அளவில் ரத்த இழப்பு ஏற்பட்டாலும் இரும்புச் சத்து குறைபாடுக்கு வழிவகுக்கும். இரைப்பை குடல், மாதவிலக்கு மற்றும் காயம் காரணமாக ஏற்படும் ரத்த இழப்புகளை உதாரணத்திற்குக் கூறலாம்.

**மலேரியா**

இரும்புச் சத்து குறைபாட்டுக்கு சில பகுதிகளில் மலேரியா நோயும் ஒரு வகையில் காரணியாகிறது. குடல்களில் தோன்றும் கொக்கிப் புழுக்கள், நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைபாடு, எயிட்ஸ்/எச்.ஐ.வி, நுண் ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் மரபியல் கோளாறுகள் ஆகியவையும் இரும்புச் சத்துக் குறைபாட்டுக்கு வழிவகுக்கின்றன. ✱




தொகுப்பு: சாந்தி

## சமாதானம்

"தர்மம் என்பது வறியவர்க்கு வழங்குவது; தானம் என்பது தன்னிலும் உயர்ந்தோருக்குத் தரும் காணிக்கை.

தானத்தில் சிறந்தது அன்னதானம்; அன்ன தானத்திலும் ஆயிரம் மடங்கு சிறந்தது அறிவுதானம்.

அறிவு தானத்தைவிட பன்மடங்கு சிறந்தது நிதானம்; நிதானத்தை விட மிக மிக உயர்ந்த தானம் சமாதானம்" என்கிறார் வாரியார்.

**வளமான வாழ்க்கைக்கு வாரியார் சொன்ன கருத்து...**

# சகோதரிகளின் பார்வைக்கு...

## ஆசை வார்த்தை காட்டி மோசம் செய்வாரோ?

நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது உயர்தர பரீட்சை முடிந்த உடனேயே இந்த நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகள் இங்கு வேலை செய்கிறேன். நல்ல சம்பளம். தொழில் முன்னேற்றம் எல்லாம் இருக்கிறது. ஆனால், மன நிம்மதி இல்லை. அதற்கு காரணமும் இந்நிறுவனமே. நான் வேலை செய்யும் முதலாளியின் தம்பியும் இங்கு தான் எனக்கு உயர் பதவியில் இருக்கிறார். ஆரம்பத்தில் நண்பர்களாக இருந்த நாம் காலபோக்கில் காதலர்களாக ஆனோம். இரண்டு வருடங்கள் எங்களுடைய காதல் இனிதாகவே இருந்தது. இது எப்படியோ என் சக ஊழியர்கள் மூலமாக அவருடைய தாயாருக்கு தெரிய வர என் முதலாளி தொடக்கம் அவருடைய அண்ணன் தம்பிகள் அனைவரும் எங்கள் இருவரையும் வேவு பார்க்க ஆரம்பித்தனர்.

என் நிறுவன வேலையிலும் சரி, என்னுடைய பழக்க வழக்கங்களிலும் சரி எந்த வித குறைப்பாட்டையும் கண்டு கொள்ளாத என்னுடைய முதலாளியும், அவருடைய தாயாரும் என் காதலனை கண்டித்து வைத்தனர். இது நடந்து ஒரு சில மாதங்களுக்குள் அவருக்கு வேறொரு பெண்ணை பார்த்து திருமணம் நடத்தி வைத்தனர். அந்த திருமணத்திற்கு நானும் சென்றிருந்தேன் எங்கள் இருவர் மனதிலும் காதல் வாழ்ந்து கொண்டே இருந்தது.



அவர் தன்னுடைய குடும்பத்தார்களுடைய வற்புறுத்துதலினால் தான் இந்த திருமணத்திற்கு சம்மதித்ததாகவும், என்னை தன்னால் என்றுமே மறக்க முடியாது என்றும் எங்கள் காதலை விட்டு பிரிய முடியாது என்றும், ஏன் என்னை பார்க்காமல் ஒரு நாள் கூட தன்னால் இருக்க முடியவில்லை என்றும் பல வார்த்தைகளை கூறினார். நானும் நம்புகிறேன். காரணம் நானும் அவர் மீது கொண்ட காதல் உண்மையானது. இன்னொரு பெண்ணுக்கு அவர் கணவராவதற்கு முன்பே நானும் அவரும் மனதார காதலித்து ஒருவர் மனதில் ஒருவர் நீங்கா இடம் பிடித்து விட்டோம். என்னாலும் அவரை எந்தளவிலும் குற்றம் சொல்ல முடியாது. இப்போது அவருக்கு நான்கு வயதில் ஒரு பெண் குழந்தையும் உண்டு. எங்களுடைய காதலும் வாழ்கின்றது.

என் உயிர் சிநேகிதி ஒருத்திக்கு இந்த விடயம் தெரியும். அவள் என்னிடம் இது எல்லாம் தவறு. திருமணத்திற்கு முன்பு அவர் உன்னை காதலித்திருக்கலாம். ஆனால், இப்போது அவர் திருமணம் முடித்து ஒரு குழந்தைக்கும் தந்தையாகி விட்டார். இனியும் அவரை நீ காதலிப்பது தவறு. உன் எதிர் கால வாழ்க்கையை வீணடிக்காதே என்கிறாள். அவள் எனக்கு எத்தனையோ திருமணங்கள் பேசுகிறாள். ஆனால், அத்தனையும் கைக்கூடாமல் போகிறது. சரி அவள் கூறுவது போலவே நான் இன்னொரு பெண்ணுடைய வாழ்க்கையில் நுழையாமல் இருக்க வெளிநாட்டுக்கு சென்று விடுவோம் என்று முயற்சி செய்தேன் அதுவும் சரிவரவில்லை. இந்த விடயங்களை அவரிடம் கூறினால் என்னை விட்டு பிரிய முடியாது, பார்க்காமல் இருக்க முடியாது என்று கூறுகிறார்.

சரி அப்ப இருவரும் சேர்ந்து வாழ்வோம் என்னை திருமணம் செய்யுங்கள் உங்கள் மனைவியையும் பாருங்கள் என்னையும் பாருங்கள் என்றாலும் அதற்கும் வெவ்வேறு சாட்டுக்களைச் சொல்லி தட்டிக்கழித்து வருகிறார். இதைக் கேட்ட பின் என் நண்பி இன்னும் மும்முரமாக எனக்கு திருமணம் பேச ஆரம்பித்துவிட்டார்.

நானும் சராசரி பெண்தானே? எனக்கும் ஆசைகள், பாசங்கள் எல்லாம் இருக்கின்றன. காதல் என்று காதலனை நம்புவதா? அல்லது நட்புத் தான் சிறந்தது என்று என் நண்பியை நம்புவதா?

மிகுந்த குழப்பத்தில் உள்ளேன். எனக்கு நல்லதொரு பதிலை தாருங்கள் சகோதரிகளே.

பெயர் குறிப்பிடாத வாசகி



## பனீர் சில்லி

### சமையல் குறிப்பு:

**தேவை:**

250 கிராம் பனீர், 200 கிராம் முட்டைக்கோஸ், 20 கிராம் முளைக்கட்டிய பயறு, 20 கிராம் சிவப்பு மற்றும் மஞ்சள் நிற குடை மிளகாய், 20 கிராம் குட்டி சோளம்

**செய்முறை:**

பனீரைச் சிறிய துண்டுகளாக வெட்டி, தந்தூரிக் கம்பியில் மாட்டி சூடு செய்யவும். அடுத்து முட்டைகோஸ் முளைக்கட்டிய பயறு, குடை மிளகாய் என்பவற்றை ஸ்டீம் செய்துக் கொள்ளவும். பின்னர் பார்லிக்யூ சோஸில் அனைத்தையும் சேர்த்து வேகவைக்கவும் சோறு அல்லது நூடில்ஸ் உடன் சேர்த்து பறிமாறவும்.

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும் **சகோதரிகளின் பார்வைக்கு** நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.

இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.



# ஸ்னேகா, நயன், நமீதா இணையும் புதிய படம்!

தெலுங்கில் நடிக்கும் பாலகிருஷ்ணா, தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாதவர். கிருஷ்ணா என்பதற்கேற்ப ஒரே படத்தில் பல கோபிகர்களுடன் கொஞ்சும் ரமணா இவர். கோபிகர்கள் என்றால் ஓரமாக வந்து நிற்கும் துக்கடா நடிகைகள் அல்ல. ஒவ்வொருவரும் ஒரு கோடி வாங்கும் முன்னணிகள். தற்போது இவர் தெலுங்கில் 'சிம்ஹா' என்ற படத்தில் நடிக்கிறார். சிங்கத்துக்குதான் ஒன்றுக்கு மேற்பட்ட துணை இருக்குமே. பாலகிருஷ்ணாவுக்கும் இருக்கிறது.

தமிழ், தெலுங்கு மொழிகளில் முன்னணியில் இருக்கும் நயன்தாரா, நமிதா, சினேகா மூவரும் இந்தப் படத்தில் பாலகிருஷ்ணாவுக்கு ஜோடி. மூவருக்கும் டூயட்டும் சில காட்சிகளும் கியாரண்டி. படம் அங்கு தோல்வியடைந்தாலும் இந்த நடிகைகளுக்காக தமிழில் டப் செய்யப்படும் என்பதும் உறுதி. நீங்கள் அடிக்க வரமாட்டீர்கள் என்றால் இன்னொரு தகவல். நாம் இங்கு சினேகா என்று குறிப்பிட்டிருப்பது நமது ஹோம்லி சினேகா அல்ல. தெலுங்கில் கவர்ச்சி புயலாக வீசிக்கொண்டிருக்கும் சினேகா உல்லல். என்ன... சினேகா ரசிகர்கள் சந்தோசம்தானே?

# 4 இளைஞர்கள் பற்றிய கதையுடன் வெய்யோன்!

*நான்கு இளைஞர்கள். அவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம். வேலை கிடைத்த பின் அந்த வேலையில் சேர முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் சந்திக்கின்றனர். அப்படி அவர்களின் பிரச்சினைகள் எப்படி, யாரால் தீர்க்கப்படுகின்றன என்பதுதான் 'வெய்யோன்' படத்தின் கதை. 'வெய்யோன்' என்றால் 'சூரியன்' என்று பொருள். முதலில் 'சூரியன்' என்றுதான் பெயர் வைத்தார்கள். ஏற்கனவே 'சூரியன்' படம் வந்துவிட்டதால் இந்த 'வெய்யோன்'. இப்படத்தை அருண் பிலிம் எண்டர்டெயின்மென்ட்ஸ் சார்பாக மும்பையைச் சேர்ந்த அருண்குமார் துளசி என்பவர் தயாரிக்கிறார். புதுமுகங்களான சந்தீப், அலெக்ஸ், வீரா, பிருந்தா, தர்ஷின் ஆகியோர் நடிக்க, தர்மலிங்கா என்ற புதியவர் இயக்குகிறார். இசை எஸ்.ஆர். ருபேஷ்.*

# திரிஷாவின் சம்பளம் இரண்டரைக் கோடி ரூபா!

திரிஷா தனது சம்பளத்தை இரண்டரைக் கோடி ரூபாவாக உயர்த்தியுள்ளார். தெலுங்கில் வெங்கடேஷ் ஜோடியாக நடித்த 'நமோ வெங்கடேசா' படம் சமீபத்தில் வெளிவந்தது. இப்படத்துக்கு ஒன்றரைக் கோடி ரூபாதான் சம்பளம் வாங்கினாராம்.

'நமோ வெங்கடேசா' ஆந்திரா முழுவதும் சக்கை போடு போடுகிறது. தியேட்டர்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது. அந்தப் படத்தின் வெற்றியால் திரிஷா தனது சம்பளத்தை திடீரென உயர்த்தியுள்ளார்.

'டான் சீனு' என்ற பெயரில் தயாராகும் தெலுங்குப் படத்துக்கு திரிஷாவை ஒப்பந்தம் செய்ய அணுகினார்களாம். அப்போது அப்படத்தில் நடிக்கவேண்டுமாயின் இரண்டாரைக் கோடி ரூபா சம்பளம் கேட்டாராம் திரிஷா.

'காட்டா மீட்டா' என்ற ஹிந்திப் படத்துக்கு திரிஷா இவ்வளவு சம்பளம் வாங்கவில்லையாம். தமிழில் சிம்பு ஜோடியாக நடித்து விரைவில் வெளிவரவுள்ள 'விண்ணைத்தாண்டி வருவாயா' படத்துக்கும் சம்பளம் இரண்டரைக் கோடிக்குக் குறைவுதான். 'விண்ணைத் தாண்டி வருவாயா' படமும் ஹிட்டானால் தமிழிலும் சம்பளத்தை ஏற்றுவாராம்.

தமிழ் திரையுலகில் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகைகள் பட்டியலில் தற்போது நயன்தாரா, ஸ்ரேயா, திரிஷா மூவரும் உள்ளனர். அந்த வரிசையில் இவரும் சேர்ந்துவிடுவார் போல!

# சூர்யாவுடன் ஆட்டம் போடும் ஸ்ரேயா

*இந்திரலோகத்தில் நா.அழகப்பன் படத்தில் வடிவேலுவுடன் ஜோடி போட்டு ஒரு பாட்டுக்குக் குத்தாட்டம் போட்டதால், உச்சத்தில் இருந்து கீழே விழுந்தவர் நடிகை ஸ்ரேயா.*

*வடிவேலுவுடன் ஆட்டம் போட்ட நடிகை தனக்கு ஜோடியாக நடிக்க வேண்டாம் என்று அந்த நேரத்தில் அஜீத்தின் படத்திலிருந்தும் நீக்கப்பட்ட ஸ்ரேயா, இந்த அனுபவத்துக்குப் பிறகு ஒரு பாட்டு என்றாலே ஒட்டம் பிடிக்கத் தொடங்கிவிடுகிறார்.*

*இருப்பினும் பல வாய்ப்புகள் கைநழுவிப் போயுள்ளன. இதனால் வருத்தத்தில் இருந்த அம்மணி, 'கந்தசாமி'யை ரொம்பவே நம்பியிருந்தார். எதிர்பார்த்த அளவுக்கு 'கந்தசாமி' பெயர் வாங்கிக் கொடுத்தாலும், அடுத்து புதிய பட வாய்ப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.*

*வாய்ப்பில்லாமல் இருக்கும் ஸ்ரேயா இப்போது எஸ்.ஜே.சூர்யாவிடம் சிக்கியிருக்கிறார். தெலுங்கில் தான் இயக்கி வரும் 'புலி' படத்தில் இடம்பெறும் ஒரு குத்துப்பாட்டுக்கு ஸ்ரேயாவை ஆட்டம் போட வைக்க முடிவு செய்த எஸ்.ஜே., அணுக வேண்டிய முறையில் அணுகி டபுள் ஒ.கேயும் வாங்கி விட்டாராம். புலியை தமிழில் தனது நடிப்பில் எடுக்கத் திட்டமிட்டிருக்கும் சூர்யா, அந்தப் படத்திலும் ஸ்ரேயாவுக்கு வாய்ப்புக் கொடுப்பதாக உறுதி கொடுத்திருக்கிறாராம்!*



நந்தனா



படம்-திட்டக்குடி



படம்-ஆனந்தபுரத்து விடு



படம்-இரண்டுமுகம்



படம்-குலசேகரனும் கூலிப்படையும்



படம்-கற்றது களவு

# திரைவிமர்சனம்




நடிப்பு: சரத்குமார், ஸ்ரேயா, கவுண்டமணி
இசை: ரஹ்பி
இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார்
தயாரிப்பு: ராடான் - ஜீ

என்னதான் 'ஹைப்' ஏத்தினாலும் சரக்கு இருந்தால் மட்டும்தான் எந்தப் படமும் தாக்குப் பிடிக்கும் என்பதற்கு இதோ இன்னொரு உதாரணம்.. ஜக்குபாய்.

''அடடா... திரைக்கு வரும் முன்பே படம் லீக்காகித் தயாரிப்பாளர் நஷ்டம் கண்டு விட்டாரே' என்ற பார்வையாளனின் பரிதாபம் எந்த அளவு கைகொடுக்கும் என்று தெரியவில்லை...

படத்தின் கதை இது:

சென்னையைக் கிரிமினல்கள் இல்லாத நகரமாக்க எந்தளவு கொடூரமான வைத்தியத்தையும் கையாளும் பொலிஸ் அதிகாரி ஜெகனாதன் (சரத்குமார்). ஒரு நாள் தனது முன்னாள் மனைவி ஆஸ்திரேலிய கார் விபத்தில் செத்துப் போனது அவருக்குத் தெரிய வருகிறது. கூடவே அவருக்கு மோனிஷா என்ற பெயரில் ஒரு அழகான- கோடீஸ்வர மகள் (ஸ்ரேயா) இருப்பதையும் தெரிந்து கொள்கிறார். ஜெகனாதனின் பழைய எதிரியான அமீத் அன்சாரியால் மோனிஷாவின் உயிருக்கே ஆபத்து என்பதை அறிந்து, அந்தப் பேராபத்திலிருந்து மகளைக் காப்பாற்ற கவுண்டமணியின் துணையுடன் புறப்படுகிறார். எப்படிப் காப்பாற்றினார் என்பது மீதிக் கதை...

இந்தப் படத்தின் முக்கிய பிளஸ் பொயிண்ட் கவுண்டமணி.

இளைத்தாலும், படுத்தாலும் சிங்கம் சிங்கம்தான் என்று சொல்லும் அளவுக்கு கலகலப்பூட்டுகிறார். குரலில் இன்னும் தனது பழைய பாணியையே பண்ணுகிறார் மனிதர்.

சரத்குமார் இந்தப் படத்தில் அடக்கி வாசித்திருக்கிறார். அதுவே அவரது கேரக்டருக்குக் கொஞ்சம் நம்பகத்தன்மையைத் தருகிறது. பொலிஸ் வேடமும் அவருக்கு மிகக் கச்சிதமாகப் பொருந்தி வருகிறது.

ஸ்ரேயா இதில் நடிக்கவும் செய்துள்ளார்!.

மற்றபடி சொல்லிக் கொள்ளும் அளவு யாரும் இல்லை.

நிறையக் காட்சிகளில் ஓவராக உணர்ச்சி வசப்படுகிறார்கள்... பிழியப் பிழிய செண்டிமெண்ட் காட்சிகள். அவை பொருத்தமான இடத்தில் வராததால் பார்வையாளனுக்கு எந்த உணர்வும், பாதிப்பும் ஏற்படாமல் போகிறது. அதுதான் இந்தப் படத்தின் முக்கிய மைனஸ்.

மற்றபடி ராதிகா வடித்த கண்ணீருக்காக இல்லாவிட்டாலும், ஆர்.டி. ராஜசேகரின் அசத்தல் கமரா, கவுண்டமணி கொமெடி, சரத்குமாரின் அக்ஷனுக்காக ஒருமுறை பார்க்கலாம்!

அதுசரி... அதென்ன ஜக்குபாய் என்கிறீர்களா...?

படத்தில் சரத்துக்குப் பெயர் ஜெகனாதன்... செல்லமாய் 'ஜக்கு'... மரியாதைக்கு 'பாய்'... அதுதான் 'ஜக்குபாய்'. அடடா, கே.எஸ். ரவிக்குமாருக்கு என்ன ஒரு கற்பனை வளம்'!

'கோவா' படத்துக்கு 'ஏ' முத்திரை குத்தப்பட்டு சான்றிதழ் வழங்கியமையால் கலக்கத்தில் இருக்கின்றனர் 'கோவா' குழுவினர். ஆனாலும் இது அனைவரும் பார்க்கக்கூடிய படமாக இருக்கும் என்கிறார் இப்படத்தின் இயக்குனர் வெங்கட்பிரபு. கிராமத்தில் வசிக்கும் நான்கு இளைஞர்கள் வெளிநாட்டுப் பெண்களை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற இலட்சியத்துடன் 'கோவா' செல்கிறார்கள். அங்கே என்ன நடக்கிறது என்பதுதான் கதை. 'கோவா' கடற்கரைக் காட்சிகளைச் சுடச்சுடச் சுட்டுத்தள்ளிக்கொண்டு வந்திருப்பதுடன், இளைஞர்கள் குடித்துவிட்டுக் கூத்தடிக்கும் பல காட்சிகள் கொஞ்சம் அப்படியும் இப்படியுமாக இருந்ததால்தான் இந்த 'ஏ' முத்திரையாம். எப்படியோ பட்த்துக்கு ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டார்கள் என்பது உண்மை.

## கோவாவுக்கு ஏ சான்றிதழ்!



படம்-அகம் புறம்

# கவிதைப்புனல்

## விளையாட்டை என்னில் காட்டு

நுனிமூக்கில் நீவந்து கடித்தால்கூட
    நோகேன்யான் நுளம்பாரே! ஆனாலொன்று
கனியொத்த காதலியின் கன்னம்மீது
    கடித்தவளின் கண்ணுறக்கம் கலைக்கவேண்டாம்!

என்தேக மெங்கெனிலும் நீதான்வந்து
    எப்போதும் கடித்தாலும் எதிர்க்கமாட்டேன்
பொன்போலும் தேகத்தைத் தனதாய்ப்பெற்ற
    பொன்மயிலாள் மேனியிலே கடிக்கவேண்டாம்!

ஒத்துக்கொள் எந்தனது அன்புவார்த்தை
    உனக்குதவ எப்போதும் அடியேனுள்ளேன்
குத்தியெடு உந்தனது ஆசைதீர
    குலமணியை மட்டும்நீ எழுப்பவேண்டாம்!

கவப்பினிலே எந்தனுடன் பங்குகொண்டு
    களைத்துப்போய் தூங்குகிறாள் எழுப்பவேண்டாம்
நிலவுமுகம் நிசியினிலும் எழிலேயென்றன்-
    நேரிழையின் அருகினிலே நெருங்கவேண்டாம்!

அழகியென்று நீயவளின் உடலைத்தீண்டி
    அரைகுறையில் அவள்தூக்கம் கலையுமானால்
உளம்திறந்து கூறுகிறேன்; ''கொயில்''கொளுத்தி-
    உறவினரோ டுன்னையுமே ஓடவைப்பேன்!

முத்தமிட்டாள் என்றனது உதட்டில்,அங்கு
    முகம்புதைத்தால் உந்தனுக்குப் போதையேறும்
சத்தத்தை இனிநீயும் குறைத்துக்கொண்டு
    சரி,உந்தன் விளையாட்டை என்னில்காட்டு!

-கவிஞர் ஆ. கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா.

## எதிர்பார்ப்பு!

கஷ்டம் விலகிப் போகவே
    காலம் கனிந்து வருகிறது
நஷ்டம் இனியும் வாராமல்
    நல்லது நடக்கப் போகிறது
துஷ்டன் என்னை விட்டுமே
    தூரம் போகப் போகிறான்
இஷ்டம் போல நானுமே
    இகத்தில் வாழப் போகிறேன்!

கடந்த காலம் என்தனுக்கு
    கண்ணீர் தந்து மாய்ந்தது
நடக்கும் நிகழ்வு காலமோ
    நம்பிக் கையை ஈய்ந்ததே
அடடா நல்ல காலமும்
    அணைக்க விரைந்து வருகிறது
தொடரும் எந்தன் வாழ்வினில்
    தொல்லை தீயப் போகிறதே!

இழிந்த வாழ்வு எந்தனுக்கு
    இனியும் வந்து சேராது
நலிந்து உழன்ற எனக்குள்ளே
    நம்பிக் கையும் முகிழ்த்ததே
தெளிந்த சிந்தை பூண்டுளேன்
    தென்படு வாழ்வு துலங்கிடுது
வழிந்து ஓடும் இன்பஞ்சேர்
    வாழ்வில் திளைக்கப் போகின்றேன்!

இருள்க விழ்ந்த நீள்வாழ்வில்
    இன்னல் உற்று உழன்றேன்யான்
பொருள்நி றைந்த வாழ்வுக்காய்
    பொறுமை காத்தேன்; இறையோனின்
அருள்நி றைந்த சீர்வாழ்வை
    அடையும் காலம் கனிந்ததுகாண்
விரும்பும் இன்ப வாழ்வையான்
    விரைவில் ஏற்கப் போகின்றேன்!

-வி.எம்.அன்ஸார்,
கிண்ணியா.

## வேடிக்கையான நிலை!

வீட்டிலே சண்டை யென்றால்
    வீதியில் வருவோர் போவோர்
பாட்டுக்குப் பொருளும் சேர்க்க
    பயனிங்கு வாய்த்த தென்பர்!

''பார்த்தியே! அந்தக் குடும்பம்
    படுமோசம் சொன்னே னேயான்''
ஆர்த்தெழும் அன்னார் மகிழ்ச்சி
    அளவுக்கோர் எல்லை யில்லை!

அடுப்பிலே விறகெ ரிக்க
    அரிசிக்கு வழியே யில்லை
கடுப்பிலே நாலு வார்த்தை
    கனகமணி வீசி விட்டாள்!

தின்னற்கு வழியு மில்லை
    தேடிமாற்ற உடையு மேது?
சின்னஞ்சிறு குடிசை வாழ்வு
    சிங்காரக் குறைச்ச லில்லை!

சொல்லியே சிரிப்பு; சுகந்தி
    செப்பியே பரப்பு வதந்தி
லில்லியாம் அவள்சம் மந்தி
    வீராப்பில் பெரிய மந்தி!

அண்டையயல் சிரிக்கு மிங்கு
    அவதூறு கதைக்கும் நித்தம்
சண்டையது வந்தால் போதும்
    சனத்துக்கு குதூக லந்தான்!

-கவிஞர் செ. ஞானராசா, திருகோணமலை.

## இந்தக் காலப் பெண்மை!

அடுப்படிப் பெண்ணாய்
இடுப்பொடி பட்டு
இழிந்தது பெண்மை அந்தக் காலம்-பெண்கள்
துடிப்புடன் எழுந்து
தடித்தனம் ஒழிக்கணும் இந்தக் காலம்!

மாதரை மயக்கி
ஆதரவோ வோடு
மந்திரி ஆண்டது அந்தக் காலம்-பெண்கள்
சாதனை யோடு
சரித்திரம் படைத்துச்
சகத்தில் உயரணும் இந்தக் காலம்!

எதிரும் புதிருமாய்
எம்.பி.மார் பிரிந்து
ஏய்த்துப் பிழைத்தது அந்தக் காலம்- பெண்கள்
அதிரடி வோட்டால்
அரசியல் போக்கை
ஆட்டிப் படைக்கணும் இந்தக் காலம்!

கொழுந்தினைக் கொய்து
அழுந் துயரோடு
கூனிக் குமைந்தது அந்தக் காலம்- பெண்கள்
எழுந்ததும் துரைமார்
எடுபிடி யெல்லாம்
எடுக்கணும் ஓட்டம் இந்தக் காலம்!

தலைமைக ளெல்லாம்
தலைகளை உடைத்துத்
தடித்தனம் புரிந்தது அந்தக் காலம்-பெண்கள்
நிலைமையை மாற்ற
நெஞ்சுரங் கொண்டு
நிமிர்ந்து நிற்கணும் இந்தக் காலம்!

சீரது கெட்டுச்
சிறுமைப் பட்டுச்
செயற்திறன் இழந்தது அந்தக் காலம்- பெண்கள்
பாரதி கண்ட
புதுமைப் பெண்ணாய்ப்
புவியில் சுடரணும் இந்தக் காலம்!

-ஏறாவூர் அனலக்தர்

## மலையக எழுச்சி

## பலன்கள் இல்லை!

தொகுதிகள் ஏழில் சங்க
    வேட்பாளர் வெற்றி; வேறு
தொகுதிகள் இடது சாரி
    தோழர்க்கு வாக்கு; சங்கத்
தகுதிகள் மக்கள் சக்தி
    தமைக்கண்டு அரசு வன்று
வெகுண்டது; உரிமை கட்கு
    வேட்டுக்கள்; பாகு பாடு!

இந்நாட்டு உரிமை கொள்ள
    இட்டனர் சட்டம்; மீண்டும்
இந்நாட்டில் வாக்கு போட
    இட்டனர் இரண்டாஞ் சட்டம்
முந்தியவ் வுரிமை இன்றேல்
    பிந்தியவ் வுரிமை இல்லை
நிந்தனை! நாங்கள் இங்கு
    நாடற்றோர்; வாக்கு அற்றோர்!

ஆத்மீக வாதி போற்றும்
    அண்ணலார் காந்தி ஈந்தார்
சாத்வீகம், உண்ணா நோன்பு
    சமருக்கு ஆயு தங்கள்!
சாத்வீகம் உண்ணா நோன்பு
    சாதனை படைத்த தாலே
மூத்தயெம் தலைவர் மாரும்
    முடுக்கினார் உண்ணா நோன்பை!

கத்திடும் ஆழி! காலி
    கவின்முகத் திடலில் சங்கம்
சத்தியாக் கிரகம்; ஆனால்
    சரித்திரம் படைக்க வில்லை!
நித்திரை; பெயரில் சங்கம்
    இந்தியர் பதத்தை நீக்கம்
முத்திரைப் பதிப்புச் சங்கம்
    தொழிலாளர் சங்கம் ஆக!

-கவிஞர் ஸி.எஸ். காந்தி
(தொடரும்).

## முயலுவீர்!

யுத்தம் ஒன்று வந்தது
உலகம் கண்டு பயந்தது
எத்தனை உயிர்கள் மாண்டன
எண்ணும் போதே நடுங்குது!

அறிவு இயலின் சாதனை
அமைதி மறைந்து வேதனை!
இறந்த உயிர்கள் எத்தனை?
இழப்பு சேதம் எத்தனை?

ஏவு கணைகள் குண்டுகள்
எல்லாம் அங்கே விழுந்தன
ஈவு இரக்கம் இன்றியே
எல்லாம் எரிந்து போயின!

அமைதி சாந்தி ஓங்கவே
அறிவு இயல் உதவுமோ?
போரை ஒழித்து உயிர்களைப்
பாது காக்க முடியுமோ?

இயற்கை சீற்றம் நோய்நொடி
இதனைத் தீர்க்க வழிமுறை
தயக்கம் இன்றிக் கண்டிட
தயவு செய்து முயலுவீர்!



-இ.பப்பி- மாணிப்பாய்

# சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை

ஈண்ழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் ஆரம்பமாகிய ஈழத்தமிழ் அறிஞர்களின் தமிழகத் தொடர்பு நீண்டு கொண்ட வரலாறுகளை நாம் சந்தித்துள்ளோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, வே.அகிலேசம்பிள்ளை, தி.த.கனக சுந்தரம்பிள்ளை, சதாவதானி நா.கதிரை வேற்பிள்ளை என்று தமிழகத் தொடர்பு கொண்டவர்கள் பலர் இருந்துள் ளார்கள். தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணி ஆற்றியவர்களில் முதன்மையானவர் ஆறுமுகநாவலராவார். அப்பெருமகனார் பெரிய மாணாக்கர் பரம்பரையை உருவாக்கியுள்ளார். அவர்களில் முக்கிய மானவர்களாகிய வித்துவான் தியாகராச பிள்ளை, நல்லூர் க.சதாசிவம்பிள்ளை ஆகியோரிடம் சதாவதானி நா.கதிரை வேற்பிள்ளை தமிழ் இலக்கணம் இலக்கியம் ஆகியவற்றை ஐயந்திரிபறக் கற்றுள்ளார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சிறப்புக்குக் காரணமானவர்களாக இருந்தவர்களில் 'வசன நடை கைவந்த வல்லாளர்' ஆறுமுகநாவலர். தமிழ்நாடு முழுவதிலும் இணையில் லாதவர் என்று போற்றப் பட்டாரென மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். நாவலர் ஆற்றிய பணியை யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் முன்னெடுத்துச் சென்றவர்களில் ஒருவராக மதிக்கப்பட்டவர் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை ஆவார்.

சதாவதானி என்று அழைக்கப்பட்ட கதிரைவேற்பிள்ளை யாழ்ப்பாணம் - புலோலி என்னும் ஊரில் நாகப்பிள்ளை-சிவகாமி தம்பதியினருக்குப் புத்திரராக 1871 ஆம் ஆண்டு மார்கழி மாதம் மூன்றாம் நாள் பிறந்தார். ஆரம்பக் கல்வியை புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்று, ஆறாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை நிறுத்திக் கொண்டார். அதன்பின்பு தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங் களையும், சமயாஸ் திரங்களையும் குருகுல முறைப்படி இரு தமிழ் அறிஞர்களிடம் கற்றுத் தெளிந்தார். சென்னைக்குச் சென்ற கதிரை வேற்பிள்ளை அங்கு தி.த.கனகசுந்தரம் பிள்ளையிடம், தமது அறிவை மேம் படுத்தும் வகையில் கற்றார்.

அந்நியராட்சிக் காலத்தில் ஆங்கில மொழி, வேற்றுச் சமயம் அவர்களு டைய கலாசாரம் என்பன மேலாதிக்கம் பெற்ற நிலையில் தமிழ் அறிஞர்கள் சிலர் தமிழ்க்கல்வி மரபையும், சைவசமய மரபையும், அழிந்து விடாத படி, தமிழ்மொழியின் தனித்து வத்தைப் பேணும் காவலர்களாகவும் சைவசமயத் தைக் காப்பவர்களாகவும் பணியாற்றி அத்தகைய சேவைக்காகத் தமது வாழ் நாளையே அற்பணித்தனர். இந்த வகையில் ஆறுமுகநாவருக்குப் பின்பு அவற்றை முன்னெடுத்தவர் என்ற பெருமைக்குரியவராக சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையைக் காண்கின்றோம்.

நாவன்மை மிக்கவராகிய சதாவதானி தமிழகத்திலுள்ள கோயில்கள், மடங்கள், தமிழ்ச்சங்கங்கள் ஆகியவற்றில் சொற் பொழிவுகளை ஆற்றிவந்துள்ளார். அவரது நாவன் மையாலும் உரைச் சிறப் பாலும் மற்றும் கல்விப் பணிகளாலும் தமிழகத்தில் பெரும்பாலும் அறியப் பட்டவராகவே நா.கதிரைவேற்பிள்ளை விளங்கினார்.

இந்த இடத்தில் எனது வாழ்நாளில் நடந்த சம்பவத்தையும் பதிவுக்காக இவ் விடத்தில் தருவது பொருத்தமாக இருக் கும் என எண்ணுகின்றேன். 1970களில் கொழும்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமையாற்றிக் கொண் டிருந்த காலத்தில், என்னுடன் பணியாற்றிய நண்பர்களான சபாபதிப் பிள்ளை, பத்ம யோகன், தங்கராசா ஆகியோர் என் னைப் பேசுவதற்காக அழைத்திருந்தனர். பருத்தித்துறை - தம்பசிட்டியைச் சேர்ந்த வர்களாகிய இவர்கள், சதாவதானி நா.கதிரைவேற் பிள்ளையின் பெயரால் தம்பசிட்டியில் அமைந்துள்ள வாசகசாலையில் நடை பெற்ற அன்னாரின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்வில் (1971) எனக்குப் பேசச் சந்தர்ப்பம் கொடுத்திருந்தார்கள். இக்கட்டுரையை எழுதும் போது 'அந்தநாள் ஞாபகம்' மனத்தில் தோன்றியது.

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை இலங்கையில் பிறந்தாலும் தமது வாழ் நாளில் கூடிய நாட்களைத் தமிழகத்தி லேயே கழித்தார். நூல்களைத் தேடிக் கற்பதில் பேரார்வம் கொண்டவராக இருந்தார். சைவசமய மூல நூல்களைப் படிப்பதற்கு ஏதுவாக வடமொழி யையும் கற்று அதிலும் பாண்டித்தியம் பெற்றார். மிகவும் முயன்று பெறுதற்கரியதாக இருந்த ஓலைச்சுவடிகளைப் பெற்று அவற்றை ஆவலுடன் கற்றார். மேலும் சபாபதி நாவலரிடம் இருந்த 'சிவ ஞான போதமாபாடி' என்னும் நூலையும் பெற்று தமது அறிவை வளர்த்துக் கொண்டார்.

புராணபடலம் சம்பந்தப்பட்ட உரை வல்லுனராக இருந்த இவர், பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளை யாடற்புராணம், தலபுராணங்கள், போன்றவற்றைப் பற்றி பிரசங்கங்கள் செய் வதிலும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். சமய சம்பந்தமான நூல்களை எழுதித் தமிழ்மொழிக்குச் சிறப்புச் சேர்த்தார். 'புழநித்தலபுராண பொழிப் புரை', 'சைவபூஷண சந்திரிகை', 'புத்தமத கண்டனம்', 'நைடத மூல மும்' (விருத்தி உரை), 'சிவஷேத்தி ராலய மகோற்சவ உண்மைவிளக்கம்', 'சுப்பிரமணிய பராக்கிரமம்', 'திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் சரிதவசனச்சுருக்கம்', 'சைவசித்தாந்தச் சுருக்கம்', 'கருவூர் மான்மியம்' போன்ற நூல்களை எழுதி வெளியிட்டார். 1899 ஆம் ஆண்டு 'தமிழ்ப் பேரகராதி' என்ற மிகப்பெரிய அகராதி ஒன்றினை வெளியிட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

ஆரணிநகர சமஸ்தான வித்துவானாக வும், மதுரைத் தமிழ்சங்கப் புலவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். நீலகிரியில் வாழ்ந்த காலத்தில் 'சைவசித்தாந்த சபை'யொன்றை நிறுவி அச்சபையின் சார்பாக சைவநாயன்மார்களின் தொடர் சொற்பொழிவுகளையும் ஆற்றிவந்துள் ளார். அவர் பெருமைக்குச் சான்றாக அவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டங்கள் மிளிர்கின்றன. 'சைவசித்தாந்த மகாசரபம்', 'மாயாவாத தும்சகோளரி', 'அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்', ஆகிய பட்டங்களைக் குறிப்பிடலாம்.

பல நூல்களுக்குச் சிறப்பாக உரை எழுதிய இவர் இலக்கண, இலக்கிய, தருக்கநூல் அறிவுடன் இசையியல், நாடகவியல், மதனவியல், தத்துவ இயல், மருத்துவ இயல், சோதிட இயல், உலகியல் ஆகிய பல்துறை சார்ந்து பாண்டித்துவம் பெற்றவராக இருந்துள்ளார். சிறந்த ஆசிரியராக, நாவன்மை மிக்க சொற்பொழிவாளராக, உரைநடை ஆசிரியராக, செய்யுள் இயற்றுபவராக, ஏட்டுச்சுவடிகளை அச்சுவாணம் ஏற்றியவராக, சதாவதாணம் மிக்கவராக வாழ்ந்து தமிழ்மொழிக்கும், சைவத்திற்கும் பெரும் பணியாற்றிய மாமேதை சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, நீலகிரியில் பணியாற்றி வந்தவேளை தமது முப்பத் தாறாவது வயதில் (23.06.1907) உயிர் நீத்தார். என்றும் அவர் புகழ் நிலைத்து நிற்கும்.




# யாழ்ப்பாணத்து மண்வாசனை நாவல்கள்

ஈழத்தின் இலக்கிய வரலாற்றில், ஆறுமுகநாவலர் தமிழ்மொழியில் உரை நடையை அறிமுகம் செய்தபின் ஏற்பட்ட மாற்றங்கள் பல திருப்புமுனை களுக்கு வழிசமைத்துக் கொடுத்துள் ளன. நாவலர் அச்சுயந்திரசாலையை நிறுவி நூல்களை அச்சிடும் பணிகளை ஆரம்பித்துவைத்தார். இதேவேளை, மிசனறிகளும் தமது மதத்தைப் பரப்பு வதற்காக அச்சுத்தொழிலை விரிவுபடுத் தினர். இத்தகைய பின்புலம் இலக்கிய எழுத்தாளர்களுக்குச் சாதகமாக அமைந்ததெனலாம்.

ஈழத்துத் தமிழ் நாவலிலக்கிய வரலாற்றை நோக்கும்போது பெருமளவு நாவல்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தை மையமாக வைத்து எழுந்துள்ளமையை அவதானிக்கலாம். ஈழத்தின் மண்ணின் முதல் நாவல் என்று கூறப்படும் 'வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம்' மல்லாகம் கிராமப்புறத்திலிருந்தே தொடங்கிய தாகக் கொள்வர். இந்நாவல் 1905 இல் தோன்றியதாக அறியமுடிகிறது. சி.வை.சின்னப்பபிள்ளை இந்நாவலின் ஆசிரியராவார்.

மங்களநாயகம் தம்பையா 'நொறுங் குண்ட இருதயம்' என்னும் நாவலை 1914 ஆம் ஆண்டு வெளிக்கொண்டு வந்தார். தெல்லிப்பழைக் கிராமத்தைக் களமாகக் கொண்டு, மக்களது வாழ்க் கைப் பிரச்சினைகளை முன்னிறுத்தி எழுதப்பட்டது. அச்சுவேலி எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை 'சுந்தரம் செய்த தந்திரம்' என்னும் நாவலை 1918 இல் படைத்துள்ளார். யாழ்ப்பாணப் பிரதேச சமூகத்தில் காணப்பட்ட ஊழல்களை நகைச்சுவையுடன் கண்டிக்கும் நாவலாக 'சுந்தரம் செய்த தந்திரம்' அமைந்துள்ளது. இந்த நாவலா சிரியரின் இன்னுமொரு படைப்பு 'அழக வல்லி' 1926 இல் வெளிவந்தது. 'சன்மார்க்க போதினி' என்னும் பத்திரி கையில் தொடராக வெளிவந்த நூலுருப் பெற்ற இந்நாவல் யாழ்ப்பாணப் பிரதேச சமூகமொன்றின் குடும்பத்தினருக்கிடை யில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டது. அக்காலத் தவர்கள், நாவல் என்பது சமுதாய சீர்திருத்தத்துக்குரிய நீதிகளைப் போதிக்கும் இலக்கிய வடிவம் என்றே கருதியுள்ளனர்.

ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை 'காசி நாதன் நேசமலர்' நாவலை 1924 இல் நூலாகத் தந்துள்ளார். கிறிஸ்தவ சமயப் பிரசார முயற்சியில் சைவக் குடும்பம் எவ்வித தாக்கத் துக்கு உள் ளாகியது என்பதை மானிப்பாயைச் சேர்ந்த நேசமலர் என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் எடுத்தியம்பி உள்ளார். ஆங்கில நடுத்தர வர்க்க வாலிபர்கள் பலர் தமது புதிய பழக்கவழக் கங்களாற் குடும்பநலனைப் பேணாது திரிந்தமையும் தொழில்முறைத் தேவை களின் பொருட்டு நகர வாழ்க் கையை மேற்கொண்டோர் சமூகத்தின் பழைமையான பண்புகளைக் கைவிட்டு ஒழுக்கக் குறைவாக நடந்துகொள்வதை யும் ம.வே.திரு ஞானசம்பந்தபிள்ளை அவதானித்துத் தமது நாவல்களில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எழுத்தாளர் கனக செந்திநாதன், அவரது கிராமமான குரும்பசிட்டியையும், அ.செ.முருகானந்தன் தமது ஊரான அளவெட்டியையும் தளமாகக் கொண்டு நாவல்களை உருவாக்கினர். எழுத்தாளர்கள் யாழ்ப் பாணப் பகுதியின் பல்வேறு கிராமங்களின் பொதுப் பிரச்சினைகளைக் காட்டு வதற்காகப் பல்வேறு கிராமப் புறங்களையும் களங்களாகக் கொண்டு தத்தமது படைப்புகளை வெளிக் கொணர்ந்தனர். இவ்வாறான ஒரு வரலாற்றுப் போக்கு எழுபதுகளுக்குப் பின்வந்த நாவல்களில் காணக்கூடியதாக இருக்கின் றது. நாவலாசிரியர்கள் பலர் தங்கள் நாவல்களில் சமுதாயப் பிரச்சினைகளுக் குக் களமாக அமைந்த மண்ணின் புவியி யல் எல்லைகளையும் அதன் மண்வாச னையையும் சிறப்பாகப் புலப்படுத்த முயற்சி செய்துள்ளனர். பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த நாவலாசிரியர் ஏ.ரி.நித்தியகீர்த்தி 'மீட்டாத வீணை' என்னும் நாவலைத் தந்துள்ளார். சிறப்பாக இந்நாவல் வடமராச்சிக் கிராமப்புறக் களத்தையே சித்தரிக்கின்றது. தெணியாவின் 'விடிவை நோக்கி...' என்ற நாவலும் வடமராச்சி மண்ணுக்குரிய நாவலாகவே அடையாளப்படுத்தப்படுகிறது.

செங்கை ஆழியான் க.குணராசா தமது பல நாவல்களில் தாம் வாழ்ந்த ஊரான வண்ணார்பண்ணையைப் பற்றிச் சித்தரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. 'முற்றத்து ஒற்றைப் பனை', 'பிரளயம்', 'இரவின் முடிவு' ஆகிய நாவல்களைக் குறிப்பிடலாம். கிராமத்து மக்களின் மரபுகள், அவர்களின் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்ற அம்சங்கள் இந்நாவலில் சித்திரிக்கப்பட் டுள்ளன. ஞானரதனின் 'ஊமை உள்ளங்கள்' அளவெட்டி, மல்லாகம் ஆகிய கிராமங்களைப் பகைப்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கடற்றொழிலாளர்களின் துயரம் நிறைந்த வாழ்க்கைப் பிரச்சினைகளை முன் நிறுத்திய முதல் நாவல் என்ற சிறப்பை அ.கைலாசநாதனின் 'கடற்காற்று' பெறு கிறது. 1962 ஆம் ஆண்டு குறுநாவலாக எழுதப்பட்டு பின் தொடர்கதையாக விரி வடைந்து 1972 இல் நூலுருப்பெற்ற 'கடற்காற்று' மண்டைதீவின் மீனவக் குடும்பத்தின் அவலமான வாழ்க்கை நிலையை எடுத்துக் கூறுகின்றது. நெடுந்தீவைக் களமாகக் கொண்டு 1974 இல் செங்கை ஆழியானின் 'வாடைக் காற்று' வெளிவந்துள்ளது. நெடுந்தீவில் மீன் பிடிக்கவரும் வெளியூர் சம்மாட்டி களுக்கும் அங்கு வாழும் உள்ளூர் மக்களுக்குமிடையிலான உறவுகளையும் முரண்பாடுகளையும் சித்தரிப்பதுடன், மீன்பிடிப்பதில் ஏற்படும் போட்டி யையும், உள்ளூர்ப் பெண்களுடன் ஏற்படும் காதலையும் 'வாடைக் காற்று' எடுத்துக்காட்டியுள்ளது. இக்கதை திரைப்படமாக வெளி வந்தமையையும் குறிப்பிடவேண்டும்.

இத்தகைய மீனவக் களத்தினை மையமாகக் கொண்டெழுந்த மற்றுமொரு நாவல் கே.டானியலின் 'போராளிகள் காத்திருக்கின்றனர்' என்பதாகும். யாழ். நகரைச் சார்ந்த கடற்கரைப் பிரதேசம் இந்நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந் நூல் 1974 இல் வெளிவந்ததாக அறியமுடிகின்றது. இயற்கை வருணனை, கருப் பொருள் வர்ணனை என்பவற்றுடன் காதற்சுவை கலந்து எழுதப்பட்ட இந் நாவலின் சம்பவங்கள் இயற்கைப் பகைப்புலத்துடன் பொருந்தவில்லை என்று கூறப்பட்டாலும், வாசகர் மத்தியில் இந் நாவல் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியது என்பது உண்மை.

நவாலி என்ற கிராமத்தின் வாழ்க்கை முறைகளையும் தொழில்முறை விவர ணங்களையும் உள்ளடக்கி அப்பச்சி மகா லிங்கம் என்பவர் 1977 இல் 'கமலினி' என்னும் நாவலைப் படைத்துள்ளார். இப்படியாகத் தொடர்ந்து பல நாவல்கள் யாழ்ப்பாணத்து மண்வாசனையை மையப்படுத்தி வெளிவந்தவண்ணம் உள்ளன.

# கடவுளிடம் முறையிடுதல்!

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய சூடு இன்னும் தணியவில்லை. அதற்குள் பொதுத் தேர்தல் குறித்த பேச்சுக்கள் ஆரம்பமாயிற்று! ஏன் இத்தனை அவசரம்? இரண்டொரு மாதங்கள் கழித்து பொதுத் தேர்தலை நடத்தலாம் தானே என்று கேட்கிறார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள். ஜனாதிபதித் தேர்தலில் நிகழ்ந்த குழறுபடிகள் பற்றிய கதைகளைத்திசை திருப்புவதற்காகத்தான் அரசாங்கம் இப்படி அதறிப்பதறிக் கொண்டு அடுத்த தேர்தலை நடத்துவ



தற்கு முயற்சிக்கின்றது என்று அதற்கான பதிலையும் அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவு பற்றி ஆயிரம் கதைகள் உலவுகின்றன. முன்பெல்லாம் கள்ள வாக்குகள் போடுவது, வாக்குப் பெட்டினை மாற்றுவது என்றுதான் தேர்தலில் மோசடிகள் நிகழ்ந்து வந்தன. ஆனால், இம்முறை எண்ணப்பட்ட வாக்குகளின் இறுதி முடிவையே தமக்குச் சாதகமாக ஆளுந்தரப்பினர் மாற்றி விட்டார்கள் என்கின்றனர் எதிர்க்கட்சிக்காரர்கள்.

ஆனால் - அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. தோற்றுப் போனவர்கள் சொல்லும் வழமையான கதைதான் இது! ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்த வெற்றியானது கலப்படமற்ற பசும்பாலைப் போலானது என்கின்றார்கள் அரச தரப்பினர்.

எப்படியிருந்த போதிலும், அறிவிக்கப்பட்ட உத்தியோகபூர்வ முடிவின்படி, அடுத்த ஆறு வருடங்களுக்கும் மஹிந்த ராஜபக்ஷதான் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கின்றார். கசப்போ, இனிப்போ இதுதான் நிஜம்!

இந்த நிலையில் ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் - எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதியில் இருந்துதான் ஆரம்பமாகும் என்று உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது. அதன்படி பார்த்தால், மஹிந்த இழப்பார் என எதிர்பார்க்கப்பட்ட இரண்டு ஆண்டுகளில், ஒரு ஆண்டு மட்டுமே அவருக்கு இல்லாமல் போயுள்ளது. இந்தக் கணக்கின்படி - இன்னும் ஏழு ஆண்டுகளுக்கு மஹிந்தவின் ஆட்சி இருக்கவே போகிறது.

இந்தக் கணக்குவழக்கெல்லாம் ஒருபுறமிருக்க, நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளிலிருந்து ஏராளமான கதைகளையும், உப கதைகளையும் நம்மால் பெற்றுக் கொள்ள முடிகிறது.

அறிவிக்கப்பட்டுள்ள முடிவின்படி, வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் - மஹிந்த ராஜபக்ஷவை பெருமளவில் நிராகரித்திருக்கின்றார்கள். இதை இன்னொரு வகையில் சொன்னால், மு.காங்கிரஸ் மற்றும் த.தே.கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் கோரிக்கைகளுக்கிணங்க மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். இதை வேறொரு வகையில் கூறினால், மேற்படி மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்களை குறித்த மக்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்திருக்கின்றார்கள்.

குறிப்பாக முஸ்லிம் மக்கள் பெருமளவில் வாழுகின்ற அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி யமைச்சர்களின் தொகுதிகள் அனைத்தும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் பறிபோயுள்ளன. இம்முடிவானது மேற்படி அமைச்சர்களின் அரசியலில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி விடவும் கூடும்.

உதாரணமாக, முஸ்லிம்களின் 80 வீதமான வாக்குகள் ஜனாதிபதி மஹிந்தவுக்கே கிடைக்குமென்றும், ரவூப் ஹக்கீமால் பொன்சேகாவுக்கு பெரிதாக வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்றும் அறிக்கைகளை விட்டுக் கொண்டு திரிந்த அமைச்சர்கள் இனி, ஜனாதிபதியின் முகத்தை வெட்கப்பட்டுக் கொண்டுதான் பார்க்க வேண்டியிருக்கும். மட்டுமன்றி, வருங்காலங்களில் அதைத் தாருங்கள், இதைத் தாருங்கள் என்றெல்லாம் ஜனாதிபதியிடம் இவர்களால் அடம்பிடிக்கவோ, பேரம்பேசவோ முடியாமலும் போகும். காரணம், இந்த அமைச்சர்களின் கனதி என்ன என்பதை, நடந்து முடிந்த தேர்தலானது ஜனாதிபதிக்கு மிகத் துல்லியமாக உணர்த்தி வைத்திருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களால், எதிரணி ஆதரவாளர்கள் தேர்தல் என்கிற முறைமை மீதே நம்பிக்கையிழந்த வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. எப்படித்தான் நாங்கள் அதிகபட்சமாக வாக்களித்தாலும், இறுதியில் மோசடி செய்து ஆளுங்கட்சிக்காரர் கள் வெற்றியைப் பெறுவார்களாக இருந்தால், நாம் ஏன் வேலை மெனக் கெட்டு வாக்களிக்க வேணும் என்கிற அர்த்தப்பட இவர்கள் பேசிக்கொள்கின் றார்கள். இம் மனோநிலை நீடிக்குமாயின் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எதிரணி

-மப்றாக்-



வாக்காளர்களின் பங்குகொள்தல் - ஏதோ ஒரு வீதத்தில் வீழ்ச்சியடையும்!

இந்த நிலையில், தேர்தல் முடிவுகளுக்கெதிராக எதிரணியினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் - மஹிந்த பெற்றுள்ள வெற்றியைத் தட்டிப்பறிக்கும் அளவுக்கு ஒரு சூழலை உருவாக்கும் என்று நினைக்க முடியவில்லை. சட்ட ரீதியாக இதை நிரூபிப்பதும் கடினம் போலவே தெரிகிறது. ஏனெனில், தேர்தலில் நடந்த குளறுபடிகள் குறித்து கடவுளிடமும் உங்களிடமும் முறையிடுவதைத் தவிர வேறுவழிகளில்லை என்று, மல்வத்தை மகாநாயக்க தேரரைச் சந்தித்த ஐ.தே.க. பிரதித் தலைவர் கருஜெயசூரிய கூறியிருக்கின்றார். ஆனாலும், ஜனாதிபதியின் வெற்றி பற்றிய வலுவான சந்தேகத்தினை எதிர்க்கட்சியினரின் இந்தப் பிரசாரங்கள் அனைத்து மட்டங்களிலும் பதித்து விடக் கூடும்.

இதேவேளை, இந்தத் தேர்தலில் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களித்த தம்மை ஜனாதிபதி ராஜபக்ஷ - இனி, இரண்டாம் கண்கொண்டே பார்ப்பார் என்கிற சந்தேகம் மக்களிடையே வலுவடைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. வெளிப்படையாகச் சொன்னால், தாம் பழிவாங்கப்படலாம் என்று இவர்கள் அஞ்சுகின்றார்கள். இந்த சந்தேகம் சரியா அல்லது வெறும் கற்பனை மட்டும்தானா என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, அவ்வாறெல்லாம் பயப்படத் தேவையில்லை. அப்படியெதுவும் நடக்காது என்று இந்த மக்களை நம்பவைக்க வேண்டிய கடமைப்பாடு ஒரு ஆட்சியாளர் என்கிற வகையில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இருக்கிறது. நான் உங்கள் நண்பன். நான் உங்கள் தோழன் என்று கூறுவதால் மட்டும் இந்த நம்பிக்கை கிடைத்து விடாது. செயல்களாலும் அது வெளிக்காட்டப் படுதல் வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, தேர்தல் முடிந்த பிறகு எதிரணி ஆதரவாளர்கள் மிகக்கடுமையாகத் தாக்கப்படுகின்றார்கள். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில், ஒவ்வொரு நாளும் ஆகக்குறைந்தது, யாரோ ஒரு எதிரணி ஆதரவாளர் தாக்குதலுக்குள்ளாகின்றார் அல்லது அச்சுறுத்தப்படுகிறார். இது மோசமானதொரு நிலையாகும். குண்டர்களையும், காடையர்களையும் தினமும் பொதுமக்கள் முகம்கொள்வதென்பது சட்டமும், ஒழுங்குமுள்ள ஒரு சூழலுக்கு ஆரோக்கியமாக அமையாது. இந்த நிலையை, பயங்கரவாதத்தின் வேறொரு முகமாகவே பார்க்க வேண்டியிருப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளரொருவர் கூறுகின்றார்.

இந்த நிலையில், அரசாங்கத்துடன் மு.கா. இணையப் போவதாகவும் அதற்கான பேச்சுக்கள் உருவாகியுள்ளதாகவும் சில நாட்களுக்கு முன்னர் பரவலாகப் பேசப்பட்டது. இதிலுள்ள உண்மை, பொய்களை அறிந்து கொள்வதற்காக மு.கா. செயலாளர் ஹசன் அலியைத் தொடர்பு கொண்டு



கேட்டோம். அவர், அந்தச் செய்தியை அடியோடு மறுத்தார். அரசோடு மு.காங்கிரஸ் எப்படியாவது சேரவேண்டும் அல்லது முஸ்லிம் காங்கிரஸை எப்படியாவது அரசோடு சேர்த்து விட வேண்டும் என்று விரும்புகின்றவர்கள்தான் இப்படியான கதையை உருவாக்கி, உலவ விடுகின்றார்களே தவிர, இப்போது எம்மிடம் அப்படியொரு எண்ணமுமில்லை. நோக்கமுமில்லை என்றார்.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கு முன்னர் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு மு.காங்கிரஸுக்கு அரசாங்கம் அழைப்பொன்றை விடக் கூடிய சாத்தியப்பாடுகளும் உள்ளதாக பேசப்படுகிறது. ஆனாலும் அதன்போது மு.கா. முன்வைக்கும் நிபந்தனைகள் ஏற்கப்படுமா என்பது சந்தேகம்தான்.

பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியோடு இணைந்து போட்டியிடும் போதுதான் மு.கா. அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கடந்த தேர்தல்களில் இது நிரூபணமாகியிருக்கிறது. மட்டுமன்றி, ஐ.தே.க.வுக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியல் உறுப்பினர் நியமனங்களில் ஒரு தொகையையும் அந்தக் கட்சியிடம் மு.கா. கேட்டுப் பெறும்.

ஆனால், ஐ.தே.க. கடந்த காலங்களில் மு.கா.வுக்குக் கொடுத்த தேசியப் பட்டியல்களையாவது, ஆகக்குறைந்தது ஆளுந்தரப்பு கொடுக்க முன்வருமா என்பது கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கையில், வரும் பொதுத் தேர்தலில் ஆளுந்தரப்புடன் மு.கா. இணைவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாமல் போகும் போலவே தோன்றுகிறது.

சரி, அரசுடன் இணையாமல் ஐ.தே.க.வுடன் இணைந்து மு.கா. பொதுத் தேர்தலில் போட்டியிட்டால் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறலாம் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால், அந்த நாடாளுமன்றக் கதிரைகளை - பின்னர் வரும் நாட்களில் அரசிடம் மு.கா. பறிகொடுக்காமல் எப்படிப் பாதுகாக்கப் போகின்றது என்பதுதான் இப்போதைய கேள்வியாகும். *

# மடியில் உறங்கினான்

**1995 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்த ஒருவர் தனது குடும்பத்துடன் கிளாலி அடைகிறார். அங்கு ஹெலிக்கொப்டர் தாக்குதலில் அவர் கொல்லப்பட அவரது மனைவியும் மகளும் கிளாலியைப் படகில் கடந்து விசுவமடுவை அடைகிறார்கள். பல கஷ்டங்களின் பின்னர் முள்ளியவளையில் குடியிருக்கிறார்கள். மகள் தீபா பாடசாலையில் படிக்கும் போது குயிலன் என்பவனுடன் நட்பாகிறாள். அதன் பின்னர் இவர்கள் படும் துன்பங்களையும் வன்னி யுத்தத்தில் அவர்கள் சிக்கிப் படும் அவலங்களையும் இந்த கதை விளக்குகிறது.**

**2**

இடைநேரத்திற்கு எல்லோரும் கன்ரீனுக்குப் போனார்கள். குயிலனும் போனான். நாம் இருவரும் போகவில்லை. அவனுக்கு எம்மைப் பார்க்க ஏதோ விளங்கியிருக்கும் என நினைக்கிறேன். எம் இருவருக்கும் வடையும் ரொபியும் வாங்கி வந்து எனது நண்பியிடம் கொடுக்க, நண்பி இல்லை வேண்டாம் என்றுசொல்ல, அவனின் முகம் மாறிவிட்டது. நான் சரியில்லைதானே ஆராவது தந்தால் வாங்காமல் விடக்கூடாது. அவர்களை அவமதிக்கிறதாகிவிடும் என்பதற்காகத்தான், உடனே கையை நீட்டினேன். அவனும் தந்து விட்டான். என்னை ஏற-இறங்கப் பார்த்தான். நாமும் அதைச் சாப்பிட்டோம். பின் பாடம் தொடங்கி முடிந்து பாடசாலையும் முடிவடைந்து வீடு சென்று விட்டேன். வீடு சென்றதும் நான் வெளியில் ஒரு அக்கா வீட்டுக்குப் போய்விடுவது வழக்கம். அந்த அக்காவுக்குப் பிள்ளை பிறந்திருந்ததால் உதவிக்காக நின்றேன். எல்லா வேலைகளையும் செய்வேன். அவர்கள் எனக்கு சிறுதொகைப் பணம் தருவார்கள். வழமை மாதிரி அன்றும் அவர்களது வீட்டுக்குப் போய் வேலை செய்துவிட்டு வீடு திரும்பினேன். அம்மா வாசலில் இருந்து ஓலை பின்னியபடி. ''பிள்ள தீபா... உன்ர கவிதா வந்து கொஞ்ச சாமான் தந்திட்டு போறாள். என்னென்று பார்'' என்றார். சரி பார்ப்பம் எனப் பிரித்துப் பார்த்தேன். என்ன சொல்வது நான் சாவகச்சேரியில் வாழ்ந்த உணர்வு தான் வந்தது. புதுச்சட்டைகள், வெள்ளைத்துணி, கீல்ஸ் சப்பாத்து, பணம் இப்படி எனக்குத் தேவையான நிறையப் பொருட்களைக் கொடுத்து விட்டுச் சென்றிருந்தாள். சரி என பொருட்களை எடுத்து வைத்துவிட்டு தூங்குவதற்குச் சென்றால் நித்திரை வரவில்லை. வேறு ஆட்களுக்கு இது சின்ன விஷயம். ஆனால் எனக்கு இது பெரிய விஷயம். ஏன்னென்று தெரியவில்லை. மனதுக்குள் ஏதோ ஒரு பிரச்சினை. ஏன் இப்படி எல்லாம் வாங்கித் தந்திருக்கிறாள், எதுவுமே புரியவில்லை.

மறுநாள் விடிந்தவுடன் நான் பாடசாலை சென்றேன். அங்கு எனது நண்பியைக் காணவில்லை. குயிலன் நின்றான். என்னைக் கண்டதும் ஹாய்... என்றான். நானும் ஹாய்... என்று கூறிவிட்டு வகுப்பு மேசையில் போயிருந்தேன். நண்பியைக் காணவில்லை. என்மனமோ செத்துவிடும் போல் இருந்தது. வரட்டும் என பொறுமையுடன் இருந்தேன். அவள் வந்துகொண்டிருந்தாள். எழுந்து உடனே கேட்கவேண்டும் போல் இருந்தது. ஆனால் வகுப்பு மணி அடித்தது. பாடம் படிப்பிக்க ஆசிரியரும் வந்து விட்டார். ஒரு மாதிரி நேரத்தைக் கழிக்க இடைநேர மணியும் அடித்தது. எல்லோரும் வெளியில் போய்விட்டார்கள். நானும் எனது நண்பியும் தான் இருந்தோம். அப்பொழுது தான் நண்பியிடம் கேட்டேன் ''நீயா உடுப்பு சாமான் வாங்கிவந்தனி'' என்று. அவளும் உடனே ஓம் என்றாள். ''உனக்கே கஷ்டம் பிறகேன் இப்படி வாங்கினி'' என்றேன், அவள் சிரித்தாள். எனக்குக் கோபம் தான் வந்தது. பேசினேன் ''உனக்கேன் இந்தத் தேவையில்லாத வேலை.'' என்றேன். ''பொறு பொறு...'' என்றாள். ''அவசரப்படாதை, அது நான் தான் வாங்கினனான், ஆனால் பணம் என்ரயில்லை'' என்றாள்.

''குழப்பாமல் சொல்லு.''

''காசு தந்தது குயிலன்.''

''எனக்கு ஏன் தர வேணும்? என்னிலமை அவனுக்கு என்னெண்டு தெரியும்?

''நானா சொல்லேல்ல அவனா கேட்டான். அதுவும் நீ நேற்று உன்ர கையால் வடையும் ரொபியும் வாங்கும் போது கையில் இருந்த காயத்தை கண்டிருக்கிறான். அப்பதான் அவன் என்னிடம் கேட்டான். நான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன்.'' எனக்கு தலையே சுற்றுவது போல் இருந்தது. அழுகை அழுகையாக வந்தது. எல்லோரும் ஏன் என்ர கஷ்டத்தை அறியவேண்டும். ஒரு மாதிரியே இருந்தது. மேசையில் போய் இருந்துகொண்டு அழுதேன். அப்பொழுது குயிலனும் வந்தான். நான் மேசையில் தலையை வைத்து அழுது கொண்டிருந்தேன். என்னைக் கண்டிருக்க வேண்டும். கவிதாவிடம் குயிலன் கேட்பது புரிந்தது. ''ஏன் தீபா அழுகிறா?''

''எல்லாம் அந்தச் சாமான் வாங்கிக் கொடுத்ததுதான்'' என்றாள். அவன் எனக்கருகில் வந்து நின்றான். நான் தலை நிமிர்த்தவில்லை என்னைக் கேட்டான், ''உங்களுக்கு என்ன பிரச்சினை, நான் தான் சாமான் வாங்கக் காசு கொடுத்தனான். எங்கட வீட்டுக்காரருக்கும் அதுதெரியும். சொல்லித்தான் காசு வாங்கினனான். நீங்கள் எனக்கு ஒரு சகோதரம் தான். இதனால் உங்களுக்கு என்ன பிரச்சினை வரும். படிப்புக்குத் தானே செய்தன். நீங்கள் இப்படி நடப்பீர்கள் என்று நினைச்சா தந்திருக்கமாட்டன். நீங்கள் கஷ்டப்படாமல் படிச்சு முன்னேற வேண்டும் என்று மட்டும்தான் நினைத்தேன். இது பிடிக்கவில்லை என்றால் பொருட்கள் எல்லாவற்றையும் எரிச்சு விடுங்கோ. நான் ஆரையும் துன்புறுத்த விரும்பவில்லை. அப்படியான பழக்கமும் இல்லை. நீங்கள் அந்த வீட்டுக்குப் போய் ஏன் வேலைசெய்ய வேண்டும். எல்லாம் படிப்புக்காகத் தானே. அந்த வேலைக்குப் போனால் என்னென்று படிக்கிறது, படிப்பதும் இல்லையா? அந்த வேலையை விடுங்கோ.'' - என்று கோபமாக சொல்லிவிட்டு, மேசையில் போய் இருந்துவிட்டான். இதுவரைக்கும் நான் எதுவுமே கதைக்கவில்லை. பாடம் தொடங்கியது.

அப்பொழுது தான் அவனைப் பார்த்தேன். அவன் வகுப்பறையில் இல்லை. கவிதாவைத் தட்டி ''குயிலன் எங்கே?'' என்று கேட்டேன். ''வருத்தம் என்று சொல்லி வெளியில் போய் விட்டான்'' என்று கூறினாள்.



அன்று முழுவதும் படிப்பு ஒன்றும் என் மூளைக்குச் செல்லவில்லை. நினைவு எல்லாம் இதைப்பற்றி. அன்று பாடசாலை முடிவடைந்து போகும் வரைக்கும், அவனைக் காணவில்லை. என் வீட்டில் இருந்து கொண்டு என்ன செய்வது என யோசித் தேன். ஏன் ஆரும் உதவி செய்ய வேணும். என் நிலைமை விளங்கியபடியால் தான் இப்படி செய்திருப்பான். நான் இப்படிச் செய்வது பிழையா சரியா? என என் மனதை நானே கேட்டுக்கொண்டேன்.

**க. தமிழ்மொழியன்**

அப்படி உதாசீனப் படுத்தியது பிழை என எனக்குப் புரிந்தது. ஏன் மற்றவர் மனதை நோகடிப்பான் என்று அவன் சொன்ன மாதிரியே, அன்று அந்த அக்கா வீட்டுக்குப்போய் கடைசிநாளாக வேலை செய்து கொடுத்துவிட்டு, ''நான் இனிமேல் வரமாட்டன்'' என்று சொல்லி விட்டு வந்திட்டன். மறுநாள் பாடசாலைக்குப் போனேன். நான் போகும் போது குயிலன் அங்கு இல்லை. எனக்குச் சரியான கவலையாக இருந்தது. என்னால் தான் அவன் வரவில்லையோ என என் மனதுக்குள் யோசித்தபடியே இருந்தேன். அவன் அப்பொழுது தான் வகுப்பறைக்குள் வந்து புகுந்தான். நான் அவனைப் பார்த்தேன். அவனும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு வந்தான். எனக்கு அப்பதான் சந்தோஷமாக இருந்தது. எனக்கு அருகால் தாண்டிப்போகும் போது ''இப்பதான் நல்ல பிள்ளையாட்டம் இருக்கு'' என்று சொல்லிப் போனான். சொல்வதற்குக் காரணம் இருந்தது. அவன் வாங்கித் தந்த சப்பாத்தில் இருந்து எல்லாத்தையும் நான் போட்டிருந்தேன். அவன் என்னை எவ்வளவு அன்பாக நேசிச்சான் என்பது எனக்குப் புரிந்தது. அன்றுடன் என் உயிர் நண்பன் ஆனான். அன்று என்னிடம் வந்து சொன்னான் என் நட்பை மதிச்சதுக்கு இந்தாங்கோ நட்பின் ஆதாரமாக இதை வைச்சுக் கொள்ளுங்கோ என்று தன் கையில் இருந்த றபர் மோதிரத்தை கழட்டித் தந்தான். நானும் அதை வாங்கிக் கையில் போட்டுக்கொண்டேன்.

இப்படியே எம் காலங்கள் அவன் உதவியால் சிக்கல் இல்லாமல் போய்க் கொண்டிருந்தன. எது செய்வது எண்டாலும் என்னிடம் கேட்டுத்தான் செய்வான். எனக்கு எது பிடிக்கும் பிடிக்காது என்று அறிந்து செய்வான். எது கேட்டாலும் நானும் மறுப்புச் சொல்வதேயில்லை. என்னுடன் முதல்ல சேராத எத்தனையோ மாணவர்கள் சேர்ந்தார்கள். ஆனால் அது எல்லாம் என் உயிர் நண்பனால் கிடைத்தது தானே. அவனைவிட எனக்கு எவருமே தெரியவில்லை. நானும் அவன் சொல்வதைக் கேட்பேன். இப்படியே என் வாழ்க்கை நல்லா ஓடியது.

இப்படிப் போய்க்கொண்டிருக்கும் பொழுது ஒருநாள் பாடசாலையில் துப்புரவு வேலைக்கு எல்லோரையும் விட்டார்கள். அந்த வேலைக்குக் குயிலனும் போனான். எல்லோரும் வேலை முடித்துவிட்டு வந்தனர். ஆனால் குயிலன் வரவில்லை. எங்கு போனான் என்று ஏக்கத்துடன் பார்க்கும் போது, இன்னுமொருவரின் உதவியுடன் நொண்டி நொண்டி வந்தான். அவன் கஷ்டப்பட்டு வருவது எனக்கு வேதனையாக இருந்தது. பெரியமுள் ஒன்று ஏறி உடைந்துவிட்டது. இரத்தம் கசிஞ்சு கொண்டிருந்தது. என் கைக்குட்டையைக் கொடுத்தேன். அதனால் காலைக் கட்டிவிட்டு மேசையில் படுத்து விட்டான். அவனுக்கு வேதனையாக இருந்திருக்க வேண்டும். பாடம் முடிய எப்படியிருக்கு என்று கழட்டிப்பார்த்தால் முள் இருந்தது. அதை எடுப்பதற்கு என் ரையில் இருந்த ஊசியை கழற்றிக் கொடுத்தேன். ஒரு நண்பன் முயற்சி செய்தான். ஆனால் எடுக்கத் தெரியவில்லை குயிலன் அழத்தொடங்கினான். அதைப் பார்க்க எனக்கு அழுகை வந்துவிட்டது. அழுதபடியே பார்த்துக் கொண்டு இருந்தன். எடுப்பதாகத் தெரியவில்லை. என் மனம் தாங்காமல் போய் நான் எடுப்பதாகக் காலைப்பிடித்தேன்.

(தொடரும்...)

## நீரிழிவு நோயாளிகளுக்கான உடற்பயிற்சிகள்

நீரிழிவு நோயாளிகள் சில உடற்பயிற்சிகளை தொடர்ந்து செய்து வந்தால், அந்த நோயை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம். அந்த உடற்பயிற்சிகள் :

**1. கெண்டைக்கால் சதையை நீட்டுதல்**

முழங்கை மடங்காமல் கைகளை நீட்டி, உள்ளங்கைகளை சுவரில் பதிக்க வேண்டும். கால்கள், சுவரில் இருந்து சிறிது தூரத்தில் இருக்கும் நிலையில் உள்ளங்கால்களால் தரையைக் கெட்டியாக அழுத்தியபடி நிற்க வேண்டும். பின்னர் கைகளை மடித்து, நீட்ட வேண்டும். அதேசமயம் உடல், கால்கள், பாதங்கள் நேராக இருக்கும் படியும் வைத்து முன்னும் பின்னும் அசைக்க வேண்டும். இந்த பயிற்சியை 10 முறை செய்ய வேண்டும். இந்த பயிற்சியால் கெண்டைக்கால் பிடிப்பு நீங்கும். கால் மரத்துப் போகாது.

**2. நாற்காலி பயிற்சி**

ஒரு கதிரையில் உட்கார வேண்டும். கைகளைக் குறுக்காகக் கட்டிக் கொண்டு கதிரையில் இருந்து எழுந்து உட்கார வேண்டும். இவ்வாறு 10 முறை செய்ய வேண்டும்.

**3. கால் வீசுதல்**

ஒரு ஸ்டூலில் ஏறி நின்று கொள்ள வேண்டும். அருகில் உள்ள ஏதேனும் ஒன்றைப் பிடித்துக்கொண்டு ஒரு காலை ஸ்டூலில் இருந்து எடுத்து முன்னும் பின்னுமாக வேகமாக ஆட்ட வேண்டும். இதுபோன்று 10 முறை செய்ய வேண்டும். இன்னொரு காலுக்கும் இதேபோல் பயிற்சி கொடுக்க வேண்டும்.

**4. வாக்கிங்**

தினமும் 30 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை நடைப் பயிற்சி செய்ய வேண்டும். வேகமாகவும் இல்லாமல், மிகவும் மிதமாகவும் இல்லாமல் ஓரளவுக்கு வேகமாக அதிக மூச்சு வாங்காமல் நடக்கவேண்டும். நடக்கும் தூரத்தைப் படிப்படியாக அதிகரிக்க முயற்சி செய்வது நல்லது.

**5. மாடிப்படி பயிற்சி**

பாதத்தின் முன்பகுதியை மட்டும் ஊன்றியபடி மாடிப்படிகளில் மிதமான வேகத்தில் ஏறி இறங்க வேண்டும்.

**6. முழங்கால் வளைத்தல்**

ஒரு கதிரையைக் கையால் பிடித்துக் கொள்ள வேண்டும். முதுகை வளைக்காமல் நேராக வைத்துக் கொண்டு முழங்காலை 10 முறை மடக்க வேண்டும்.

இன்னொரு முறையிலும் இதேப் பயிற்சியை செய்யலாம். கால்களை நீட்டி தரையில் உட்கார வேண்டும். பின்னர் உள்ளங்கைகளைத் தரையில் பதித்து, சிறிது பின்னால் சாய்ந்தபடி உட்கார வேண்டும். காலை உயர்த்தி முன்னும், பின்னுமா கவும், பக்கவாட்டிலும் அசைக்க வேண்டும். கால் பிடிப்பு நீங்கும் வரை இவ்வாறு செய்ய வேண்டும்.



பின்குறிப்பு : நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் வயது, உடல்நிலைக்கு ஏற்றபடி இந்த பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பயிற்சியை தொடங்கும் முன்பு மருத்துவரின் ஆலோசனை பெறுவது அவசியம். *

# அன்பு வழி

முரளியின் அப்பாவுக்கு உடம்பு சரி இல்லை. ஜுரம் அதிகமாகவே இருந்தது. எழுந்திருக்கவே முடியாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அவருக்கு வேளைக்கு மருந்து கொடுக்கவும் கஞ்சி வைத்துக் கொடுக்கவும் தெரியாமல் தவியாய்த் தவித்தான் முரளி. பாவம் அவனுக்கு அம்மா இல்லை. அம்மா இறந்து போய் இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன.


ஜுரவேகத்தில் முரளியின் அப்பா முனகிக் கொண்டிருந்தார். ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குச் சென்றான் முரளி. அவனைப் பார்த்தும் பார்காதவளைப்போல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள் பக்கத்து வீட்டு மாமி.

''மாமி.. கொஞ்சம் கஞ்சி வைத்துக் கொடுக்கிறீர்களா...? அப்பா கண்ணைத் திறக்காமல் கிடக்கிறார்...'' என்று கேட்டான் முரளி.குரலில் வருத்தம் பொங்க.

''கிடப்பார்! கிடப்பார்! ஒரு நாளா' இரண்டு நாளா....விளையாட்டுப் போல் ஒரு வாரமாச்சு. தினம் கஞ்சி வைத்துக் கொடு, கஷாயத்தைப் போட்டுக் கொடு.. என்றால் யாரால் முடியும்...? பேசாமல் ஒரு கலியாணத்தைப் பண்ணிக் கொள்வதுதானே..?'' கடுகு வெடிப்பது போல் பொரித்துக் கொட்டினாள் அந்த மாமி.

''மாமி...'' கெஞ்சினான் முரளி.

''பாத்திரத்தை வைத்திவிட்டுப் போ. கை ஒழிந்தால் பார்க்கலாம்..'' வேண்டா வெறுப்பாகச் சொன்னாள் அந்த மாமி.



'அப்பாவுக்குப் பசிக்குமே....' என்று எண்ணினான் முரளி. அவனுக்கு அடக்க முடியாமல் அழுகை வந்தது. சிரமப்பட்டு அடக்கிகொண்டு வீட்டுக்கு வந்தான். அப்பாவின் அருகில் வந்தான்.

''கொஞ்சம் வெந்நீர் வேண்டுமே...'' என்றார் அப்பா, பலவீனமான குரலில்.

''அப்பா....'' என்றான் முரளி. உடனே 'ஓ'வென்று அழுது விட்டான்.

''ஏண்டா, கண்ணு..அழறே?'' என்று கேட்டார் அப்பா.

''உனக்கு...உனக்குக் கஞ்சி வைக்கணும், வெந்நீர் போடணும் ...எனக்கு அடுப்புப் பற்ற வைக்கவே தெரியலை...'' என்று சொல்லிக்கொண்டே மேலும் அழுதான் முரளி.

''எனக்கு வெந்நீர் வேண்டாம்... நீ அழாதே முரளி..'' என்றார் அப்பா.

கண்களை துடைத்துக்கொண்டு தன் அப்பாவைப் பார்த்தான் முரளி.

''அப்பா...நீ வந்து... கலியாணம் பண்ணிக்கோ... அப்பா'' என்று சொன்னான்.

ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார் அப்பா.

'' உனக்கென்னடா அதைப் பற்றி? குழந்தையாய் லட்சணமாய் பேசாமலிரு..'' என்று அதட்டினார்.

''முடியாது நீ கல்யாணம் பண்ணிக்கணும்...'' என்றான் முரளி.

''நான் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கொண்டால் உனக்குத் தான் கஷ்டம். சித்தி உன்னை ஏதாவது கஷ்டப்படுத்துவாள். நீ அழுது கொண்டு என்னிடம் வருவாய். எதற்கு வீண் தொல்லை? அதனால் தான் நான் பண்ணிக்கொள்ளப் போவதில்லை'' என்று சொன்னார் அப்பா.

''சித்தி என்ன பண்ணினாலும் நான் அழ மாட்டேன். நீ பண்ணிக்கோ'' என்று கெஞ்சினான் முரளி.

''சரிதான் போடா'' என்று சீறினார் அப்பா. முரளி அழுது கொண்டே நகர்ந்தான்.

இதற்குப் பிறகு ஒரு வாரம் சென்றது. முரளியின் அப்பாவுக்கு உடம்பு கொஞ்சம் சுமார் ஆயிற்று. எழுந்திருந்து வீட்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தார். இருந்தாலும் வீட்டு வேலைகளையும் கவனித்துக்கொண்டு, முரளியையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டுத் தானும் ஆபீஸுக்குப் போய் வர மிகவும் சிரமப்பட்டார்.

தன் அப்பா படுகிற கஷ்டத்தைப் பார்த்து முரளி வருத்தப்பட்டான். அவன் எவ்வளவோ சொல்லியும் அவர் இரண்டாவது கலியாணம் செய்துகொள்ள ஒப்பவில்லை.

தன்னால்தானே அப்பாவுக்கு இவ்வளவு சிரமம்? தனக்காகத் தானே அப்பா இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கிறார்' என்று அவனுடைய மனம் எண்ணி எண்ணி வருந்தியது. பலவிதமாக யோசித்தான் முரளி. பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். துண்டுக் காகிதத்தையும் பென்சிலையும் எடுத்து வைத்து கொண்டு எழுத ஆரம்பித்தான்.

''அன்புள்ள அப்பாவுக்கு, நான் என்ன சொல்லியும் நீங்கள் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. எனக்காகத்தான் நீங்கள் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. அதனாலே உங்களுக்கும் கஷ்டம்; எனக்கும் கஷ்டம் என்று நம் வீட்டு வேலைக்காரி கூடச் சொல்கிறாள். அதுக்காக நான் இந்த வீட்டை விட்டே எங்கேயாவது போக முடிவு பண்ணிட்டேன். நான் போயிட்டா நீங்கள் கல்யாணம் பண்ணிடுவே. நான் போறேன்-முரளி.'' இதை எழுதியதும் காகிதத்தை எடுத்து நான்காக மடித்தான் முரளி. உடனே அவன் கையிலுள்ள கடிதத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டார் அங்கே வந்த அப்பா.

''அப்பா!'' என்று பெரிதாக அழ ஆரம்பித்தான் முரளி.

''அசடே, நீ சொன்னபடியே செய்யறேன். அழாதே!'' என்று தேற்றினார் அப்பா.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## 2 ஹாத்திம்தாய்

புத்தாக்கம் : கே. கான்










ஜனனி குனரட்ண
ஆண்டு-06



தயாபரன் டிசான்
ஆண்டு-03



# பரிமாற்றத்தால் வந்த வினை

ஒரு பிராமணக்குரு இருந்தார். ஒருமுறை அவர் பணக்காரர் ஒருவரின் ஜாதக பலன்களைப் பார்க்க அவருடைய மாளிகைக்குச் சென்றார். தனது எதிர்காலப் பலன்களை அறிந்த பணக்காரன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தங்க நாணயங்கள் நிரம்பிய ஒரு பையைப் பரிசாகக் கொடுத்தபடி "இப்போதைக்கு இதை வைத்துக்கொள்ளுங்கள்; உங்களுடைய வாக்குப் பலித்தால் மிகுதியைப் பிறகு தருவேன்" என்றார்.


பிராமணர் மகிழ்ச்சியோடு தனது ஊருக்குத் திரும்பலானார். அப்போது மல்லனைப் போன்ற குண்டன் ஒருவன் அவரைப் பின்தொடர்ந்தான். பிராமணக்குரு காட்டுப்பகுதியை அடைந்ததும், தடியைக் காட்டி பையைத் தருமாறு கேட்டான்.

குரு சொன்னார் : "சகோதரா, தடியைக் காட்டி பையைப் வாங்கிக்கொண்டால் பலாத்காரமாகப் பையைப் பறித்துக் கொண்டதாகவே மக்கள் சொல்வார்கள். இது கொள்ளையடிப்பது போன்றதல்லவா? நான் பழங்காலத்துக்குரிய மனிதன். பண்டமாற்றில் நம்பிக்கை வைக்கிறேன். நீ உனது தடியை எனக்குத் தா. பதிலாக இந்தப் பையை நீ எடுத்துக் கொள்."

குண்டன் உடனே அதற்கு இணங்கினான்.

இப்போது குருவின் கையில் தடி இருந்தது. குண்டனின் கையில் பை இருந்தது.

பிராமணர் அந்தத் தடியி



னால் குண்டனின் தலையில் விளாசிய படி "சகோதரா, அந்தப் பையையும் எனக்கே தந்துவிடு. நான் ஒரு பிராமணன். தட்சணையை ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டேன்" என்றார்.

# நாய்க்குட்டி



வெள்ளை வெள்ளை நாய்க்குட்டி
வெகுளியான நாய்க்குட்டி!
சின்ன சிறிய நாய்க்குட்டி
சினேகமான நாய்க்குட்டி!

பஞ்சு போன்ற நாய்க்குட்டி
பழக நல்ல நாய்க்குட்டி!
பாலை நன்றாய்க் குடிக்கும்
பாசமான நாய்க்குட்டி!
கள்வர் வந்தால் குரைக்கும்
களவு இல்லா நாய்க்குட்டி!

அம்மா பின்னால் ஓடும்
அச்சம் இல்லா நாய்க்குட்டி!
தம்பி தங்கை கண்டால்
தாவித் தாவிக் குதிக்கும்!
நேசம் கொண்டு எம்முடன்
நெருக்கம் காட்டும் நாய்க்குட்டி!

கவிஞர் இளம்பிறை மகன்



**மகன் :** அப்பா, நீங்கள் எழுதித் தந்த குறிப்புகளை வைத்துக்கொண்டு பள்ளிக் கூடப் பேச்சுப் போட்டியில் நான் இரண்டாவது பரிசு பெற்றேன்.

**தந்தை :** பேச்சுப்போட்டி என்றால், உன் அம்மாவைக் கேட்டுக் குறிப்பு எழுதிக் கொண்டு போயிருக்கக்கூடாதா? முதல் பரிசு வாங்கியிருக்கலாமே.




# பன்னாட்டுப் பழமொழிகள்

அயர்லாந்து

1) அடிமை போல் உழைத்திடு, அரசனைப் போல் வாழ்ந்திடு.
2) நாளை கிடைக்கும் கோழியைவிட இன்று கிடைக்கும் முட்டை மேலானது.
3) பொய்யன் வீடு தீப்பற்றி எரிந்தாலும் அச்செய்தி பொய்யாகிவிடும்.
4) ரோஜாவையும் விரும்பு, அதன் முள்ளையும் நேசி.
5) முட்டாளுடன் விருந்துண்பதைவிட அறிவாளியுடன் கூலி சுமப்பதுமேல்.

அல்பேனியா

1) ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால்தான் அதிக தீமை.
2) ஆயிரம் நூல்களைக் கற்பதைவிட அறிஞர்கள் கூறும் பழமொழிகளே அதிக அறிவைத்தரும்.
3) ஒரு கையைத் தட்டினால் ஓசை எழாது.
4) கத்தும் பூனை எலி பிடிக்காது.
5) கசப்பான சொல் வெறுப்பைத் தரும்.

எம்.ஐ.ஏ.இஃஜாஸ், தரம் - 9 D,
கமு/ அல் -அஸ்றக் தே.பா., நிந்தவூர் - 19.

# மஜிக் செய்து பார்க்கலாமே

## தேய்ந்து மறையும் காசு



இது ஒரு காசை மறைய வைக்கும் மஜிக். இது மிகச் சுலபம். ஆனால், சரியாகச் செய்யாவிடில் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும் அதனால், பலமுறை பயிற்சி செய்த பின்னர் மற்றவர்களிடம் செய்து காட்ட வேண்டும்.

உங்கள் நண்பர்களிடமிருந்து ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை வாங்கி இதனைக் கையிலேயே மறைய வைக்கிறேன் என்று சொல்லுங்கள். இப்போது இடது கையை படத்தில் உள்ளதுபோல் மடக்கி வைத்துக் கொண்டு வலது கையில் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்துக் கொள்ளவும்.



அந்த நாணயத்தை உங்கள் இடது முழங் கையில் தேய்த்துக்கொண்டே இருக்கவும். திடீரென்று நாணயம் தவறி விழுந்தது போல் கீழே விட்டு அந்த நாணயத்தை உங்கள் இரண்டு கையால் எடுக்கவும். இதுபோல், காசை இரண்டுமுறை தவற விட்டு இரண்டு கையால் காசை எடுத்து மீண்டும் மீண்டும் முழங்கையில் தேய்க்கவும். இப்படிச் செய்யும்போது, அதாவது, காசை இரண்டு கையால் குனிந்து



எடுக்கும்போது ஒரு முறை காசை இடது கைக்கு யாருக்கும் தெரியாமல் மாற்றிக் கொண்டு விட்டு, உங்கள் வலது கையை காசு உள்ளதுபோல் இடதுகை முழங் கையில் தேய்க்கவும்.

இப்போது உங்கள் இடது கையில் உள்ள காசை தெரியாமல் உங்கள் சட்டைக் கொலரில் சொருகி வைக்கவும். உடனே வலது கையைக் காண்பித்து காசு மறைந்ததைச் சொல்லவும். மீண்டும். கையைத் தேய்த்து கொலரில் உள்ள காசைத் தெரியாமல் எடுத்து திடீரென்று கீழே விடுமாறு செய்து ஆச்சர்யத்தை ஏற்படுத்தவும்.



# கரந்தடிப்படை

-வே.தில்லைநாதன்-

அம்மா புயல் போல வீட்டுக்குள் நுழைந்தாள். கைப்பையையும் குடையையும் ஒரு கதிரையில் வீசினாள். இன்னொரு கதிரையில் பொத்தென அமர்ந்தாள். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"மதியாதார் முற்றம் மிதியாதே. இனி நான் அந்த வீட்டுப் பக்கமே போகமாட்டேன். எல்லாம் பணத்திமிர். என்னை விரல் சூப்புகிற குழந்தை என்று நினைத்துத்தானே அவமதித்திருக்கிறார்கள்" அம்மா குமுறினாள்.

அப்பாவும் பிள்ளைகளும் நடந்தது தெரியாமல் ஆளையாள் பார்த்தார்கள். அலங்கமலங்க விழித்தார்கள். அப்பா சுடுநீர்ப் போத்தலில் இருந்த தேநீரில் சிறிதளவு எடுத்து அம்மாவிடம் நீட்டினார். மகள் மின்விசிறியைச் சுழல விட்டாள்.

அம்மாவின் செல்ல மகன் அவளருகில் அமர்ந்து ஆதரவாக, "என்னம்மா நடந்தது?" என வினவினான். அவர்களது கவனிப்பில் ஆறுதல் அடைந்தாலும் அம்மா சிடுசிடுத்தாள். "எனக்குக் காது குத்தப் பார்க்கிறார்கள். எனக்கு எப்போதோ காது குத்தியாயிற்று. பேரம்பலம் மாமா ஆஸ்பத்திரியில் இருக்கிறாராம்; ஒரு கால் விரலை அகற்றி விட்டார்களாம். என்னவென்று விசாரிக்க அங்கே போயிருந்தேன். பேரம்பலம் மாமி கதை விடுகிறார். மாமாவுக்கு விரலில் புண் இருந்ததே தெரியாதாம். வலி வேதனை எதுவுமே இருக்கவில்லையாம். இதை நான் நம்ப வேண்டுமாக்கும்."

இடைமறித்தார் அப்பா, "அவருக்கு நீரிழிவு வியாதி தீவிரமடைந்துவிட்டது போலும்" என்றார். "அதுதானே இன்னும் வேடிக்கையான சங்கதி. அவருக்கு நீரிழிவு இருந்ததே தெரியாதாம். நான் ஆசிரியை என்பதையும் மறந்து எனக்கு மடைப்பட்டம் கட்ட நினைக்கிறார்கள்." அம்மாவின் குரலில் மீண்டும் உஷ்ணம் ஏறத் தொடங்கியது.

"அவர்கள் சொன்னது சரியாகவும் இருக்கலாம், சுமதி. எல்லோருக்குமே நோயின் குணங்குறிகள் தெரிவதில்லையாம். காலம் கடந்தே அவர்களுக்கு நோய் பற்றித் தெரிய வருகிறது. நீரிழிவு பயங்கரமான நோயில்லாவிட்டாலும், தகுந்த சிகிச்சை அளிக்கத் தவறினால் அது கண், சிறுநீரகம், நரம்பு, இரத்தக் குழாய் போன்ற உறுப்புகளைத் தாக்கி விடும். சலத்திலுள்ள சீனியை எப்பொழுதும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், எந்தப் பாதிப்பும் ஏற்படாது." என அம்மாவை ஆறுதல்படுத்திய அப்பா, "நான் உனக்கு ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். அதை நம்புவது கடினமாகத்தான் இருக்கும். ஆனாலும் அது உண்மை. ஒரு கடி எறும்பு கடித்தாலே எங்களுக்கு எவ்வளவு கடுப்பு ஏற்படுகிறது. ஆனால், ஒருநாள் எனது அலுவலக நண்பர் ஒருவரின் புறங்கால் புண்ணில் சிவப்பு நிறக் கடி எறும்பு மொய்த்துக் கடித்தபோது அவரால் அதை உணரவே முடியவில்லை. அதைப் பார்த்த எனக்கு மெய் சிலிர்த்தது. உரோமங்கள் குத்திட்டு நின்றன. நான் அவரை எச்சரித்திருக்காவிட்டால் அவர் வலியை உணர்ந்திருக்கவே மாட்டார்."

"என்ன அதிசயம்!" என வியந்தாள் அம்மா. "எனக்கும் அதிசயமாகத்தான் இருந்தது. நாள்பட்ட நீரிழிவு நோய் காரணமாக அவரது நரம்புகள் பாதிக்கப்பட்டிருப்பதாக நான் பின்னர்தான் அறிந்து கொண்டேன். ஆகவே, பேரம்பலம் மாமாவுக்கு வலி தெரியாமல் இருந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை" என்றார் அப்பா.

அப்பா சொன்னதை நம்ப முடியாது அம்மா திகைப்புற்றிருந்தபோது மகன் சொன்னான், "அம்மா, நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற சில நோய்களை வைத்தியர்கள் கரந்தடி படை என்று கூறுகிறார்கள். அவை ஒளித்திருந்தே உயிரைக் குடித்துவிடும்."

"கரந்தடிப்படை என்றால் என்ன, அண்ணா?" தங்கை கேட்டாள்.

"கரந்தடிப்படை என்றால், ஒளித்திருந்து தாக்கும் படை" என அவன் பதிலளித்தான்.

"சுமதி, நாற்பது வயதுக்குப் பின்னர் எல்லோரும் அவசியம் வைத்திய பரிசோதனை செய்ய வேண்டுமாம். அதுமட்டுமல்ல, உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் நல்லதென்றும் சொல்கிறார்கள். நான் எத்தனை தடவை உன்னை இரத்தப் பரிசோதனை செய்ய அழைத்திருக்கிறேன். 'எனக்கென்ன, நான் கல்லு மாதிரி இருக்கிறேன்' என்று மறுத்துவிடுவாயே" என அப்பா கவலைப்பட்டார்.

"நாற்பது வயதுக்குப் பின்னர்தான் இப்படியான நோய்கள் ஏற்படுமா? வைத்திய பரிசோதனை மூலம் எல்லா நோய்களையும் கண்டுபிடித்துவிட முடியுமா?" மகள் அப்பாவைப் பார்த்து ஆவலுடன் கேட்டாள்.

"அப்படிச் சொல்ல முடியாது. அது பரம்பரை இயல்புகளைப் பொறுத்தது. ஒரு வகையான நீரிழிவு நோய் சிறுவர்களைக்கூடத் தாக்கக்கூடியது" என அப்பா கூறிக்கொண்டிருந்தபோது குறுக்கிட்ட மகன், "மரபைப் பொறுத்தும் உணவுப் பழக்கவழக்கங்களைப் பொறுத்தும் நாற் பது வயதுக்கு முன்னரே இரத்தக் குழாயில் கொழுப்புப் படிவு ஏற் பட்டு மாரடைப்பு, பக்கவாதம் என்பன ஏற்படலாம். சில விளையாட்டு வீரர்களே இளம் வயதில் இறந்திருக்கிறார்கள்" என்று கூறினான்.

"நான் இன்னொரு கேள்வி கேட்டேனே? மருத்துவ பரிசோதனையில் எப்போதுமே ஒளிந்திருக்கும் நோய்களைக் கண்டுபிடித்துவிட முடியுமா?" மகள் திரும்பவும் கேட்டாள்.

அப்பா சிறிதுநேரம் யோசித்த பின்னர் கூறினார் : "உலகத்திலேயே தலைசிறந்த வைத்திய நிபுணர்களின் கவனிப்பிருந்தும், முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு இதய நோய் வந்தது தெரிந்த விடயம்தானே? அதற்காக நாம் அலட்சியமாக இருந்துவிட முடியுமா?"

எல்லாவற்றையும் கேட்டவாறே சிந்தனையில் ஆழ்ந்திருந்த அம்மா திடீரென மகனை நோக்கி, "தம்பி, ஆட்டோவுக்கு ஃபோன் பண்ணு. நான் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும், பேரம்பலம் மாமாவைப் பார்க்க" என்றாள். அவளது மனமாற்றத்தை அப்பா இரசித்தார்.

ஆட்டோவில் ஏறுவதற்கு முன்பதாக அம்மா அப்பாவை அருகில் அழைத்து, "அப்பா, நீங்களும் நானும் இரவுச் சாப்பாட்டை நேரத்துக்கு முடிக்கிறம். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை அல்லவா? இரண்டு பேரும் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும்" என்று கட்டளை இடும் தொனியில் கூறினாள்.

அப்பாவின் முகம் மேலும் மலர்ந்தது. ★



# முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும் 6

**முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.**

நாம் தங்கியிருந்த முகாமில் ஒரு குடும்பத்துக்கு நாளாந்தம் 30 லீற்றர் நீர் வழங்கப்படுகிறது. பதிவு அட்டையுடன் பெறவேண்டும். முகம் கழுவுதல், மலசலகூடபாவனை, சமையற் பாத்திரங்கள் கழுவுதல், குளித்தல், உடை கழுவுதல் உள்ளிட்ட சகல தேவைகளை யும் குறித்த நீரை வைத்தே சமாளிக்க வேண்டும்.

சில குடும்பத்தினருக்கு மலசலகூட பாவனைக்கே நீர் போதாத நிலையில் மற்றைய தேவைகளைப் பூர்த்தி செய்வதென்பது பெரும் பிரச்சினைக்குரியதொன்றாக இருந்தது.

இவ்வாறான நீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக குழாய்க் கிணறுகளை தேடி மக்கள் கூட்டம் அலைமோதும். அங்கும் வரிசை. பாத்திரங்களில் நீர் எடுப்பதற்கு குறைந்தது 6 மணித்தியாலங்கள் தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை எடுக்கும். இரவு பகலாக வரிசையில் நின்று கொஞ்சை நீரைப் பெறுவோம், அவற்றைக் கொண்டு ஏனைய தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்வோம். குளிப்பது என்பது பெரும் கஷ்டம். அவ்வாறு குளிப்பதென்றாலும் 20 அல்லது 30 லீற்றர் நீரிலியே குளிக்க முடிகிறது. அதுவும் வாரத்தில் ஓரிருதடவைதான்.

சிலர் சற்று தூரத்தில் அமைந்துள்ள ஒரு வாய்க்காலுக்கு குளிக்கச் செல்வார்கள். அதுவும் எல்லா மக்களும் குளிக்கக் கூடியளவிற்கு சுகாதார முறையிலான புறச்சூழலையோ அதிக நீரையோ அந்த வாய்க்கால் கொண்டிருக்காததால் அதில் குளிப்பவர்களுக்கு சொறி சிரங்கு ஏற்படத் தொடங்கின. இருந்தாலும் பலர் இன்று வரை அதில் குளிப்பதை அவதானிக்க முடிகிறது.

### மருத்துவமும் சுகாதாரமும்

மருந்து எடுக்க வேண்டுமானால் இரவில் போய் வைத்தியசாலையில் தங்கி நின்று காலைவரை வரிசையில் நின்று 8 மணியளவில் வழங்கப்படும் இலக்கங்களைப் பெற்று வைத்தியர் வரும்வரை காத்திருக்க வேண்டும். வைத்தியர் 10 அல்லது 11 மணியளவில் வருவார். மட்டுப்படுத்தப்பட்ட நோயாளர்களைக் குறிப்பிட்ட நேரம் பார்த்துவிட்டுப் போய்விடுவார். அநேகமான நோயாளர்கள் சந்தர்ப்பம் கிடைக்காமல் மீண்டும் அடுத்த நாளை எதிர்பாத்திருப்பார்கள். சில நாட்களில் வைத்தியர்கள் வருவதும் இல்லை. சிங்கள வைத்தியர்கள் அதிகம் வருவதால் நோயாளர்கள் தங்கள் நோயின் அறிகுறிகளை முழுமையாக சொல்லமுடியாத நிலைமை ஏற்படும். மொழி பெயர்ப்பாளர்கள் சிலரது உதவியுடன் வைத்திய சேவை நடைபெறும்.

மலசலகூடம் தேவைக்கேற்ப இல்லாததாலும் இருப்பதையும் பலர் அசுத்தப்படுத்துவதாலும் பலர் பொது இடங்களில் மலம் கழித்துவிடுகின்றனர். மற்றும் கழிவு வாய்க்கரல்களில் தண்ணீர் தேங்கி நிற்பதாலும், கழிவுப்பொருட்களை கழிவுத் தொட்டிகளைத் தவிர்த்து ஏனைய இடங்களில் போடுவதாலும் நல்ல சுவாத்தியமான சூழல் இல்லாத நிலை. பகலில் இலையான் தொல்லை. இரவில் நுளம்புத் தொல்லை. இவற்றுக்குள் தான் எமது வாழ்க்கை.

### தொடர்பாடலும் உறவினர் சந்திப்பும்

முகாம்களுக்குள் கொண்டு வரப்பட்டவர்கள் தாம் உயிருடன் வந்து விட்டோமென்று தமது ஏனைய உறவுகளுக்கு தெரியப்படுத்துவற்கு எந்தவித வசதிகளும் இல்லை. கடித தொடர்பையோ தொலைபேசி தொடர்பையோ மேற்கொள்ளும் வகையில் எவ்வித வசதிகளும் செய்து தரப்படவில்லை. வன்னியிலிருந்த எமது உறவுகள் தப்பி வந்த விட்டார்களா இறந்துவிட்டார்களா என்று நாளாந்தம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த பிற மாவட்ட மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் ஏக்கம் எமக்கு தெரிந்து இருந்தும் தகவல்களை தெரியப்படுத்த முடியாத அவலநிலை.

சிலரை இனங்கண்டு கொண்ட எம்மில் சிலர் அவர்களிடம் சிலநூறு ரூபாக்களை கைக்குள் வைத்து சிலநிமிடங்கள் தொலைபேசியூடாக தகவல்களை பரிமாறிக் கொள்கிறார்கள். தொலைபேசி சேவைக்கு அனுமதி இல்லாததைப் பயன்படுத்தி அதிக பணம் பெற்றுக் கதைப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் சிலர் இருந்ததால் எம்மால் செய்திகளை பரிமாற முடிந்ததில் ஓர் திருப்தி. இருந்தும் எமது உறவுகளை ஒருமுறையாவது பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்காதா என்னும் ஏக்கமும் சில நாட்களில் அது நிறைவேறப் போகிறது எனும் சந்தோஷமும் எமக்கு இருந்தது. அந்த நாளும் வந்தது. ஒலி பெருக்கியூடாக உறவினர் சந்திப்பு தொடர்பான அறிவித்தல் கிடைக்கப் பெறுகிறது. சந்திப்பு இடத்தை சென்றடைய அரைமணி நேரம் நடக்க வேண்டும். அந்த வெய்யிலும், கழிவுவாய்க்கால் நீரின் துர்நாற்றமும், மலசல கூட மணமும், வாகனங்கள் செல்லும் போது ஏற்படும் புழுதியும் எமது பயணத்தை மேலும் தாமதப்படுத்தும்.

# உணர்வுபூர்வமாக நடைபெறும் உறவினர்களுடனான சந்திப்பு



எத்தனை வருடங்களுக்குப் பிறகு சந்திக்கப் போகிறோம். எத்தனை விடயங்கள் கதைக்க இருக்கின்றன. ஒவ்வொன்றையும் மனதில் மீட்டுப் புதுப்பித்தவாறு சந்திப்பு இடத்தை அடைகிறோம்.

அது ஒரு வேலிக்கரை, வவுனியா - மன்னார் பிரதான வீதியாக இருந்தது. மக்கள் கோவில் திருவிழாவில் நிற்பதுபோல் கூட்டமாக நிற்கிறார்கள். அவர்களுடன் நாங்களும் இணைகிறோம். நாம் நிற்கும் வேலியிலிருந்து குறைந்தது 200 முதல் 300 மீற்றருக் கப்பால் எம்மைச் சந்திக்க-பார்க்க வருபவர்கள் நிற்கிறார்கள். அவர்களுள் எமது உறவுகள் எங்கேயென எமது விழிகள் தேடலாயின. அவர்கள் நெருக்கமாக நின்றதால் இனங்காண்பதில் சிக்கல். அதுபோல் அவர்களும் எம்மை இனங்காண்பதில் இவ்வாறான பிரச்சினையை எதிர்நோக்கியிருப்பார்கள் என்பதனை யும் அறியக் கூடியதாக இருந்தது.

40 முதல் 50 வரையானவர்கள் தங்களுக்கான இராணுவ சோதனையின் பின் பிரதான வீதியைத் தாண்டி எம்மை நோக்கி ஓடி வருகிறார்கள். அதில் எங்களது உறவினர்களும் வருகிறார்களா? நிச்சயம் வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு மட்டுமல்ல அங்கு கூடியிருந்த எல்லோருக்கும் இருந்ததால் பார்வையைக் கூர்மையாக்கி வந்தவர்களை உற்று நோக்கினோம். அதில் அவர்கள் வரவில்லை. கொஞ்சம் பின் பக்கமாக வந்து நின்று மற்றவர்கள் பார்ப்பதற்காக வழி விடுகிறோம். பலர் அழுதார்கள். ஓரிரு வார்த்தைகள் பேசினார்கள். விசில் ஒலி, ஆம் காவற்படையில் இருந்த இராணுவச் சிப்பாயின் சமிக்ஞை தான் இது. அவர்களுக்கான பார்வையிடும் நேரம் முடிந்தது. இவ்வாறான முறைகளில் சந்திப்புக்கள் இடம் பெற்றுக் கொண்டே இருந்தன. மதியம் 1.30 மதியநேர உணவு இடைவேளை. கடமையிலிருந்த இராணுவத்தினர் போய்விடுகின்றனர். அவர்கள் மீண்டும் வரும் வரை இக்கரையில் நாங்களும் அக்கரையில் அவர்களும் என 3 மணிவரை காத்திருந்தோம்.

மீண்டும் சந்திப்புக்கள் தொடங்கின. வந்துவிட்டார்கள் எங்கள் உறவுகள். நெருக்கமாக வந்துவிட்டார்கள். முள்ளுக்கம்பி தடுக்கிறது. கண்கள் மட்டும் பேசின. அதில் வடிந்தது கண்ணிரில்லை இரத்தம் என்றுதான் சொல்ல வேண்டும். எதைப் பேசுவது எதையும் பேசமுடியாமல் கதறியழும் உறவுகளோடு நாங்களும் அழுவதைத் தவிர வேறெதையும் கதைக்க முடியவில்லை. குறுக்கே இருந்த கம்பிவேலியும், சுற்றி நின்ற ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும், மக்களின் அவலமும், பின்தளக்காட்சியாயிருந்த கொட்டகைகளும் எமது வாழ்க்கை பற்றிய வினாவுக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்க எமக்கான அந்தச் சில நிமிட நேரம் முடிவடைகிறது. இருபகுதியினரும் விடைபெறுகிறோம்.

இதுதான் எங்களுக்கான சந்திப்பு. வேறு சில முகாம்களில் இரண்டு வேலிகள். குறைந்தது நான்கடிக் கப்பாலிருந்து கொண்டுதான் கதைக்க வேண்டும். இவ்வாறான சந்திப்புக்கள் தான் இன்றுவரை தொடர்கிறது.

### கல்வி

தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மேலாக கல்வியைத் தொடரமுடியாது இருந்த மாணவர்களுக்கு இடம் பெயர்ந்த நிலையிலுள்ள ஆசிரியர்கள் கிடைக்கின்றனர். அவர்களது கற்றல்-கற்பித்தல் மர நிழலிலும், மட்டுப்படுத்தப்பட்ட கொட்டகைகளிலுமாக வெறும் தரையிலிருந்தவாறு தொடர்கிறது.

பூமி சூரியனைச் சுற்றி வலம் வருவது போல் மாணவர்களும் ஆசிரியர்களும் நிழலைத்தேடி மரத்தைச் சுற்றி வலம் வந்தவாறு படிக்கிறார்கள். சீருடையும் இல்லை, கற்றல் உபகரணங்களும் போதியளவு இல்லாத நிலையில் தொண்டர் ஆசிரியர்களும் பல கலைப்புதுமுக மாணவர்களும் இணைந்து ஆசிரியர்களின் பற்றாக்குறையான வெற்றிடத்தை நிரப்பினார்கள். இதனால் மாணவர்களின் கல்வித்தரம் மேலும் உயருகிற சந்தர்ப்பம் கிடைக்கிறது.

(அவலங்கள் தொடரும்)

- டொமினிக் -

# நடிப்பைப் போன்று அரசியலிலும் 'ஜெ' செய்து காட்டவேண்டும்

-பாலா. சங்குபிள்ளை-



மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 93ஆவது பிறந்த நாள் வைபவம் அண்மையில் தமிழகம் முழுவதும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதிலும் எம்.ஜி.ஆரினால் ஸ்தாபிக்கப்பட்ட அ.தி.மு.கவின் தற்போதைய தலைவியும் முன்னாள் நடிகையுமான செல்வி ஜெயலலிதா இம்முறை எப்போதுமில்லாத வகையில் எம்.ஜி.ஆர் பிறந்த நாளை மிகவும் கோலாகலமாக, தி.மு.க வினரே வியப்படையும் வண்ணம் தொடர்ந்து ஒருவார காலத்துக்கு கொண்டாடி மகிழ்ந்தார். எம்.ஜி.ஆர் ரசிகர்கள், விசுவாசிகள், எம்.ஜி.ஆரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இம்முறை உற்சாகமாக இவ்விழாவை கொண்டாடியமைக்கான காரணம் ஜெயலலிதா நேரடியாக அவர்களுக்கு விடுத்த அழைப்பேயாகும்.

இவ்வளவு நாள் கொடாநாடு, ஹைதராபாத் என சென்னைக்கு வெளியே ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஜெயலலிதா இம்முறை ஏன் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார். அதுவும் சசிகலாவின் துணை இல்லாமல் தனியாகவே இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை செய்ததுடன் விழாவிலும் தனியாகவே கலந்து கொண்டார். வழமையாக ஜெயலலிதா தேர்தல் காலங்களில் மட்டுமே எம்.ஜி. ஆரை முன்னிலைப்படுத்தி பிரசாரங்களை மேற்கொள்வார். பின்னர் பதவிக்கு வந்தவுடன் எம்.ஜி.ஆர் பின் தள்ளப்பட்டு இவரே முன்னிலைப் படுத்தப்படுவார். மேலும் இவரின் தோழி சசிகலாவின் ஆலோசனைகளின் படியே இவர் செயல்படுவதுடன் தோழியின் உறவினர்களுக்கே எல்லா விடயங்களிலும் முன்னுரிமை வழங்கும் வகையில் நடந்து கொள்வார். இவை எல்லாம் எம்.ஜி.ஆரின் விசுவாசிகள், அவரின் பரம ரசிகர்கள் தொண்டர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. எனவே தேர்தல்கள் வரும் போதெல்லாம் இவர்கள் உற்சாகமில்லாமல் ஏனோ தானோ என்று வேலை செய்தார்கள். அ.தி.மு.க பல தேர்தல்களில் தோற்றமைக்கான முக்கியமான காரணமே தொண்டர்கள் உற்சாகமில்லாமல் செயல்பட்டமையே ஆகும். கட்சியின் அதிகாரமிக்க தலைவி ஜெயலலிதாவை பார்ப்பதைவிட சின்னம்மாவின் கடைக்கண்பார்வை பட்டாலே பதவி நிச்சயம் என்ற நிலை உருவாகிய போதும் ஜெயலலிதா வாளாவிருந்தார். இதனால் தி.மு.க. வுக்கு இதுவொரு எதிர்மறையான சந்தர்ப்பமாக அமையவே அவர்கள் மிக இலகுவாக தேர்தல்களில் வெற்றி பெற்று கொழிக்கத் தொடங்கினார்கள்.

இன்று தி.மு.க. குடும்ப ஆட்சியில் மிக செழிப்பாக வளர்ந்து வருகின்றது. சினிமா தயாரிப்பு உட்பட எல்லாவித தொழில்களிலும் கருணாநிதியின் வாரிசுகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். சினிமாவின் மூலம் வெற்றிகரமான கதாநாயகனாக வலம் வந்த விஜயகாந்தினால் கூட அவர்களின் அருகே செல்ல முடியவில்லை. இந்நிலையில் தான் இவ்வளவு நாளும் ராமன் ஆண்டாலென்ன ராவணன் ஆண்டாலென்ன என்ற நிலையிலிருந்த ஜெயலலிதா நீண்ட நாள் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்திருக்கிறார். பல பாடங்களை கற்றுத் தெளிந்த பின் தான் இவர் தெளிவானதொரு முடிவுக்கு வந்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் தாயார் சந்தியா சினிமாவில் கொடிக்கட்டி பறந்த நிலையில் சொந்தப்படம் தயாரிக்கப் போய் கையை சுட்டுக்கொண்டார். எனவே கடன் சுமையிலிருந்து மீள்வதற்காக 1964இல் ஜெயலலிதாவை களத்தில் இறக்கினார். 'வெண்ணிற ஆடை' படம் மூலமாக திரையுலகுக்கு அறிமுகமான ஜெயலலிதா சில மாதங்கள் படங்கள் எவையுமில்லாமல் சும்மாவே இருந்தார். 1964இல் 'வெண்ணிற ஆடை' வெளி வந்து 100 நாட்கள் ஓடின. ஆறேழு மாதங்கள் பட வாய்ப்புகள் இல்லாமல் சும்மாவே இருந்த ஜெயலலிதாவை பத்மினி பிக்சர்ஸ் பி.ஆர்.பந்துலு தன்னுடைய புதியப் படமான ஆயிரத்தில் ஒருவனுக்காக எம்.ஜி.ஆரிடம் அறிமுகப் படுத்தினார்.

எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடிக்கவிருந்த ஆயிரத்தில் ஒருவன் படத்துக்கு சரோஜாதேவியைத் தான் சிபாரிசு செய்திருந்தார். ஆனாலும் 'ஜெயலலிதா'வை எம்.ஜி.ஆருக்கு பிடித்துவிட்டமையினால் சரோஜா தேவியுடன் தொடர்ந்து இணைந்து பல வெற்றிப்படங்களில் தோன்றி நடித்துக் கொண்டிருந்த வேளையில்தான் புதிதாக இவரை தன்னுடன் இணைத்துக் கொள்ள முடிவு செய்தார்.

ஆயிரத்தில் ஒருவனில் எம்.ஜி.ஆருடன் அறிமுகமான ஜெயலலிதா தொடர்ந்து அவருடன் 26 படங்களில் ஜோடி சேர்ந்து நடித்தார். அவற்றில் பெரும்பாலானவை வெற்றிப்படங்களாகும்.

ஜெயலலிதாவின் திரையுலக வாழ்வில் அவர் தன்னை நடிப்பில் பட்டைத்தீட்டிக் கொள்ள சிவாஜியுடன் ஜோடியாக நடித்த படங்கள் பெரிதும் உதவின. 1966இல் இவர் சிவாஜிக்கு மகளாகவும் ரவிச்சந்திரனுக்கு ஜோடியாகவும் ஏவி.எம்மின் 'மோட்டார் சுந்தரம் பிள்ளையில் நடித்திருந்தாலும் கூட பின்பு 1968 இல் சிவாஜியுடன் இணைந்து நடித்தார். இவர் சிவாஜியுடன் இணைந்து நடித்த 'எங்கிருந்தோ வந்தாள்', 'சவாலே சமாளி', 'பட்டிக்காடா பட்டணமா', 'அவன்தான் மனிதன்', போன்ற படங்களின் மூலமாக தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார், அதே போல முக்தா சீனிவாசனின் 'சூரிய காந்தி' திரைப்படம் இவரை ஒரு தரமான நடிகையாக அடையாளம் காட்டியது. இவர் ஜெய்சங்கருடன் 'யார் நீ', 'பொம்மலாட்டம்',' நீ', 'ராஜா வீட்டுப் பிள்ளை', 'வந்தாளே மகராசி',போன்ற படங்களிலும் ரவிச்சந்திரனுடன் 'நான்', 'மூன்றெழுத்து', 'அன்று கண்ட முகம்','குமரிப்பெண்', 'பாக்தாத் பேரழகி' ஆகிய படங்களிலும் இணைந்து நடித்திருக்கிறார். கே.பாலசந்தரின் 'மேஜர் சந்திரகாந்'தில் சிறிய பாத்திரத்தில் தோன்றி நடித்திருந்தாலும் அதையும் சிறப்பாகவே செய்திருந்தார். 1973இல் வெளிவந்த 'பட்டிக்காட்டுப் பொன்னையா' படம்தான் ஜெயலலிதா எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்த கடைசிப்படம். ஆனாலும் எம்.ஜி.ஆரின் வாரிசாக அரசியலில் வலம் வருமளவுக்கு ஜெயலலிதாவுக்கு எப்படி இப்படியான தொரு சந்தர்ப்பம் கிடைத்தது. எம்.ஜி. ஆரின் கணிப்புகள் எப்போதுமே பிழையாவதில்லை. தனக்குப்பின் தான் உருவாக்கிய கட்சியை நடத்திசெல்லக் கூடிய திறமையும் புத்திசாலித்தனமும் ஜெயலலிதாவுக்கே இருப்பதை அவர் புரிந்து கொண்டார். எனவேதான் தன்னுடைய கட்சியில் மகளிர் பிரிவு தலைவி, கொள்கைப்பரப்பு செயலாளர் என பல்வேறு பதவிகளை கொடுத்து அரசியலில் அவரைப் பட்டைதீட்டினார்.


திரைப்படங்களில் தன்னுடைய பாத்திரங்களுக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக்கொண்டு திறமைகளை மிகவும் சிறப்பாக வெளிக்காட்டிய ஜெயலலிதா எம்.ஜி.ஆர் கொடுத்த பதவிகளை அலங்கரிக்கும் பொம்மையாக இல்லாமல் பொருத்தமான மாற்றங்களுடன் அந்த பதவிகளை பெருமைப்படுத்தினார்.

மக்களின் மனங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் 'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆரை மறக்காமல் அவரின் புகழுக்கு இழுக்கு ஏற்படாத வண்ணம் அடிமட்ட தொண்டர்களையும் திருப்திப் படுத்தும் வண்ணம் ஜெயலலிதா செயல்படுவாரேயானால் நிச்சயம் அவரால் மறுபடியும் விஸ்வரூபம் எடுக்க முடியும். உயிர்த் தோழிகளையெல்லாம் வாசல் வரை வைக்க வேண்டும். அரசியலுக்குள் உள்வாங்கக் கூடாது. சாதாரண மக்களை எந்தவித இடையூறுகளுமில்லாமல் அடிக்கடி சந்திக்க வேண்டும். கொடுத்து சிவந்த கரத்தினால் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் உருவாக்கப் பட்ட கட்சியை அற்ப சொற்ப லாப நோக்குடன் அணுகுவோரை வாசலுடன் அனுப்பி விட வேண்டும். திரைப்படங்களில் எம்.ஜி.ஆருடன் சேர்ந்து நல்லதுக்காக போராடியதைப் போல தன்னை நம்பியுள்ள நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய நல்ல திட்டங்களுடன் ஜெயலலிதா துள்ளிஎழுவாரேயானால் மக்கள் தங்களின் வாக்குகளை அள்ளித் தர தயாராகவே இருக்கிறார்கள்.

****

---

# இது தான் உங்கள் பலவீனம்!



ஒவ்வொரு மனிதனுக்கும் வேறு வேறு கோணங்கள் உண்டு. தங்கள் பார்வை, கொள்கை, ரசனை என்று அடிப்படை குணங்களில் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி. தங்களுடைய பலங்களிலும், பலவீனங்களிலும் மனிதர்கள் வேறுபடுகிறார்கள். உங்களுடைய பலம் என்ன? பலவீனம் என்ன? என்பதை புரிந்து கொண்டால் ஆற்றல் மிக்க விதத்தில் செயல்பட முடியும்.

நம்மிடம் உள்ள சிறப்பு என்ன? மேம்பட்ட திறன் என்ன? என்பதை தெரிந்திருக்க வேண்டியது அவசியம். நம்முடைய செயல்முறைதான் ஒன்றை எளிதாக்குகிறது அல்லது கடினமாக உணர வைக்கிறது. செயல்முறையைப் பொறுத்தே ஒன்றை முன் கூட்டியே செய்ய முடிகிறது. அல்லது தாமதமாக செய்யும் படி ஆகிவிடுகிறது.

ஒரு பணியில் அல்லது தொழிலில் செயலாற்றும் திறமை, உயர்நுணுக்க அறிவு மற்றும் ஆர்வத்தைப் பொறுத்தே உங்களுடைய வெற்றி அமையும்.

படிப்பில், வேலையில், சொந்த வாழ்க்கையில் உங்களுடைய மதிப்பீடு என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு சவாலான வேலை எது என்பதை தெரிந்து கொண்டு அதை முழுமையாக அறிந்து கொள்ளுங்கள்.

உங்களுடைய சிறப்புத் தன்மை அதாவது நீங்கள் கற்பனைவாதியா, அல்லது எதையும் நுணுகி ஆராயும் தன்மை உள்ளவரா, அல்லது எந்திரத் தனமானவரா என்பதையும், உங்களுடைய ஆளுமை தன்மையையும் அறிந்து வைத்திருங்கள்.

குறிப்பாக உங்களுடைய உடல் ஆரோக்கியத்தை மதிப்பீடு செய்வது அவசியம். உடல் நலம் நன்றாக இல்லாவிட்டால் மனம் பாதிக்கப்படும். உடலும், மனமும் ஆரோக்கியமாக இருந்தால் தான் ஒரு குறிப்பட்ட கால அளவுக்குள் வேலையை செய்து முடிக்க முடியும். உங்களிடம் உள்ள தனித் திறமைகளை முழுமையாக வெளிப் படுத்த ஆரோக்கியம் அவசியம். மனதை சமநிலையில் வைத்திருங்கள். மனதை இறுக்கமாகவோ, உளைச்சலாகவோ வைத்திருக்க வேண்டாம். வேலையின் தன்மைக் கேற்ப நேரத்தைப் பங்கீடு செய்து கொண்டால் அனாவசிய மனஇறுக்கத்தை, உளைச்சலை தவிர்க்க முடியும்.

ஒரு வேலையை நீங்கள் தள்ளிப் போடுவது அதன் பின் தொடர்ச்சியாக பல வேலைகளைக் கிடப்பில் போடும் படி செய்து விடும். அதனால் உங்கள் சுமைதான் மேலும் அதிகரிக்கும். செயல் தாமதத்தால் விரும்பத்தகாத விளைவுகள், இழப்புகள் உண்டாகும். அலுவலகம் மட்டுமில்லை, வீட்டிலும் வேலையைத் தள்ளிப் போடுகிற பழக்கம் வேண்டாம்.

பொறுமையின்மை, போதிய கவனமின்மை காரணமாக பின்னாளில் நாம் சுமைகளை சுமக்க வேண்டிய சூழல் ஏற்படும். உங்களுக்கு வெறுப்பூட்டும் பணியை முதலில் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். அந்த வேலையின் மீது ஒரு விருப்பத்தை தோற்றுவித்து, விரும்புகிற மனோபாவத்தைப் பெறுங்கள்.

ஒரு வேலையை செய்யத் தொடங்கும் போது, இந்த வேலையை நம்மால் செய்ய முடியுமா? என்ற சந்தேகம் கொள்ள வேண்டாம். உங்கள் மீதே உங்களுக்கு நம்பிக்கை இல்லாத நிலையில் தயக்கம் வந்து, அந்த வேலையை ஒதுக்கி விடுவீர்கள். குறிப்பட்ட நேரத்துக்குள் எப்படிச் செய்வது? நாம் செய்யும் வேலையை மற்றவர்கள் ஏற்பார்களா? என்றெல்லாம் கேள்விகள் எழும். மனச் சோர்வு எட்டிப் பார்க்கும்.

இது போன்ற வேலையை நேரம் எடுத்தாவது முழு மூச்சுடன் செய்து முடித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்த வேலையில் ஆர்வத்தை தூண்டி வேலையை முடிப்பது நல்லது. எத்தனை நாளானாலும் இந்த வேலையை நாம் தான் செய்ய வேண்டியிருக்கும். நமக்குப் பதிலாக வேறு யாரும் செய்ய மாட்டார்கள் என்பதை நீங்கள் மனதில் பதித்துக் கொண்டால் அந்த வேலையைக் கண்டு தயங்க மாட்டீர்கள். எப்போதும் மகிழ்ச்சியாக கலகலப்பாக இருப்பவர்களுடன் பழக்கம் வைத்துக் கொண்டால் அவர்களைப் போலவே உங்களுக்கும் உற்சாகமும், நம்பிக்கையும் அதிகரிக்கும்.

வேலையில் தவறு ஏற்படுமோ அல்லது இந்த வேலையில் தோல்வி ஏற்படுமோ என்ற அச்சம் ஒருபோதும் வேண்டாம். 'வெற்றி நமதே' என்ற எண்ணத்துடன் எந்த வேலையாக இருந்தாலும் உற்சாகத்துடன் பணி புரிந்தால் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும்.

# மானாட... மயிலாட... சீசன்-4




கலைஞர் தொலைக்காட்சியின் மணிமகுடமாக விளங்கும் நடன நிகழ்ச்சி "மானாட.... மயிலாட...." சின்னத்திரை பிரபலங்கள் கலந்து கொள்ளும் இந்த நடனப் போட்டி, மூன்று பாகங் களைக் கடந்து நான்காவது பாகத்தை வெற்றி கரமாக நடத்தி, இறுதிகட்டத்தை நெருங்கி உள்ளது.

இறுதிப் போட்டியில் 7 ஜோடிகள் பங்கு கொள்ள இருந்த நிலையில், சவுந்தர்யா விபத்தில் சிக்கி, தனது வெற்றி வாய்ப்பை இழந்தார். மற்றொரு ஜோடியான குமரன்-அப்சரா போட்டியில் தோல்வி அடையவே, கோகுல்-நீபா, கிரண்-ரூபா, லோகேஷ்-ஸ்வேதா, நிவாஸ் - கிருத்திகா மற்றும் ரஹ்மான்-நிக்கிஷா ஜோடிகள் இறுதிச்சுற்றுக்கு தயாராகி விட்டார்கள்.

இவர்களில் இருந்து மூன்று ஜோடி களைத் தேர்ந்தெடுத்து அடுத்த மாதம் 5 ஆம் திகதி வெள்ளியன்று மாலை 6 மணிக்கு சென்னை நேரு உள்விளை யாட்டரங்கில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம் பிடிக்கின்றன. எஸ்.எம். எஸ். மூலம் நேயர்கள் தேர்ந் தெடுக்கும் மூன்று ஜோடி களுக்கு முறையே 10 லட்சம், 5 லட்சம் மற்றும் 3 லட்சம் வழங்கப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சி கலைஞர் தொலைக் காட்சியில் 7ஆம் திகதி ஞாயிறு இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பாகும்.

# வெற்றி ரி.வி. மீதுள்ள எதிர்பார்ப்பு

அண்மையில் எங்களுக்கு புதிய விருந்ததாக அமைந்திருப்பது வெற்றி டி.வி. நிழச்சிகள் தான். தென்னிந்திய கலைஞர்களின் படைப்புக்களையே பார்த்து வரும் எங்களுக்கு சற்று வித்தியாசமாக நிகழ்ச்சிகளையும் சரி TBO வின் அறிவிப்பாளர்களின் திறமைகளையும் காண்பிக்கிறது வெற்றி டி.வி. இருப்பினும் அவற்றிலும் தென்னிந்திய திரைப்படங் களும், பாடல் களும் தானே இடம் பிடிக்கிறது. மாறாக சிங்கபூர், மலேஷியா வாழ் மக்களின் நாடகங்கள், ஒளி ஒலி நிகழ்ச்சிகள் அங்கு நடக்கும் விடயங்கள் என்பவற்றையும் பகிர்ந்து கொள்ளலாமே... இந் நிகழ்ச்சிகளுக்கு இடையில் ஏதேனும் நேரத்தில் நம் நாட்டு கலைஞர்களின் படைப்புக்களையும் வழங்கினால் நன்றாக இருக்கும். வெற்றி வானொலி போலவே பல இரசிகர்களின் மணம் கவரும் வண்ணம் வெற்றி டி.வியும் நிகழ்ச்சிகளை தரும் என எதிர்பார்க்கிறோம்.

**நிரோஷன்,**
**வெள்ளவத்தை.**






வானொலி, தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள் தொடர்பான உங்கள் விமர்சனங்களை இப்பகுதிக்கு எழுதி அனுப்பிவையுங்கள்.

ஒளிர்கானம்,
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி
மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# கருண மஞ்சரி

ராஜ் டி.வியில் திங்கள் இரவு 7.30 மணிக்கு தொடங்கயிருக்கும் புதிய தொடர் 'கருணமஞ்சரி'

தொழில்அதிபர் கருணாகரனுக்கு 4 மகள்கள். கருணாகரன் வேலை பார்க்கும் இடத்தில் நடந்த ஒரு சம்பவம் அவரது பெண்களின் வாழ்க்கையை பாதிக்கிறது. குறிப்பாக இதில் கருணாகரனின் இரண்டாவது மகள் மஞ்சரி தான்அதிகம் பாதிக்கப்படுகிறாள்.

மஞ்சரியின் அக்கா சுதா திருமணமாகி கணவருடன் இருக்கிறாள். ஐ.டி.யில் வேலை பார்க்கும் கணவர், 7 வயதில் மகன் என சின்னக் குடும்பமாய் மகிழ்ச்சியாய் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த இவர்கள் வாழ்க்கையில் குடும்ப நண்பர் வடிவில் பிரச்சினை கிளம்புகிறது.

இந்தக் குடும்பத்தின் மூன்றாவது பெண் பணக்கார இளைஞனை விரும்புகிறாள்.




அதுவே பிரச்சினையாகிறது. கடைக்குட்டி ஷப்னம் காதுகேட்காத வாய் பேசமுடியாத பெண். இவளைத் தேடியும் ஒரு பிரச்சினை வருகிறது.

இதற்கிடையே சகோதரிகளில் இண்டாமவரான தொடரின் நாயகி மஞ்சரியை அவள் அத்தைமகன் மனோகர் விரும்புகிறான். ஆனால் மஞ்சரிக்கோ அவன் மீது எந்தவித ஈர்ப்பும் இல்லாததால் அவன் காதலை புறக்கணிக்கிறாள்.

அதேநேரம் அவள் அப்பாவின் முதலாளி மகன் ராஜாவுக்கும் மஞ்சரி மேல் காதல். மஞ்சரி இந்த இருவரில் ஒருவரை மணக்கிறாளா? அல்லது மஞ்சரிக்கென்றே ஒரு மணாளன் வரப் போகிறானா?

தொடரில் சகோதரிகள் நால்வரும் அவரவர் பிரச்சினைகளில் இருந்து எப்படி மீள்கிறார்கள் என்பது சுவாரசிய முடிச்சு.

மஞ்சரியாக புஷ்பலதாவும் அவரது அக்காவாக நடிகை சுதா சந்திரனும் வருகிறார். தயாரிப்பு, யக்கம்: பிரபுநேபால்.

# நாளைய இயக்குனர்கள்

சனிக்கிழமை தோறும் இரவு 7.30 மணிக்கு கலைஞர் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும் 'நாளைய இயக்குனர்' நிகழ்ச்சி திரையுலக கனவுகளோடு உலாவரும் நாளைய இயக்குனர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். தேர்ந்தெடுக்கப்பட்ட 20 இளம் படைப்பாளிகளின் குறும்படங்களிலிருந்து சிறந்த ஒன்றைத் தெரிந்தெடுத்து முழுநேர திரைப்படம் இயக்க வாய்ப்பு வழங்குவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கம். எழுத்தாளரும் ஓவியருமான மதன், இயக்குனர் பிரதாப் போத்தன் ஆகியோர் தொகுத்து வழங்கும் இந் நிகழ்ச்சியினை தேவி மீடியா சார்பாக ஜெயவேல் தயாரித்து வழங்குகிறார்.

இந்த வாரம் முதல் சிறப்பு விருந்தினர்கள் ஒவ்வொரு படைப்பையும் பார்வையிட்டு இறுதிச் சுற்றுக்குத் தயாராகி வருகின்றனர். நிகழ்ச்சியின் இந்த வார சிறப்பு விருந்தினராக நடிகை ரம்பா, இயக்குனர் சக்தி சிதம்பரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.



# மனிதம் மகத்தானது!



சக்தி டி.வியில் சனிக்கிழமை தோறும் இரவு 9.30 க்கு மனிதம் என்றொரு நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது. மக்களுக்குள்ள பிரச்சினைகள் மக்களால் கூறப்பட்டு அதற்கு தகுந்த ஆலோசனைகளும் அவர்களுடைய கருத்துக்களும் வழங்கப்படுகிறது. இந் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலம் என்றாலும் பெரிய ளவில் மக்கள் இதனை விரும்புகிறார்கள். நல்ல தமிழில் தொகுத்து வழங்குகிறார் அறிவிப்பாளர் கஜமுகன் இந் நிகழ்ச்சி பல ஆண்டுகள் தொடர எமது வாழ்த்துக்கள்.

**- ரூபன்,**
**மட்டக்குளி**




மதன்,
நீர்கொழும்பு.
**கேள்வி:-** பெண்களை ஒடுங்கச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம் எது பித்தரே?
**பதில்:-** அவளது கற்பு பற்றிய விமர்சனம் தான்.


வர்மா,
சங்கானை.
**கேள்வி:-** இரு மாடுகள் சேர்ந்து இழுக்கும் வண்டிதான் இல்லறம் என்று சொல்வது சரியா?
**பதில்:-** ஒரு கருத்தில் சரிதான்; இன்னொரு கருத்தில் ஆண்கள் மாட்டிக் கொள்ளும் வண்டி என்று சொன்னாலும் பிழையில்லை.

பிலோமினா,
மன்னார்.
**கேள்வி:-** இந்தக் காலத்து இளம்பெண்கள் பெருந்தொகையானோர் முதுகுவலியால் அவதிப்படக் காரணம் என்ன?
**பதில்:-** குதி உயர்ந்த செருப்புகளை அணிவதுதான் காரணம்.

ஜதாசன்,
பெரிய கல்லாறு.
**கேள்வி:-** சாமியார்களில் பலர் போகியராக இருக்கக் காரணம் என்ன?
**பதில்:-** அவர்களும் சாதாரண மனிதர்கள் தானே! இயல்பூக்கங்கள் அவர்களுக்கும் உண்டு! அதனால் தான் அவர்கள் அடிக்கடி 'வேலி' பாய்கிறார்கள்... இயல்பூக்கங்களைத் தடுத்தால் ஏற்படும் விளைவைத்தான் அவர்கள் நிருபித்துக் காட்டுகிறார்கள்.

சேகர்,
இணுவில்.
**கேள்வி:-** நகைச் சுவை நாடக மன்னராக யாரைக் குறிப்பிடலாம்?
**பதில்:-** *எஸ்.வீ. சேகரை.*

நவரட்ணம்,
கொழும்பு.
**கேள்வி:-** கல்வித் தகைமையும் பண வசதியும் படைத்த என் ஒரே பிள்ளை என்னை முதியோர் மடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறானாமே....?
**பதில்:-** உங்களுடைய பேரனும் ஒரு நாள் உங்கள் மகனை முதியோர் மடத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான். பரவாயில்லை...இருவருக்கும் ஒரே அந்தஸ்து தான். ஆனால், காலம் தான் கொஞ்சம் வித்தியாசம்.




டேவிட்,
பதுளை.
**கேள்வி:-** எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசுக்கு 2:3 பெரும் பான்மை கிடைக்குமா?
**பதில்:-** இந்த தேர்தல் போக்கில் மூன்றில் இரண்டல்ல; நான்கில் மூன்று கிடைத்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை.

ஜெயா,
பொத்துவில்
**கேள்வி:-** தற்கொலை செய்வது கூடுமா பித்தரே?
**பதில்:-** கூடவே கூடாது. அதனால்தான் எல்லா மதங்களும் இதனைத் தடை செய்துள்ளன. பணத்துக்காகவும் பதவிக்காகவும் கட்சி மாறும் அரசியல் வாதிகள் கூட தற்கொலை செய்து கொள்வதில்லையே! நாட்டுக்கு ஆயுதம் கொள்வனவு செய்வோர், லஞ்சம் வாங்கியது வெளிப்பட்டால் தற்கொலை செய்து கொள்வதில்லையே. - மதவெறியை, சாதிவெறியைத் தூண்டி நாட்டில் இரத்த ஆறு ஓடவிட்டவர்கள் தற்கொலை செய்து கொள்வதில்லையே. தற்கொலை கூடாது என்பதால் தான் இவர்கள் 'ஹாய்'யாக வாழ்ந்து வருகிறார்கள் போலும்!.

திருச்செல்வி,
அம்பாறை.
**கேள்வி:-** பித்தரே, மன்னித்துக் கொள்ளுங்கள். எனது வீட்டில் ஈக்களின் தொல்லை தாங்க முடியாமல் இருக்கின்றது. இதற்கு ஏதாவது மருந்து சொல்வீர்களா?
**பதில்:-** சமையல் அறையிலும் சாப்பிடும் அறையிலும் ஒரு கொத்து புதினா இலைகளைப் போட்டு வைத்துப் பாருங்கள். ஈக்கள் எட்டியே பார்க்காமல் ஓடிப் போய்விடும்.

பாக்கியசோதி,
வண்ணார்பண்ணை.
**கேள்வி:-** என் மருமகள் சாம்பாரில் எக்கச்சக்கமான பருப்பைப் போட்டு விடுகிறாளே, இப்படி போனால் குடும்பம் உருப்படுமா? அவளை எப்படி வழிக்குக் கொண்டு வருவது?
**பதில்:-** புதிதாக வரும் மருமகளுக்கு உங்கள் வீட்டுச் சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அதற்காக அவளைக் கோபித்தும் பயனில்லை. உங்களுடைய 'சிக்கன டெக்னிக்' அவளுக்குத் தெரியாததால் அவளுக்கு எதிராக எரிச்சலூட்டும் அஸ்திரங்களைப் பிரயோகிக்காதீர்கள். ஏட்டிக்குப் போட்டியாக மருமகள் இருந்தால், 'பருப்பு' என்று எழுதி அதைச் சாம்பாரில் போட்டு உங்களுக்குத் தந்து விடவும் கூடும்.

ஆதி,
பண்டத்தரிப்பு.
**கேள்வி:-** பெண்கள் இப்போது ஆண்களைப் போல் டெனிம் அணியத் தொடங்கி விட்டார்களே?
**பதில்:-** ஆமாம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களும் அவர்களை விட்டுப் போய்விட்டன. இப்போது இப்போது அவர்களுக்கான புதிய நாற்குணங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை வந்துவிட்டது.

சூரியா,
வுவனியா.
**கேள்வி:-** வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை என்பன போதிக்கும் கடவுள் கொள்கை எது பித்தரே?
**பதில்:-** ஏகதெய்வக் கொள்கை. அதாவது ஓர் இறைக் கொள்கை.

பாரதி,
யாழ்.
**கேள்வி:-** வான்மீகி ராமாயணத்திலும் கம்பராமாயானத்திலும் இராமன் வெவ்வேறு விதமாகச் சித்திரிக்கப்படுகின்றார் என்று கேள்வியுற்றேன். இது உண்மையா?
**பதில்:-** ஆமாம். வான்மீகி ராமாயணத்தில் இராமன் தன்னிகரற்ற தலைவனாக வும், கம்பராமாயணத்தில் கடவுளின் அவதாரமாகவும் சித்திரிக்கப்படுகின்றான்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 404

சொற்சிலம்பம் 404 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 28 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 401 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.404

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| 9 | | 10 | ■ | 11 | | 12 | |
| | ■ | 13 | 14 | | ■ | 15 | |
| 16 | 17 | | | ■ | 18 | | ■ |
| ■ | 19 | | ■ | 20 | | ■ | 21 |
| 22 | | ■ | 23 | | | 24 | |
| 25 | | | | | ■ | 26 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.402

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஐ | ம் | 2 ப | 3 து | ■ | 4 த | ர | 5 கு |
| ப் | ■ | 6 க | லா | 7 சா | லை | ■ | டு |
| 8 ப | 9 தி | ல் | ■ | 10 க | வ | ள | ம் |
| 11 சி | றை | ■ | 12 ந | ர | ன் | ■ | ப |
| ■ | 13 சே | 14 வ | க | ம் | ■ | 15 உ | ம் |
| 16 து | ரி | த | ம் | ■ | 17 த | ரு | ■ |
| ம் | ■ | ன | ■ | 18 ப | டு | க் | 19 கை |
| 20 பு | ல் | ம் | ப | 22 [illegible] | ■ | 21 கு | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 404

**இடமிருந்து வலம்**

1. உடற் பயிற்சி.
6. ஒரேயளவான.
7. அடிமை/ ஊழியக்காரன்/ அன்பன்.
9. வம்பர்கள் செய்வது.
11. பழுத்தல்.
13. (கடவுள்) தரும் அருள்.
15. மேரு.
16. விளையாடும் இடம்.
18. நவீன/ புதிய.
19. காந்திஜியின் கடைசி வார்த்தை.
20. மிகப் பெரிய.
22. உள்ள(ன).
23. சின்னாபின்னமாகி சிதறுதல்.
25. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்.
26. விடிந்த வேளை.

**மேலிருந்து கீழ்**

1. வடபகுதித் தமிழருக்கான விசேட சட்டம்.
2. வயல்.
3. தந்தை.
4. பிச்சை/ யாசித்துப் பெறுவது
5. காய்ச்சல்.
8. மாத்திரை.
10. பூமி.
12. தங்களது.
14. மேல்நாட்டுக் குடிவகை ஒன்று.
17. அளவுக்கு அதிகம்/ மிகுதி/ மிதமிஞ்சிய நிலை.
18. முறைப்பாடு.
20. ஒரு நட்சத்திரம்.
21. காடும் காடு சார்ந்த இடமும்.
22. துணை.
23. பெருக்கல் குறி.
24. பொருந்தாத/பொருத்தமற்ற.

## சொற்சிலம்பம் போட்டி இல. 402

### பரிசு பெறுவோர்

1. சி. உலகேஸ்வரி,
இல. 68/17, ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13.
2. தாமோதரம் வடிவேல்,
இல. 05, ஏறாவூர்,
செங்கலடி.
3. கு. வளர்மதி,
64/22, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

### சொற்சிலம்பம் போட்டி இல. 402

### பாராட்டுப் பெறுவோர்

01. யோ. விக்டர் அரவிந்தன், சங்கானை.
02. கௌ.மு. சார்ல்ஸ், வவுனியா.
03. சி. சித்திராங்கி, திருநெல்வேலி.
04. திருமதி. சந்திரா ரவீந்திரன், ஹட்டன்.
05. ம. தர்ணிக்காந், கல்முனை - 02.
06. ஜி. சத்தியபாரதி, வத்துகாமம்.
07. சி. உமாபதிசிவம், வத்தளை.
08. அருண் பிரசாத் ரெங்கராஜ், கலகா.
09. ஜெயசோதி. அபிஜித்தன், கொழும்பு - 06.
10. செ. றொபட், கொழும்பு - 13.
11. ஜெ. தர்சி, தெஹிவளை.
12. எஸ். வி. நாராயணன், கொழும்பு - 07
13. ஏ. எஸ். சிற்றம்பலம், திருகோணமலை.
14. எஸ். ஷிபானா, சம்மாந்துறை.
15. செ. ஞானராசா, திருகோணமலை.
16. எஸ். செல்வநாதன், கொழும்பு - 07.
17. எம். பாலகிருஷ்ணன், வெள்ளவத்தை.

# வருமான வரித்துறை அதிகாரிகளின் பிடிக்குள் நடிகர்கள்!

இந்தியாவில் இன்று, முதல் இல்லாத முதன்மையான பணம் கொட்டக்கூடிய ஒரு தொழிலாக 'நடிப்பு' விளங்கி வருகின்றது. அதாவது மக்கள் ஆதரவும் அதிஷ்டமும் மட்டும் சரியாக அமைந்து விட்டால் கோடிகளில் மிதக்கலாம். பன்னீரில் குளித்து சுகபோகத்தை அடையலாம். திரைப்படங்களில் அநீதிகளுக்கு எதிராக, பொங்கி எழுந்து ஏழைப் பங்காளனாக இருக்கும் ஒரு நடிகன் ஏழடுக்கு மாளிகைக்கு சொந்தக்காரனாக மாறலாம்.

அண்மையில் தென்னகத் திரையுலகில் நடிப்பின் மூலமாக கோடிகளை சம்பாதித்துக்கொண்டிருக்கும் நடிகர் சூர்யா, நகைச்சுவை நடிகர் வடிவேலு, முன்னணி இயக்குநர்களான ஏ.ஆர்.முருகதாஸ், கே.எஸ்.ரவிக்குமார்


சூர்யா

ஆகியோரின் வீடுகளுக்குத் திடீர் விஜயம் செய்த வருமானவரித்துறை அதிகாரிகள் கணக்கில் வராத சொத்துக்கள் சம்பந்தமான பல ஆவணங்களைக் கைப்பற்றியதாக பரபரப்புத் தகவல்கள் கிடைத்து வருகின்றன. இதனால், சம்பந்தப்பட்ட கலைஞர்கள் கவலை அடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்றைய நடிகர்கள், இயக்குநர்கள், நடிகைகளின் வீடுகளிலும் வருமான வரித்துறையினர் இவ்வாறான திடீர் அதிரடிச் சோதனைகளை நடத்தியதுண்டு. ஆனால், அவர்கள் கணக்குகளில் ஓரளவு கவனமாகவே இருந்தார்கள். சொத்துச் சேர்த்தாலும் தங்களை ஏணியாக உயர்த்திய ரசிகர்களை அவர்கள் மறப்பதில்லை. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்யத் தவறுவதில்லை. ஆனால், இன்றைய நிலைமை பொதுவாக அப்படியானதல்ல.

அன்று நகைச்சுவை நடிகர்களில் நாகேஷ், சோ, கே.ஏ.தங்கவேலு, தேங்காய் சீனிவாசன், எம்.ஆர்.ராதா, ஏ.கருணாநிதி, சந்திரபாபு உட்பட பலர் கொடிகட்டிப் பறந்தார்கள். இவர்கள் ரசிகர்களைச் சிரிக்கவைத்து சம்பாதித்தார்கள். ஆனால், சம்பாத்தியத்தில் முக்கால்வாசியை தங்களின் முன்னேற்றத்தின் பங்காளிகளாக இருந்த ரசிகர்களுக்கு மன மகிழ்ச்சியுடன் கொடுக்கவும் தவறவில்லை. நாகேஷ், தன்னுடைய சம்பாத்தியத்தை பல்வேறு துறைகளில் முதலீடு செய்தாலும் பிறருக்கு உதவுவதை நிறுத்தவில்லை. மேலும், சரியான முறையில் வருமானவரியைச் செலுத்தவும் தவறவில்லை.

அதேபோல, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி போன்றவர்களும் கூட வரி ஏய்ப்பு செய்யாமல் அரசாங்கத்துக்கான வரியை சரியான முறையில் செலுத்தினார்கள்.

'நேருக்குநேர்' படத்தின் மூலமாக அறிமுகமாகி, 'காக்க காக்க', 'கஜனி', 'அயன்', 'ஆதவன்' என அடுத்தடுத்து மெகா ஹிட்களைக் கொடுத்த நடிகர் சிவகுமாரின் மூத்தமகனான சூர்யாவின் வீட்டில் வருமானவரித் துறையினர் சோதனை நடத்தியபோது காட்டப்படாத சொத்துக்கள் இருந்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. தங்களின் எதிர்

-பா. ச.-

கால நலனுக்காக சொத்துச் சேர்ப்பதில் பிழை ஒன்றுமில்லை. ஆனால், சரியாகக் கணக்குக் காட்டுவதிலும் வரியை உரிய முறையில் செலுத்துவதிலும் என்ன கேடு நடந்துவிடப் போகிறது? திரைப்படங்களில் வரி ஏய்ப்பு செய்பவர்களை வதம் செய்யும் காட்சிகளில் வீராவேசமாக வசனம் பேசி ரசிகர்களின் கைதட்டுதலைப் பெற்றுக் கொள்ளும் நடிகர்களின் கைகள் சுத்தமாக இருக்கவேண்டுமல்லவா? ஊருக்கு மட்டும்தான் உபதேசமா? இதேபோல, இன்று நகைச்சுவை நடிப்பில் தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு கோடிகளில் புரளும் வடிவேலுவும் இவ்வாறான சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளார்.

நகைச்சுவை நடிப்பில் தென்னகத் திரையுலகில் தனிக்காட்டு ராஜாவாகத் திகழும் வடிவேலுவை மகாராஜாவாக்கி மகுடம் சூட்டி மகிழ்ந்த மக்களுக்கு இவர் எந்தவகையில் நன்றியுள்ளவராக இருந்திருக்கிறார்? சொத்துகளை உண்மையாக வெளிப்படுத்தி, அதற்கான வரியைச் செலுத்துவதில் அப்படி என்ன கேடு அவருக்கு வந்துவிடப்போகின்றது? மக்களை திரையில் சிரிக்கவைக்கும்


வடிவேலு

அவர், சரியானபடி வரியைச் செலுத்தி அரசையும் குளிர வைக்கலாமே?

அந்தக் காலத்தில் திரைப்பட இயக்குநர்கள் பெரியளவில் பேசப்பட்டாலும் கிடைக்கும் வேதனம் என்னவோ சொற்பமேயாகும். அதிலும் வெற்றிகரமான இயக்குநராக விளங்குவதற்கு பல்வேறு சோதனைகளைக் கடக்க வேண்டியதாக இருக்கும். ப.நீலகண்டன் என்பவர் அதிகமாக எம்.ஜி.ஆர். படங்களையே இயக்கியவர். இவர் இறக்கும்போது இவருக்கு ஒரு வீடு மட்டுமே சொந்தமாக இருந்தது. அதேபோல, பீம்சிங், கிருஷ்ணன் பஞ்சு, ஏ.சி.திரிலோகசந்தர், பீ.மாதவன், ஸ்ரீதர், கே.பாலசந்தர் உட்பட பலர் அந்தந்தக் காலங்களில் பிரபலமான இயக்குநர்களாக இருந்தபோதும் அவர்கள் முறையாக, சரியாக அரசாங்கத்துக்கு வரி கட்டுபவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.


கே.எஸ்.ரவிக்குமார்

இன்றைய காலகட்டத்தில் சில நடிகர்கள் மற்றும் இயக்குநர்கள் ஆளும் கட்சியின் அனுதாபிகளாக இருப்பதனால் இவர்கள் முறையாக சொத்துகளைக் கணக்குக் காட்டாமலும், வரிகளைக் கட்டாமலும் தப்பி வருகிறார்கள். கே.எஸ்.ரவிக்குமார், ஏ.ஆர்.முருகதாஸ் போன்ற இன்றைய முன்னணி இயக்குநர்கள் தங்களின் திரைப்படங்களில் புரட்சிகரமான கருத்துகளைச் சொன்னாலும் கூட யதார்த்த வாழ்க்கையில் அவர்கள் உண்மையாக நடந்துகொள்ளவில்லை என்பதைத்தான் இந்தத் திடீர் வருமானவரி சோதனைகளின் முடிவுகள் சொல்லுகின்றன. அதாவது, தங்களின் படைப்புகளில் சமூக துஷ்பிரயோகம், அநீதி மற்றும் லஞ்ச லாவயண்களை எடுத்துக்காட்டும் இவர்களால் அதற்கு எடுத்துக்காட்டாக வாழ்க்கையில் யதார்த்தமாக மற்றவர்களுக்கு உதாரணமாக ஏன் திகழ முடியவில்லை.

திரைப்படம் என்பது ஒரு மாயத் தோற்றம். அந்த மாயத் தோற்றத்தினூடாக மக்களுக்கு நல்லதைச் சொல்லி, அதை யதார்த்த வாழ்க்கையிலும் பிரதிபலித்த எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெய்சங்கர் போன்ற பல நல்ல கலைஞர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. முதல் படமே நூறு நாட்கள் ஓடிவிட்டால் உடனே கோடி சம்பளம் கேட்பதுடன் புதிதாக அரசியல் கட்சி ஒன்றையும் உருவாக்கி, எதிர்கால முதலமைச்சர் தானே எனத் தம்பட்டம் அடிக்கிறார்கள். சொத்துக்கள், சுகபோகம் என வாழ நினைக்கும் இவர்கள் தங்களின் வளர்ச்சியின் பங்காளர்களாக இருந்த ரசிகர்களை மறந்துவிடுகிறார்கள். வருமானவரி சோதனை என்பது நடிகர்களைப் பொறுத்தவரை இன்று ஒரு கௌரவப் பிரச்சினையாக மக்கள் மத்தியில் அவர்களின் செல்வாக்கைக் குறைத்துவிடக் கூடியதொரு காரணியாகவே இருக்கிறது என்பதுதான் உண்மை ஆகும்.

---

# வயது மீறினால்... வாழ்க்கை மாறும்!



ஒரு குழந்தை, 'குமரி'யாக, 'குமரனா'க உருமாறும் சந்தோஷத்தை அனுபவிக்கும் பெற்றோர்கள், கூடவே, 'விரைவாக கல்யாணத்தை முடிச்சு வைக்க வேண்டும்' என்றும் பரிதவிப்பார்கள்.

கல்யாணத்துக்கேற்ற சரியான வயது எது..? இன்றைய வாழ்க்கை சூழலில் 28-35 வயதில்தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடக்கிறது. இது 'சரி', 'இல்லை' என்ற இரு வேறு கருத்துகள் உலவுகின்றன.

ஆனால், இதைப் பற்றி மருத்துவம் என்ன சொல்கிறது?

''திருமணம் என்பது உடல் மற்றும் மனம் சார்ந்த விஷயம். 13 வயதிலிருந்து 19 வயது வரை உடல் வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கும். பெண்களுக்கு அப்போதுதான் கருப்பை, மார்பகம், மற்றும் ஹோர்மோன் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சியை அடையும். 21 வயதில் மனமும், உடலும் முழுதுமாக வளர்ந்திருக்கும் என்பதால்தான் 21 வயதில் திருமணம் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. 18, 19 வயதில் திருமணம் செய்து வைக்கும் நடைமுறையும் இருக்கிறது. உடல் ரீதியில் பார்த்தால்... அதில் தவறில்லை.

என்றாலும் சிலருக்கு அந்த வயதில் கர்ப்பத்தை தாங்கக் கூடிய வலு இருக்காது. அதனால் குறை பிரசவமோ அல்லது கருசிதைவு பிரச்சினைகளோ வரலாம்.

21 வயதில் எலும்புகள் பூரண வளர்ச்சி அடைந்துவிடும். எனவே, 21 முதல் 25 வயது, பெண்களுக்கு திருமணத்துக்கு ஏற்ற வயது. கூடவே, இந்த வயதில் அவர்களுக்கு இடுப்பெலும்புகள் எல்லாம் இளகிய நிலையில் இருப்பதால், பிரசவமும் சுலபமாக இருக்கும். எனவே, 25 வயதுக்குள் படிப்பு, வேலை என எல்லாம் சரியாகி விட்டால் தாமதிக்காமல் 'டும் டும்' கொட்டி விடலாம். அப்படி 25 வயதுக்குள் குழந்தையும் பிறந்துவிட்டால், அந்தக் குழந்தை வளர்ந்து, சம்பாதிக்கும் காலத்தில் நீங்களும் உற்சாகமாக, ஆரோக்கியமாக, நிதி வளத்துடன் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருப்பீர்கள்.

அதேசமயம் திருமணத்தின்போது பெண்களுக்கு வயது 27, 30, 33 என்று அதிகமாகும்போது, கருத்தரிப்பதற்கான வாய்ப்புகள் குறையலாம். வயது ஏறிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் குழந்தைகளின் வளர்ச்சிக்காக உழைப்பதில் உடல் ஒத்துழைக்காமல் போகலாம். 35 வயதுடைய தாயிடமிருந்து குழந்தைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் குறையும். இதனால் குழந்தைக்கு பின்னால் பிரச்சினைகள் ஏற்படலாம். அதேபோல 30-35 வயதுக்கு மேல் என்றால், பெண்களுக்கு மெனோபாஸுக்கான அறிகுறிகள் உடல்வலி, மனவலியை தர ஆரம்பக்கும். இதனால், குழந்தைகளை கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்ளும் சிரத்தையும் குறையலாம்.

ஆணோ பெண்ணோ... கூடுமான வரை உரிய வயதில் திருமணம் செய்து கொள்வதுதான் இயற்கையாகவே சரியானதாக இருக்கும்!''

# பெரியாரும் அவரது குடும்பமும்

பெரியாரது வீடு கிளிநொச்சிப் பகுதியிலேயே ஒரு பெரிய வளவுடனான வீடு. பெரியார் காணி, வயல் என ஏகப்பட்ட நிலப்பரப்பை உடையவர். தோட்டம் துரவு என அங்கே ஓடித்திரிந்த மனுசன். ஒரு இடப்பெயர்வுடன் எல்லாத்தையும் இழந்து இப்ப முகாம் ஒன்றில் தறப்பாள் கொட்டிலே தஞ்சம் எனக் கிடக்கிறார். அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தது அங்கேயே மண்ணுக்கு இரையாகிவிட்டது. மற்றது ஒரு பெடியனும் ஒரு பெட்டையும்.

அன்றைய பொழுது, பெரியார் விடிந்தும் விடியாததுமாக எழுந்தார். இரவு முழுக்க அவர் ஊரில் உள்ள தனது வீடு வளவு பற்றியே நினைத்துக்கொண்டிருந்தார். 'எப்ப நாங்கள் ஊருக்குப் போறது' என்ற நினைப்பே அவரை



வெகுவாக வாட்டி விட்டது.

''கமலா குடிக்க கொஞ்சம் தண்ணி கொண்டுவா. ஒருக்கா இண்டைக்கு எண்டாலும் குளிக்கவேணுமப்பா. குளிச்சும் நாலுநாள் ஆச்சு'' என்றார்.

''இப்பதான் இவள் கீதா குழாய்க் கிணத்தடிக்குப் போனவள், தண்ணி ஒரு கொஞ்சமும் இல்லை'' என்றாள் கமலா.

''என்ன கமலா பழக்கத்தை மாத்த முடியாதுதானே'' என பெரியார் கூற,

''இனி எல்லாப் பழக்கத்தையும் மாத்தித்தானே ஆக வேணும்'' என்று சொன்னாள் கமலா.

''இண்டைக்குக் குளிக்கிறதுக்கு தண்ணி வராதாம் அம்மா. ஏதோ பழுதாம்'' என தண்ணியுடன் வந்த கீதா வெறுப்புடன் சொன்னாள். இதைக் கேட்டதும் ''எங்களுடைய ஊருக்குப் போகச்சொன்னாலும் நாங்கள் அங்கு வடிவாக குளிச்சு முழுகி எண்டாலும் இருப்பம். இஞ்சை வந்து எல்லாத்தாலையும் எங்களைப் போட்டு இவங்கள் படுத்துறபாடு கொஞ்சநஞ்சமல்ல. என்ன செய்யிறது எல்லாம் எங்கட தலைவிதி'' என்று நச்சரிச்சுக் கொண்டார் பெரியவர்.

**-நிலாமதி-**

ரவி அப்பதான் படுக்கையை விட்டு எழும்பியவன், ''அம்மா இரவு முழுக்க ஒரே வயிற்றுவலி ஏதாவது கைமருந்தேதும் செய்து தாங்கோ'' என்று கூற தாயும் தனக்குத் தெரிந்த வீட்டு வைத்தியம் செய்து குடிக்கக் கொடுத்தாள்.

''இண்டைக்கு நான் ஒருக்கா ஆஸ்பத்திரிக்குப் போட்டுவாறன் தம்பி. குழாயடியில் நின்று தண்ணி எடுத்து வையப்பன். அக்காள் சமைப்பாள்'' என்று கமலா கூற, உடனே ரவி,

''அம்மா எனக்கு உந்தக் குழாயடியில் காவல் நிக்கிற வேலையெல்லாம் சரிப்பட்டு வராது. வேணுமெண்டால் நீங்கள் வந்து எடுங்கோ'' என்று கூறினான்.

''உனக்குத் தெரியும்தானே தம்பி இங்குள்ள ஆஸ்பத்திரியின்ர நிலைமை. வேளையோடு போய் காவல் நின்றாலும் வரப் பின்னேரம் ஆகும்'' என்று கமலா ரவியுடன் கூறிக்கொண்டிருக்கும்போது பெரியார் அவ்விடத்துக்கு வந்தார்,

''குழாயடிக்கு நான் போறன். ஏலாமத்தான் இருக்கு. பையப்பையப் போய்ப் பார்ப்பம். இதுக்குள்ளால எங்களுக்கு எப்பதான் விடிவு வருமோ'' என்று பெரியார் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது பக்கத்திலிருக்கும் துரையர் வந்து,

''என்ன பெரியாரண்ண ஏலாது என்று சொல்லிறியள் அங்க எண்டா ஒரு இடத்தில சும்மா இருக்கமாட்டியள். இப்ப ஏலாது என்று சொன்னா எப்படி அண்ணை''

''சும்மா இருக்க இருக்க கால், கை என்ன செய்யுமடா? எல்லாம் காலம் செய்த கோலம் தமிழராய்ப் பிறந்ததால எங்களைப் போட்டு மிதிக்கிறாங்கள். வாங்கோ அண்ணை நானும் குழாய்க் கிணத்தடிக்குத்தான் போறன். இரண்டுபேரும் போவம்'' என்றார் துரையர்.

ஆஸ்பத்திரியால் வந்த கமலா அப்படியே சிலையாய் கீழே இருந்துவிட்டாள்.

''என்ன நடந்தது அம்மாவுக்கு. இப்பத்தானே ஆஸ்பத்திரியால வந்தவா. அதுக்குள்ளே என்னவாம்'' என்றான் ரவி.

''ஐயோ தம்பி சனம் எல்லாத்துக்கும் அம்மாள் வருத்தமும், செங்கமாரியும். இரண்டு சின்னப் பிள்ளையள் செங்கமாரியால இறந்துபோட்டுதுகள் என்று சொல்லி அந்தப் பிள்ளைகளை வானில கிடத்திக்கிடக்கு. நான் அதைப் பார்த்துட்டன். எனக்கு அழுகை வந்துட்டுதடா. என்ன பாவம் செய்ததுகள் அந்தச் சின்னப் பிஞ்சுகள். ஒழுங்காக சிகிச்சை செய்திருந்தா இந்தப் பிள்ளைகளைக் காப்பாத்தியிருக்கலாம். நாங்களும் அவதானமாக இருக்கவேணும்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது பெரியாரும் தண்ணிக் கானுடன் வந்தார்,

''ஆஸ்பத்திரிக்குப் போய் வாற நேரமும் தண்ணிக்குப் போய் வாற நேரமும் சரியா இருந்தது. பாத்தியே கமலா'' என்றார் நக்கலாக.

''உந்த வெயிலுக்க நின்று வருத்தத்தை எடுக்காதையுங்கே. உந்தச் சனம் எல்லாத்துக்கும் வருத்தமாம்'' என்றாள்.

''அதுக்கென்ன செய்யிறது. வருத்தம் வந்து எங்களுக்கு இஞ்சதான் சாவென்றால் யாரால தடுக்க முடியும்...''

''உந்தச் ஷெல் மழைக்குள்ளால தப்பி வந்து இங்க வந்து சாகிறதே. என்ன உங்கட கதையாக் கிடக்கு'' என்றாள் கமலா.

இப்படியே ஒருநாள் பெரியாருக்கு கடுமையான காய்ச்சல் என்று உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனதும், அங்கே அவரைச் சோதித்துப் பார்த்துவிட்டு, ''இவருக்கு செங்கமாரி காய்ச்சல் கூடிவிட்டுது இவரை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு போறதுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கு'' என்றார் டாக்டர். கமலா உடனே, ''நானும் இவருடன் போகலாம்தானே டாக்டர்'' எனக் கூற,

''இல்லை இவர் மட்டும்தான் போகலாம்'' என்று கூறினார் டாக்டர்.

உடனே பெரியாரை அம்புலன்சில் அனுப்பிவிட்டு வீடு நோக்கிச் சென்றாள் கமலா.

பெரியார் போனது தொடக்கம் நாட்களை எண்ணிக்கொண்டும், கடவுளை வேண்டிக்கொண்டும் இருந்தாள் கமலா.

அன்று ஒரு நாள், வவுனியா வைத்தியசாலையில் இந்த முகவரியைச் சேர்ந்த பெரியார் என்பவர் மரணமடைந்துவிட்டார். அவரை அவருடைய உறவினரை வந்து பொறுப்பேற்கவும் என்று வந்த தகவலைக் கேட்டதும், கமலா இடி விழுந்ததுபோல அவ்விடத்திலே மடங்கிவிழுந்துவிட்டாள். பிள்ளைகளுக்கு நாம் தனித்துப் போனோமே என அது ஒரு ஆறாத துயரமாகவும் இருந்தது. இந்த முகாமில் என்ன கிரியை செய்வது சடங்கு சம்பிரதாயம் எல்லாம் இங்கிருக்கும் எமக்கு வெறும் சாவாகவே போய்விட்டதை எண்ணி மனம் நொந்தவண்ணமே இருக்கிறார்கள்.

---

# ராசி பலன்

08-02-2010 முதல் 14-02-2010 வரை

பொ.சந்திரலிங்கம்




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம்.நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஸ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**கார்த்திகை 2, 3, 4, ரோகினி, மிருகசீரிடம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஸ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும் உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம், நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும் தொழில்துறை முன்னேறும் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்கும்.




**புனர்பூசம், பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர் உதவியை எதிர் பார்ப்பர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும் அதிஸ்ட்டம் இருக்காது தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பாரப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**மகம், பூரம், உத்தரம் 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஸ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.




**உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பண்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**விசாகம் 4, அனுஷம், கேட்டை**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஸ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும் எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.




**மூலம், பூராடம், உத்தராடம் 1**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ள கூடும். பெற்றோர் நலமில்லை. நல்ல வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிய ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்ட்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை தந்தை நலம். நல்ல வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஸ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறைமுன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாகுறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். அதிஸ்ட்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**புரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்ட்டம் இருக்காது. தெய்வக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.

# யாழ் நகரில் HSBC

பொது சன நூலகம்
தகவல் துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

முப்பது வருட கால உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் யாழ். குடாநாட்டில் பல்வேறு வர்த்தக நடவடிக்கைகள் வேகமாக விருத்திபெற ஆரம்பித்திருக்கின்றன. அந்த வர்த்தகப் பாய்ச்சலில் - புத்தெழுச்சியில் - தன்னையும் இணைத்துக்கொள்ள சர்வதேச முதல் தர வங்கியான HSBC யும் தவறவில்லை.

குடாநாட்டின் வர்த்தக, வியாபார அபிவிருத்தியில் தன்னையும் ஒரு பங்காளியாக்கும் நோக்குடன் HSBC வங்கி தனது புதிய கிளை ஒன்றை யாழ். நகரின் மத்தியில் எதிர்வரும் 11ஆம் திகதி கோலாகலமாகத் திறந்து வைக்கின்றது. புதிய கிளை 145, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கவிருக்கின்றது.

யாழ். மக்களுக்கான இந்த நற்செய்தி பற்றிய தகவல்களை HSBC யின் கொழும்புத் தலைமையகத்தின் நிதிச் சேவைகள் பொறுப்பாளர் சரீட் விஜேக்கோன் பகிர்ந்துகொண்டார். முதலில் புதிய வங்கிக் கிளையின் பணியாளர்கள் பற்றிக் கேட்டோம்.

"பணியளர்களில் அறுபது வீதத்தினர் உள்ளூரிலிருந்தே - யாழ்ப்பாணத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஏனையோர் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். எனினும், யாழ். குடாநாட்டு மக்களுடன் நெருங்கித் தொடர்பாடல்களை மேற்கொள்ளக் கூடியவர்களாக - தமிழில் நன்கு தேர்ச்சியும் பரிச்சயமும் பெற்றவர்களாக - இருப்பர். எப்படியாயினும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் யாழ்ப்பாணத்துடன் ஏதோ ஒரு வகையில் நெருக்கமும் தொடர்பும் இருப்பதன் அடிப்படையிலேயே வங்கி அவர்களைத் தேர்வு செய்து அங்கு பணிக்கு அமர்த்துகின்றது. புதிய கிளையாக இது அமைவதால் கொழும்பில் இருந்தும் சில பணியாளர்கள் யாழ். கிளையில் சேவையாற்றுவர். அவர்கள் அனைவரும் மும்மொழியிலும் தொடர்பாடல் மேற்கொள்ளும் தகைமை உடையவர்களாக இருப்பர். இந்த கிளை தமக்காக, தமது சமூகத்தின் அங்கத்தவர்களின் சேவையில் இயங்குவது என்ற உணர்வு யாழ். மக்களுக்கு ஏற்படத்தக்க வகையில் அதன் பங்குபணி அமையும். என்றார்.

ஆரம்பத்தில் இந்த வங்கி திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை மக்கள் சேவைக்குத் திறந்திருக்கும். எனினும் மக்களின் தேவைக்கேற்ப சனிக்கிழமைகளில் திறப்பது பற்றியும் பின்னர் அதனை மேலும் விஸ்தரிப்பது குறித்தும் சிந்திக்கப்படும் என்று அவர் தகவல் வெளியிட்டார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள HSBC வங்கிகளில் உள்ள அனைத்து சேவைகளும் யாழ். வங்கிக் கிளையிலும் இருக்கும். அந்தக் கிளையும் நாட்டில் உள்ள அனைத்து HSBC கிளைகளுடனான கணினி வலையமைப்பில் இணைத்துக் கொள்ளப்படுவதால் எந்தப் பிற கிளைகளுக்கும் தரம் குன்றியதாக யாழ். கிளை அமையாது. - என்று உறுதிபட அவர் தெரிவித்தார்.

HSBC உலகளாவிய வங்கி. 86 நாடுகளில் அது இயங்கி வருகிறது. அதனால் HSBC யின் உலகளாவிய வசதிகள் மூலம் பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ளலாம். தமது புலம் பெயர்ந்த உறவுகளுடன் மிக நெருக்கமான நிதித் தொடர்பாடல்களைக் கொண்டிருக்கும் யாழ். மக்களுக்கு உலகின் மூலை முடுக்கெங்கும் தனது வங்கிக் கிளைகளைக் கொண்டிருக்கும் HSBC யாழ்ப்பாணத்திலும் ஒரு கிளையைத் திறப்பது உண்மையில் மிகமிக சௌகரியம் தரும் வசதியாக அமையும் என்பதில் எமக்கு எள்ளளவும் சந்தேகமில்லை." என்று அவர் உறுதிபடக் கூறினார்.

உலகின் மூலை முடுக்கெங்கும் பயன்படுத்தக்கூடிய கடன் அட்டை (Credit Card) வழங்கும் சேவை, இருபத்தினான்கு மணி நேரமும் பணப் பரிமாற்றத்துக்கான 'தானியங்கி பணக் கொடுப்பனவு இயந்திர'(ATM) சேவை போன்றவை இக்கிளைத்திறப்பின் மூலம் யாழ். குடாநாட்டு மக்களுக்கும் விஸ்தரிக்கப்படுகின்றமை மற்றொரு முக்கிய அம்சம். இந்தச் சேவைகளினால் குடாநாட்டு வாடிக்கையாளர்கள் இதன் பயனைக் குடாநாட்டில் மட்டுமல்லாமல் குடாநாட்டுக்கு வெளியே உலகின் எந்தப் பாகத்தில் தாம் இருக்கும்போதும் - எச்சமயத்திலும் - பெறமுடியும் என்பதை பெருமையுடன் சுட்டிக்காட்டினார் அவர்.

சரி ஐயா! இலங்கையில் மோதல் - யுத்தம் - முடிந்த நிலையில் வர்த்தக, வியாபார, யுகம் தனது பார்வையைக் குடாநாட்டுப் பக்கம் திருப்பியிருக்கின்ற நிலையில் வங்கிகள் பலவும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் புதிய கிளைகளை யாழ்ப்பாணத்தில் விழுந்தடித்தபடி திறக்கின்றன. வங்கிக் கிளைப் படையெடுப்பு ஒன்றே அங்கு முழு அளவில் நடப்பது போன்ற பிரேமை ஏற்பட்டுள்ளது. வாரத்துக்குப் புதிதாக இரு வங்கிக் கிளைகள் திறக்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை மத்திய வங்கி ஆளுநர் நிவ்ரால்ட் கப்ராலே ஒப்புக்கொண்டிருக்கின்றார். குடாநாட்டு மக்கள் சேமிப்பில் அதிக ஈடுபாடும், சிரத்தையும், கவனமும்



சரீட் விஜேக்கோன்

உள்ளவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். போதாக்குறைக்குப் புலம் பெயர்ந்த தேசங்களில் உள்ள அவர்களது உறவுகள் மூலம் பெரும் தொகை நிதி அவர்களுக்குக் கிட்டி வருகின்றது. இவற்றைக் கவருவதற்கே வங்கிகள் போட்டி போடுகின்றன என்ற சந்தேகம் அவர்களுக்கு உள்ளது. அதுவே அவர்களது கடந்த காலப் பட்டறிவாகவும் உள்ளது. இந்த வங்கிகள் தமது பிரதேசத்துக்கு என்ன அபிவிருத்தியைச் செய்யப்போகின்றன, யாழ். மக்களின் வைப்பீட்டுப் பணத்தைக் கொண்டு அங்கேயே தொழில் முயற்சிகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளும் திட்டங்களுக்கு இந்த வங்கிகள் உதவுமா?" - என வினாத் தொடுத்தோம். யாழ். குடாநாட்டு அபிவிருத்திக்கு முதலில் நாம் எமது வாடிக்கையாளருக்கு உலகளாவிய ரீதியில் பணப் பரிமாற்றம் செய்யும் ஒரு வங்கியுடன் தொடர்பை ஏற்படுத்துவது முக்கியம். அத்தோடு யாழில் எமது வங்கிக்கிளை அமைவது சர்வதேசத்துக்கு ஒரு நல்ல சமிஞ்ஞை காட்டுவதாக அமையும். இதனால் மேலும் பல உலக நாடுகளும் யாழில் முதலீடு செய்ய முனையும் சூழல் உருவாகும். யாழில் எங்களது நேரடி முதலீடு பற்றி நாம் பரிசீலித்து வருகிறோம். எமது கிளை அங்கு அமைந்த பின்னர் மேலதிக முடிவுகள் எடுக்கப்படும் என்று அவர் பதிலளித்தார்.

"குடாநாட்டில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவி, அபிவிருத்தித் திட்டங்களில் பங்குதாரர்களாகி, நல்ல வங்கிச் சேவையை வழங்குவதில் மட்டுமல்ல, குடாநாட்டின் பல்வேறு பொதுநல உதவி நடவடிக்கைகளிலும் நாமே நேரடியாக ஈடுபடவிருக்கிறோம்" என்று கூறிய அவர், அவை பற்றிய விடயங்களை உதாரணங்களுடன் விவரித்தார்.

"நாங்கள் யாழ். நூலகத்துடன் நெருங்கிய உறவை வைத்திருக்கிறோம். அதை மேலும் பலப்படுத்தும் விதத்தில் உதவி நடவடிக்கைகளை விஸ்தரிக்கவுள்ளோம்.

"யாழ். மாணவர் நலன் கருதி இலங்கை சர்வோதய இயக்கத்தின் மூலமும், உலகின் முன்னணி கணினி நிறுவனமான 'மைக்றோ சொவ்ட்' மூலமாகவும் யாழ். மாணவர்களுக்கு அத்துறைகளில் பல புலமைப் பரிசில் திட்டங்களை வழங்கவிருக்கிறோம்" - எனத் தனது உத்தேசங்களை அடுக்கத் தொடங்கினார்

HSBC நிறுவனம் சர்வதேச ரீதியில் மிகவும் மதிப்பார்ந்த வங்கிக் கட்டமைப்பு. அது தனது கிளையை யாழ். நகரில் திறப்பது யாழ். நகரம் தொடர்பில் சர்வ தேச சமூகத்துக்குப் புதிய நம்பிக்கை யையும், வர்த்தக தொடர்பாடல் வாய்ப்பு வசதிகளையும் அளிக்கும் என்பது உறுதி அதனால் இத்தகைய புகழ்ார்ந்த கட்டமைப்புகளின் பார்வை குடாநாட்டின் மீது விழுவது குடாநாட் டின் புத்தெழுச்சிக்கு புதிய ஊக்கத்தைத் தரும் என்ற நம்பிக்கையும், உணர்வும் மேலிட அவருட னான சந்திப்பை முடித்துப் புறப்பட்டோம்.

****

## உங்களுக்குத் தெரியுமா...?

வெள்ளைப்பூண்டின் மகத்துவம் மிக்க மருத்துவ குணங்கள் இவை :

* வெள்ளைப்பூண்டை உணவில் அதிகம் சேர்ப்பவர்களுக்கு மலேரியா நோய் வராது.

* பூண்டை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உடலில் தேவையற்று சேரும் கொழுப்பு குறையும்.

* உடல் கொழுப்பன் அளவை கட்டுப்பாட்டுக்குள் இருக்க, தினமும் காலையில் 4 வெள்ளைப்பூண்டுத் துண்டுகளை சாப்படுவது நல்லது.

* வலிப்பு வருகிற குழந்தைகளுக்கும், இருமல், சளி தொந்தரவு இருப்பவர்களுக்கும் பூண்டு சாறு கொடுத்துவர மெல்ல மெல்ல குணம் பெறலாம்.

* இரைப்பு, இருமல், வயிற்றில் பூச்சி இருப்பவர்களுக்கு பூண்டு சாறுகளை சில துளிகள் உள்ளுக்குள் சாப்பிட கொடுக்க எளிதில் குணம் கிடைக்கும்.

* டான்ஸில் என்கிற உள் நாக்கு வளர்ந்திருப்பவர்கள், அந்த வளர்ந்த உள்நாக்கு சதை வளர்ச்சியின் மீது பூண்டுசாறினை தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.



பூண்டை பாலில் வேக வைத்து சாப்பிட உடல் கொழுப்பு குறையும். ரத்தக்கொதிப்பு, மனஅழுத்தம் போன்ற பாதிப்பு உள்ளவர்களுக்கு பூண்டு நல்ல மருந்து.

* பூண்டில் பலவித சத்துக்கள் இருந்தாலும் அதிகமாக இருப்பது கால்சியம்தான். எனவே பூண்டை அதிகமாக சமையலில் பயன்படுத்துவதன் மூலமாக நாம் நமது எலும்பற்கு வருகின்ற பாதிப்புகளில் இருந்து தப்பத்துக் கொள்ளலாம்.

SONDERVERKAUF!!

Möbel Ferrari
Kleine Preise

1290.-
statt 1650.-





Polstergruppe Sigfried
inkl. Bettsofa
Textil-leder rot

590.-
statt 1650.-



Schlafzimmer Claudia,
Nussbaum/alpinweiss

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40
Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit
- 6 Monate ohne Zins